வாரப் பதிப்புவிலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 புரட்டாதி திங்கள் 20-ம் நாள் (6—10—1963) ஞாயிற்றுக்கிழமை ஐமா. அவ் 17 | இதழ் 19

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது!

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# பாத யாத்திரைக்கு மக்களின் பேராதரவு

## அடுத்த நடவடிக்கைக்கு ஆதரவு பெருகிறது


(நமது விசேட நிருபர்)

யாழ்ப்பாணம், அக். 3

தமிழரசுக் கட்சி ஆரம்பித்திருக்கும் பாத யாத்திரைக்கு யாழ்ப்பாண மாவட்ட மெங்கனும் உற்சாகமான வரவேற்புக் கிடைத்துவருகிறது. உரிமைப் போரின் அடுத்த கட்டத்துக்காக மக்களைத் தயார் செய்யும் முதற்படியான இந்த யாத்திரை மிகுந்த வெற்றியை அளித்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

அண்ணல் காந்திஜி அவதரித்த தினத்தில், புனிதத் தலமான கீரிமலையில் பாத யாத்திரை ஆரம்பமானது. தினசரி பொதுக் கூட்டங்களும் பிரமாண்டமான முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)



கடந்த வாரம் யாழ்ப்பாணம் முற்றவெளிமைதானத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாபெரும் பகிஷ்கரிப்பு இயக்கப் பிரசாரக் கூட்டத்தில் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம், தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், நாடு நாடு எங்கணும் இருந்து திரண்டு வந்த மாதர்கள், சிறார்கள் ஆகியோரில் ஒருபகுதியினரையும் காணக. [செய்தி ஆறும் பக்கம்]

யாழ்ப்பாணத்திலுள்ள

## தமிழ் ஊழியரனைவரையும் அகற்ற அரசாங்க அதிபர் முயற்சி

### சிங்களத்தைப் படித்தாலும் செயற் திறமை கிடையாதாம்

தமிழ் அரசாங்க ஊழியர் எவ்வளவுதான் சிங்களம் படித்தாலும் அவர்களுக்கு சிங்களத்தில் கடமைபார்க்க முடியாது. அவர்கள் எல்லோரையும் சிங்களப் பிரதேசங்களுக்கு அனுப்பிவிட்டு, சிங்கள ஊழியர்களையே யாழ்ப்பாணத்தில் வைத்திருக்க யாழ். புதிய அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீர திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணக் கச்சேரியில் மட்டுமல்லாமல், யாழ்ப்பாணமாவட்ட முழுவதுமே சிங்களத்தைத் தீவிரமாக அமுல் நடத்துவதேதான் யாழ்ப்பாணம் சென்றுள்ளதாக, யாழ்ப்பாணம் கச்சேரியில் வைத்து புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபரான திரு. நெவில் ஜெயவீர பிரதிக்ஞை எடுத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

தமிழ் மொழியை ஒழுங்கு கற்ற தமக்கே தமிழில் எழுதவோ, சரியாகப் பேசவோ முடியாதிருக்கும் போது, சிறிதளவு சிங்களம் கற்ற தமிழர்களால் எவ்வகையில் சிங்களத்தில் காரியம் பார்க்க முடியும்? யாழ்ப்பாணத்தில் சிங்களத்தை அமுல் நடாத்துவதனால் சிங்கள ஊழியர்களே தகுதியானவர்கள். ஆகவே இங்குள்ள தமிழ் ஊழியர்கள் அனைவரையும் சிங்களப் பிரதேசங்களுக்கு அனுப்பிவிட்டு, சிங்கள ஊழியர்களையே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்குப்படி அரசாங்கத்தை திரு. நெவில் ஜெயவீர கேட்டுக் கொண்

(9-ம் பக்கம் பார்க்க)



திரு. எஸ். எம். மாணிக்கராசா

திருமலைத் தொகுதி

## தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. மாணிக்கராசா

திரு. இராஜவரோதயத்தின் மறைவினால் காலியான திருகோணமலைத் தொகுதி இடைத் தேர்தலுக்கு, திருமலை நகராண்மைக் கழக முன்னாள் தலைவர்களில் ஒருவரான திரு எஸ். எம். மாணிக்கராசா அவர்களைக் கட்சி வேட்பாளராக நிறுத்துவதென்று இலங்கைத் தமிழரசுக் கட்சி முடிவு செய்துள்ளது.

திரு. மாணிக்கராசா கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர். 52-ம், 56-ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் போது அமரர் இராஜவரோதயம் அவர்களுக்கு வலக்கரம் போல் இருந்து உதவியவர் இவர். சிறந்த வழக்குரைஞரான இவர் 1945-ம் ஆண்டு முதல் 1951-ம் ஆண்டு வரை திருமலை நகராண்மைக் கழகத்தின் தலைவராகக் கடமையாற்றியுள்ளார்.

திரு. மாணிக்கராசா அவர்கள் இளைஞராக உள்ள காலத்திலேயே அரசியலில் ஈடுபாடுடையவராவர். இவரின் தந்தை திரு. எம். சுப்பிரமணியம் முன்னாள் சட்ட சபை உறுப்பினராவர்.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

றோஸ் பிராண்ட், சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'றோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

## அறப்போர் முரசொலி அதிர்கிறது! களம் விரைவீர்!

# சங்கப் பலகை

## வாழ்வு

ஆசிரியர்: நாவேந்தன், வெளியீடு: தமிழ்க் குரல் பதிப்பகம், ஏழாலை வடக்கு, சுன்னாகம்; விலை: ரூபா. 2-50.

நாம் தினம் தினம் பல சிறுகதைகளைப் படிக்கிறோம், படித்து முடித்த பின்னர் அக் கதைகளைப் பற்றியோ-அல்லது அவற்றின் ஆசிரியர்களைப் பற்றியோ நாம் சிந்திப்பது கிடையாது. அவர்கள் யாராயிருந்தாலும் நமக்கு என்ன என்ற நிலை. ஆனால், வேறு சில சிறுகதைகளைப் படித்து முடித்த பிறகு, அவற்றைப் பற்றி எண்ணுகிறோம்; விபரிக்க முடியாத உணர்ச்சிகளைப் பெறுகிறோம். அச் சிறுகதைகளில் வரும் பாத்திரங்களை உள்ளம் அசைபோடுகிறது. எனவே அதன் ஆசிரியரைப் பற்றி அறிய விரும்புகிறோம்-அவரின் அனுபவங்களைத் தெரிந்து கொள்ள விழைகிறோம். இத்தனையும் அத்தகைய சிறு கதைகள் தந்த இலக்கிய இன்பமேயாகும். இத்தகைய சிறு கதைகள் உயர்ந்த கதைகளாக-சிறந்த கதைகளாக-கால வெள்ளத்தினுல் பாதிக்க முடியாத கதைகளாக வாழவல்லன என்று நிச்சயமாகக் கூற முடியும்.

இத்தகைய சிறுகதைகள் நூல் வடிவில் உயர்ந்த முறையில் பதிப்பிக்கப் பெற்று வருகின்றன என்றால் நுகர்பவர்கள் பாக்கியசாலிகளேதான்.

தமிழ் இலக்கிய உலகிற்கு சிறந்த சிறுகதைகளை அவ்வப்போது கொடுத்து வருபவர் திரு. நாவேந்தன் அவர்கள். வாசகர் உலகில் அவருக்குத் தனியிடமுண்டு. காரணம், அவரின் சிறுகதைகளில் சாதாரணமாக எளிய நிலையில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை முதல், அன்றாடப் பிரச்சினைகள் வரை உள்ள சம்பவங்களை இலக்கிய ரசனை சொட்ட, மொழித் தூய்மை குன்றாத முறையில் எடுத்துக் கூறுவதேயாகும்.

இவற்றைப் பத்திரிகையில் படிக்கும் போது 'யார் இந்த நாவேந்தன்'? என்ற கேள்வி இயற்கையாகவே வாசகர் மத்தியில் எழுவது உண்டு. இக் கதைகளை எங்ஙனம் பாதுகாத்து வைப்பது என்று எண்ணியவர்களும் உண்டு.

இவர்களுக்கெல்லாம் சற்று ஆறுதல் அளிக்கும் முறையில் வெளிவந்துள்ளது 'வாழ்வு' சிறுகதைத் தொகுப்பு. இதில், அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியான பதினைந்து சிறு கதைகள் அடங்கியுள்ளன.

நாம் வாழ்க்கையில் சந்திக்கும் மனிதர்களைப் பரவலாகப் பார்க்க முடிகிறது. கதைகளுக்குரிய கருவூலங்களை நாமும் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறோம் என்ற உணர்ச்சி அவற்றைப் படிக்கும் பொழுது உதயமாகிறது.

'உள்ளத்தை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை' என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப, வாழ்க்கையில் கண்டு கேட்ட சம்பவங்களை உணர்ந்தவாறு உணர்த்தியிருக்கிறார் ஆசிரியர்.

எனவே இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதைகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். எழுத்தாளர் கனிமொழியார், தான் காதலித்த சரசா குடிகாரனும், ஊதாரியுமான இராசனை மண முடித்ததும், அவளைச் 'சகோதரி' யாக ஏற்றுக் கொள்கிறார். கனிமொழியார் மூலம் சரசாவின் துன்பம் நிறைந்த வாழ்க்கையை எடுத்துக் காட்டியுள்ளார்.

### தென்னவன் பிரமராயன்

அடுத்த இதழில் தேவன்—யாழ்ப்பாணம் எழுதிய 'தென்னவன் பிரமராயன்' என்னும் நாடக நூலை சங்கப் பலகையில் ஏற்றி ஆராயும் பொறுப்பை 'ஆழியான்' ஏற்றுள்ளார்.

கதையின் சம்பவங்கள் நாம் கண்டு கேட்டவையாக இருந்த போதிலும் கதையை வழங்கிய உத்தி போற்றக்கூடியதேயாகும்.

தமிழ் வாசகர்களுக்கு 'அகலிகை' நன்கு தெரிந்தவள்தான் என்ற போதிலும் ஆசிரியரின் இலக்கியப் புலமைக்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

வெள்ளை உள்ளம் படைத்த கந்தனின் 'நம்பிக்கை' அவனுக்கே வினையாக முடிந்தது. கதையின் முடிவில் கையாண்டுள்ள முறை புதியது.

இன்றைய நாகரிக உலகில் ஆயிரம் சுவர்ணுக்களைக் காண்கிறோம். அவர்களில் ஒருத்திதான் 'துறவியின் காதலி'யும். ஆனால் ஆறுமுக வாத்தியார் சாதாரணமாக நெஞ்சை விட்டு அகலக் கூடிய ஒருவர் அல்ல.

ஏழைகளுக்குப் பகல் துன்பமா? இரவு துன்பமா? பதில் தருபவர் யார்?

(15-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரன் பேச்சுப் போட்டி

## கொழும்பு மாவட்ட இடையிறுதி தேர்வு முடிவுகள்

கொழும்பு மாவட்டத்திற்கான சுதந்திரன் பேச்சுப் போட்டியின் இடையிறுதித் தேர்வு சென்ற 29-9-63 ல் கொழும்பு விவேகாநந்த சபை மண்டபத்தில் திரு. ஆ. தேவராசன் தலைமையில் நடைபெற்றது. நடுவர்களின் முடிவிற்கு இசையப் பின்வருவோர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

### முதற் பரிசு

ரே. வே. சத்தியராஜ், 178, சிறீ குணனந்த மாவத்தை, கொழும்பு-13. பாடசாலை: புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு-13.

விடயம்: 'நமது பொருளாதாரம் உயர''

### இரண்டாம் பரிசு

அ. பத்மநாதன், 116—1/2 சிறுல வீதி, நாரகென்பிட்டி. பாடசாலை: சென். மத்தியூஸ் கல்லூரி, தெமட்டகொடை.

விடயம்: "தமிழ் மொழி வாழ்வும் வளமும்"

### மூன்றும் பரிசு

ஞா. பவுல் அந்தோனி, 44/1 வேலுவனு வீதி, கொழும்பு-9, பாடசாலை: தெமட்டகொடை அரசினர் தமிழ் வித்தியாலயம், கொழும்பு-9.

விடயம்; "இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை"

பின்வருபவர்கள் பாராட்டுக்குரியவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

அ. எட்வார்ட், 74/23 விவேகானந்த மேடு, கொழும்பு. பாடசாலை: கேரி கல்லூரி, கொழும்பு.

விடயம்: "இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை"

க. தங்கேஸ்வரி, அர்ச். மரிய நாயகி பாடசாலை, மத்துகம.

விடயம்: "நமது பொருளாதாரம் உயர"

அந்தனி ஜீவா, 21/6 எட். மண்டன் வீதி, கிரிலப்பனை, கொழும்பு-6.

விடயம்: "இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை'

இரா. மருதமுத்து. யட்டதொல தோட்டம், மத்துகம, பாடசாலை: புனித மரிய நாயகி கல்லூரி, மத்துகம.

விடயம்: "தமிழ் மொழி வாழ்வும் வளமும்"

வி. செல்வராஜ், 275, டாம் வீதி, கொழும்பு 12, பாடசாலை: அர்ச். புவானியார் கல்லூரி, கொட்டாஞ்சேனை.

விடயம்: "தமிழ் மொழி வாழ்வும் வளமும்"




# ரிஷி

## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00

விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:

T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.


# கவிதைப் பூங்கா

## "சேமமுற வேண்டுமெனில்...."

—"அல்லையூர் நம்பி"—

"நாமறிந்த மனிதரிலே தமிழரைப்போல்
விண்ணர்களை எங்கும் காணோம்!
சேமமுற வேண்டுமெனில் சிங்களமும்
நிரைமறைவிற் சிறக்கக் கற்று
'தேமதுரத் தமிழெ'ன்று வெளியிலொரு
நாள்வந்து முழங்கித் திர்ப்பார்!
பூமிதனில் யாரிதுபோற் புதுவழியில்
மொழிவளர்ப்பார் புகல்வீர்" என்று

உலகத்தார் உனதினத்தின் 'புகழதனைத்'
தினம்சொல்ல, உணர்ந்தும் இன்னும்
நலிவகன்றுத் தமிழினம் நானிலத்திற்
சேமமுற, நாட்டாய் ஒன்றும்!
பலவயதுப் பண்டிதரென் பாவிலுறு
சொற்களுக்கு வயதைப் பார்ப்பார்!
சிலவயதுத் தமிழிளைஞா, நீயேனும்
என்கருத்தைச், சிரமேற் கொள்வாய்.

ஏ,தமிழ மகனே! உன் எதிர்கால
நிலைமையினை எண்ணிப் பாராய்!
பூமிதனில் நிமகனாய்ப் பிறந்ததற்குச்
சிறந்தவொரு பொருள்தானுண்டோ
சேமமுற வேண்டுமெனிற் செய்வறுகேள்
எனமுழங்கல் 'அமுதலிங்க
நாமத்தோர்' இருக்கையிலே நமக்கெதற்காம்
அடிவாங்க உடலும் இல்லை'

'செக்கன்சோ' பார்ப்பதற்கும் சிகரெட்டுக்
குடிப்பதற்கும், சிரமம் இன்றிச்
சைக்கிளிலே 'சுழட்டு'தற்கும் சந்திகளில்
வந்தவற்றைச் சரிபார்த்தற்கும்
பைக்குள்ளே குறையாது பணமென்றும்
இருப்பதற்கும் பாதை உண்டேல்
சக்கரைதான் வாழ்க்கை' எனத் தமிழிளைஞா
நீயுரைத்தல் தகுதி இல்லை.

'பாரதிக்குப் பின்வந்த பாவலரில்
நீயொருவன்' என்றாய்; நன்றி!
யாரதுபோல் துணிந்துரைப்பார்' 'செந்தமிழும்
ஆங்கிலமும்' சேர்ந்த கல்விக்
காரருனைக் கண்டிப்பார்; கலங்காதே
நாமிளைஞர் கைகாலுண்டு!
சேரமயிர் கறுக்கட்டும் சிறுமீசை!
நாளைக்குச் செய்வோம் அதை.

"பகிடியொடு பகிடியாய் நீதரும் பாடலில்
பயன்நிறைய வேண்டுமென்றால்,
பகரடா இவை"எனப் பாரதிப் புலவனும்
பலவுண்மை சொல்லிவிட்டான்.

தகுதி மிகு தலைவரை அவரரிய பணிகளைத்
தமிழிலே நன்குபாடு.
தருகின்ற தந்தியா அஞ்சலா எஞ்சாது
தமிழிலே முழுதும் எழுது.

பகைமையவர் யாரடா தமிழுக்கெனத்தேடிப்
பாய்ந்தவரின் பற்பிடுங்கு.
பதவிபெற நம்மிடை படமெடுத் தாடுகிற
பாம்புகளை நாம்விடுவதா?

குகைதவிற் கிடவாது புலிகளும் மகனுருக்
கொண்டெமைக் கொல்லவரலாம்
குறியிட்டபத்தராய்க் கோயிலின் மூப்பராய்
குறுநரிகள் லாவிவரலாம்!

அங்கிங்கெனுதபடி எங்குமே இருக்கிறன்
ஆண்டவன் என்று சொல்லி
அதுசொன்ன வாயுடன் 'அரையின்னும்
ஊற்றுவாய்
அப்பனே' என்று சொல்லும்

சங்கதிக் காரரை எங்குநீ காணிலும்
சங்கார மூர்த்தியாகு!
சந்தியில் நிற்பதுஞ் சிந்தனைத் தம்பியோ
சரியில்லை வீட்டையோடு!

அங்கென்ன இங்கென்ன ஆர்தேர்தல் கேட்டாலும்
அனைவர்க்கும் ஆமாப்போடும்
அண்ணரை—விண்ணரைக் கல்லாலும்
சொல்லாலும்
அடித்துக் கலைத்தோட்டுவாய்.

இங்குநான் சொன்னதில் எதையேனும் ஒன்றினை
என்றும்நீ செய்துவந்தால்
ஈழமுறு தமிழினம் வாழுமே சேமமாய்
என்றென்றும்; தம்பி, வணக்கம்.

எஸ். செல்வநாதன்,
ஏறாவூர், கி. மா.

கே: வட, கிழக்கு மாகாணங்களில் "சிங்கள பகிஷ்கார" இயக்கம் தொடங்குவதால், சிங்கள பகுதிகளில் வசிக்கும் தமிழ், ஊழியர், வர்த்தகர் மக்களின் நிலை யென்ன?

ப: தமிழ் மக்கள் சிங்கள வகுப்புவாதிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள என்றும் தயாராகத்தான் இருக்க வேண்டும். தமிழன் மூச்சு விடுவதால் சிங்களவருக்கு கோபம்வரும் என்று கூறினல். அதற்காகத் தமிழன் மூச்சுவிடாமல் இருக்க முடியுமா, என்ன?

கே: பணம், பட்டம், பதவிக்காக, தம் இனத்தையே மாற்றானுக்கு காட்டிக் கொடுப்பவர்களை எப்படித் திருத்துவது?

ப: அவர்களைப் பகிஷ்கரியுங்கள்.

ஆர். துரைராஜி, மஸ்கெலியா.

கே: அட்டனில் இ. தொ. கா. நடத்திய மகாநாட்டில் மலைநாட்டு மக்கள் சிலர் சிங்களத்தில் கோஷங்கள் பொறிக்கப் பட்ட அட்டைகளைக் கையிலேந்தி ஊர்வலம் வந்தார்களே! ஏன்?

ப: தோட்டத் தொழிலாளர்கள் தாய் மொழிக்குச் சமாதி கட்டிவிட்டு, தனிச் சிங்களத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்ட காங்கிரஸ்காரர்கள் நடித்த நாடகம் இது.

ஆ. வெள்ளையம்மா,
ரீவின்டன் தோட்டம்.

கே: காங்கிரஸ் செய்திகளைப் பக்கம் பக்கமாக பொய்யும் புரட்டும் சேர்த்து வெளியிட்டு வரும் ஒரு பத்திரிகை இ. தொ. க. செய்திகளை மட்டும் தெரிந்து இருட்டடிப்புச் செய்து வருவதன் மர்மம் என்ன?

ப: காங்கிரஸ்களைப் பத்திரிகையாளர்கள் நோக்கில் விசுவாசமும் வழக்கும் இ. தொ. கழகத்திடம் கிடையாததால்;

கே: தி. மு. க. வை ஆதரிக்கும் ராஜாஜி அதன் உயிர் மூச்சான "திராவிட நாட்டுப் பிரிவினை" இலட்சியத்தை இன்னும் ஆதரிக்காதது ஏனோ?

ப: அதை ஆதரித்தால் அவருக்குச் சுதந்திரக் கட்சியில் என்ன வேலை? தி. மு. க. வில் அல்லவா சேர்ந்துவிடுவார்?

கே: தமிழ் நாட்டின் முதன் மந்திரிப் பதவியிலிருந்து காமராஜர் ராஜிநாமா செய்வது தி. மு. க. வை அழித்து ஒழிக்கத்தானோ? அது முடியுமா?

ப: முடியாது. திரு. பக்தவத்சலம் முதன் மந்திரியாகிவிட்டால், தி. மு. க. வின் வளர்ச்சியை காமராஜரின் ராஜிநாமாவால் இனித் தடுத்து நிறுத்த முடியாது.

கே: அரசாங்கம் மீண்டும் தி. மு. க. வைத் தடை செய்யுமா?

ப: தடை செய்யாதென்றே தெரிகிறது. ஆனல் "நாம் தமிழர் இயக்கத்தை" —அப்படி ஓர் இயக்கம் இலங்கையில் இல்லாவிட்டாலும் கூட—தடை செய்யக் கூடும்.

ஈ. பொன்னுத்துரை,
ஈறத் பெரிய குளம்.

கே: தூத்துக்குடி துறைமுகம் கட்டி முடிந்தால் கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்கள் குறையுமா?

ப: நிச்சயமாகக் குறையும், சேது சமுத்திரத் திட்டம் பூர்த்தியானல் மேலும் குறையும்.

செல்வி ஆர். எஸ். மாரியாய்,
எலிப்டன்.

கே: 'சுதந்திர'னில் சினிமா விளம்பரங்களையும் சினிமா விளம்பரம் முதலியவற்றையும் விடுத்து தாய் நாட்டு விடுதலை வீரர்களின் அரசியல் பேச்சுக்களைப் பிரசுரித்தால் என்ன?




ப: உங்கள் கருத்தை நானும் ஆமோதிக்கிறேன். சுதந்திரனுக்குப் பணத்தின் துணை தேவையல்லவா? அந்தப் பணத்தையல்லவா கொடுத்துத் தொலைக்கிறார்கள் இந்த விளம்பரதாரர்கள்!

நுணுவைச் செல்வம்,
மாதகல் மேற்கு,

கே: இலங்கையில் தமிழினத்தை அடிமைப்படுத்தி பதவிகளைப் பெற வேண்டும் என்ற எண்ணமுடைய எட்டப்பர்கள் இருக்கும் வரையும் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் விமோசனம் கிடைக்கவே கிடைக்காது என்கிறான் எனது நண்பன்.

ப: எத்தனையோ நாடுகளில் உரிமைப் போராட்டங்களிலே எட்டப்பர்கள் ஐந்தாம் படை வேலைகளைச் செய்துள்ளனர். ஆனல் மக்கள் எழுச்சி பெற்றுல் அவர்கள் படுகூரணமாகிவிடுவர். மக்களின் கோபத்துக்குப் பயந்து அவர்கள் ஏற்கனவே சந்து பொந்துகளில் பதுங்கத் தொடங்கிவிட்டனர்.

வே. தம்பிரான் சகோதரர்கள்,
மஸ்கெலியா.

கே: அட்டனில் நடைபெற்ற இ. தொ. கா மகாநாட்டின் நோக்கம் என்ன?

ப: மகாநாட்டு நடவடிக்கைகளே தெளிவாக எடுத்துக்காட்டின, சிங்கள அரசாங்கத்துக்குத் தோட்டத் தொழிலாளரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதே நோக்கம் என்பதை.

மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு,

கே: தந்தை செல்வநாயகம் தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: கிராமம் கிராமமாகப் பாதயாத்திரை செல்கிறார்.

எஸ். எஸ். மிக்கேல்,
முல்லைத்தீவு.

கே: பெண்களுடன் ஆண்கள் கொஞ்சம் நெருங்கிப் பழகினால் போதும், சிலர் சந்தேகம் கொள்கிறார்களே! காரணம் என்ன?

ப: பஞ்சும் தீயும் நெருங்கினல் எங்கே நெருப்பு பற்றி விடுமோ என்ற பீதிதான் காரணம்.

துவான் சாதிக்கின் கனி,
கொழும்பு-12,

கே: உங்களுக்கு ஜோசியம் தெரிந்தால் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் சமஷ்டி அரசாங்கம் எப்பொழுது உதயமாகும் என்று கூறுங்கள்.

ப: செல்வநாயகத்தின் சமஷ்டி அரசாங்கமல்ல—தமிழ் பேசும் மக்களின் சமஷ்டி அரசாங்கம் என்று கூறுங்கள். நீங்கள் உரிமைக்காக என்று தியாக நெருப்பாற்றிலே குதித்து நீந்துகிறீர்களோ அன்று உதயமாகும் என்பது என் ஆருடம்.

சி. சுப்பிரமணியம்,
தெல்லிப்பழை.

கே: சில பெண்கள் ஆண்கள் மீசை வைத்திருப்பதை விரும்புகிறார்கள்; சிலர் வெறுக்கிறார்கள். ஏன்?

ப: மீசையில் எத்தனையோ இனுசுகள் உண்டு. சினிமா (பாலையா) மீசையைப் பெண்கள் அநேகர் விரும்புவார்கள். வீரத்தின் அறிகுறியான வீமன் மீசையைத் தற்காலப் பெண்கள் விரும்புகிறார்களில்லை. காரணம் கணவரின் வீரத்தை அவரது மனைவி பார்வின் கனத்தைக் கொண்டு அவர்கள் மதிப்பிடுவதுதான். சில பெண்கள் கணவரின் நரை முடி எங்கே வெளியே தெரிந்து விடப் போகிறதோ என்ற பயத்தில் மீசையை வெறுக்கின்றனர்.

கா திருக்கேசன், மானிப்பாய்.

கே: தமிழ் மக்கள் எல்லாம் இப்பொழுது துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனல் நீரோ சதா சிரித்த வண்ணம் இருந்தால் இதற்கு ஒரு முடிவு இல்லையோ?

ப: துன்பத்தைச் சற்று மறக்கச் சிரிக்க வேண்டும்! அதற்கு நான் வழி காட்டுகிறேன். துன்பத்தை எதிர்த்துப் போராடும் போதும் சிரித்துக் கொண்டு அதனைச் செய்யப் பழக வேண்டும் தமிழ் பேசும் மக்கள்.

காளிதாசன், கொட்டாஞ்சேனை.

கே: எட்டப்பர்களும், அப்பாக்களும், தலைப்பாக்களும் அலரி மாளிகைக்குச் சென்று அம்மையாருக்கு ஆலவட்டம் பிடித்தார்களே. கண்ட பலன் என்ன?

ப; அவர்களுக்குப் பட்டம் பதவி, தமிழ் ஊழியர்களுக்குப் பட்டணம் கல்தா, தமிழ்ப் பகுதிகளில் சிங்களத் திணிப்பு—இவைகள் தான் கண்டபலன்.

இ. இராஜகுமார்,
திருநெல்வேலி.

கே: எனது வீட்டிலிருக்கும் ஒரு நண்பருடன் நான் 15 ரூபாவுக்குப் பந்தயம் பிடித்தேன். அந்தப் பந்தயத்தில் அவர் வெற்றியீட்டிவிட்டார். எனக்கோ பணம் கொடுக்க மனமில்லை! அவர் என்னைக் கிண்டல் பண்ணுகிறார். நான் எப்படி அவரிடமிருந்து தப்புவது?

ப: வாங்குவதற்கு மட்டுமின்றி கொடுப்பதற்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும். கொடுக்க முடியாவிட்டால் வாங்குவதற்கு ஆசைப்படாதீர்.

இ, சோமேஸ்வரி, கேகாலை.

கே: மலைநாட்டு மக்களின் பிரஜாவுரிமையைப் பெற தமிழ் அரசுக் கட்சியில் உள்ள நியாயதாரந்தர்கள் இலவசமாக நீதி மன்றத்தில் வழக்கிட உதவி அளிக்க முன் வருவார்களா?

ப: குறிப்பிட்ட நபர் அல்லது நபர்களின் உரிமைப் பிரச்சினை நீதி மன்றத்துக்கு வரும் போது கட்சி சட்ட உதவி அளிக்க என்றும் தயாராக இருக்கிறது. ஆனல் பிரஜாவுரிமை போராடிப் பெற முடியுமேயன்றி, நீதி மன்றத்தில் வழக்காடிப் பெறமுடியாது.

எஸ். கே. வி. சின்னதம்பி,
லஸ்சேனை தோட்டம்.

கே: பல தொழிற் சங்கங்கள் இருக்கும் தோட்டங்களில் அடிக்கடி கட்சிச் சண்டைகள் ஏற்பட்டு வருகின்றனவே, இதை நீடிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

ப: சண்டை சச்சரவின்றி தத்தம் தொழிற் சங்கங்களுக்கு ஆள் பிடிக்கும் வித்தையைக் கற்றுக் கொண்டால் 'கழுத்தறுப்பு' ஏற்படாது.

ஜெயராஜ், சினக்குடா.

கே: தமிழரசுக் கட்சியின் திட்டத்தை வலியுறுத்தி, நன்நோக்கத்தை வளர்ப்பதற்கும், விதைப்பதற்கும் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் அத்தனைபேரும், தங்கள் பாராளுமன்ற அங்கத்துவத்தை இராஜிநாமாச் செய்துவிட்டுச் செயல்பட விழைகின்றனராமே, இது பற்றி உங்கள் கருத்து யாது? இது நற்பயன் விளைக்குமா?

ப: இது ஒரு பத்திரிகை பறக்க விட்ட காற்றாடி. இறுதி இந்திய சுதந்திரப் போராட்டத்தை நடத்தும் பொருட்டு 1939-ல் மாகாணங்களை ஆட்சி புரிந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமா செய்தன என்பது உண்மையே. இலங்கையில் அந்த நிலைமை இன்னும் ஏற்படவில்லை. அவசியம் ஏற்படும் போது பதவிகளைத் தூக்கியெறிய அஞ்சுபவர்களல்ல தமிழரசுத் தலைவர்கள். இன்று பாராளுமன்ற ஸ்தானங்களைக் கைவிடுதல் பிற்போக்கு வாதிகளின் கையைத்தான் பலப்படுத்தும்.

மோ. ரெக்காயியோ,
கொழும்பு-2.

கே: மொழியுரிமை கோரிப் போராடும் தமிழரசுக் கட்சி, தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக எப்போது போராட்டம் ஆரம்பிக்கும்?

ப: மொழியுரிமைப் போராட்டமும் தோட்ட மக்களின் போராட்டந்தானே! அவர்களுக்கு மொழியுரிமை வேண்டாமா என்ன?

புவனராணி, கொக்குவில்.

கே: சில பெண்கள் எவ்வளவு சேலைகள் வாங்கிக் கொடுத்தாலும் அது போதாமல் சேலையில்லை, சேலை இல்லை என்று வாழ் நாள் முழுவதும் அழுகிறார்களே இதன் மர்மம் என்ன?

ப: சேலைகளையும் நகைகளையும் வாங்கிக் கொடுத்துப் பெண்களை திருப்திப் படுத்த முடியும் என்பது வீண் முயற்சி. அது என்றுமே அடங்காத ஆசை. அடக்க முயன்றால் அது மென் மேலும் பொங்கியெழும்.

## கோழைக்கு மாலையிடேன்

—"பாண்டியூரன்"—

பாராண்ட தமிழனுக்கு உரிமையில்லை!
பலிபாடு போலாகும் நிலைமையாச்சு;
வேரோடு அழிகின்ற வேளையின்று
மெல்லினையில்......உல்லாசம் வேண்டாமத்தான்
போராடத் தமிழர்படை திரளக்காணீர்
புறப்படுக அக்கணமே புலிபோற்பாய்ந்து!
மாரோடு மார்தழுவி......மாலைசூட்ட
மற்றொருநாள் வெற்றியொடு வருவீரத்தான்!

தமிழனுக்கு இடமில்லை யென்றுசொல்லத்
தரணியிலே நாவுடையார் இல்லை! அந்த
அமிழ்தினிய தமிழுக்கு ஆட்சிபீடத்(து)
அரசுரிமை யில்லையெனில் அறத்தால் வெல்வோம்
தமி லெழிர்; நேரனுடைய தமிழுன்னையில்
தூக்கிடிலோ வேலம்பு!, வேண்டாமத்தான்;
அமைதிநிறை யறப்போரிலே போராம்! அந்த
அணியினிலே நின்பாதம் அலைந்தால் போதும்!

சத்தியத்திற் கெதிராகு யாயுதங்கள்
தரணியிலே யின்றுவரை தழைத்ததில்லை!
புத்தியிலார்க்(கு) இவ்வுண்மை புரியா; நீங்கள்
புறப்படுங்கள் போருக்கு அறந்தை வென்று
செத்தாலும் சாகுங்கள்! திரும்ப வேண்டாம்;
சேயிழையும் உம்மோடு சேர்ந்து கொள்வேன்!
அத்தானென் றழைப்பதற்கும் தமிழே வேண்டும்!
ஆட்சியிலே நிலைத்திடநம் உழைப்பே வேண்டும்!

கண்டுனிரல் சிந்துகிற குருதிக்கீற்றால்
சோபனமாய் நெற்றியிலே திலகமிட்டு;
வென்றுவா விடைகூறி வழியனுப்பி
விரவடிக் கண்டுமனம் விம்மி(க) கொங்கை
கொண்டதனைக் குணமாக்கும் குலத்துப்பெண்யான்
கோழைக்கு மாலையிடேன்! குதிப்பேன் ஆழி
தண்டமிழர் குலமறியத் தமிழைக் கொல்லும்
தயவறியா இழிஞரைத் தமிழால் வெல்வீர்!

## விகர்பில்ஸ்



விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. விலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. வி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

# சுதந்திர உணர்ச்சியை எவராலும் தடுக்க முடியாது

## எள்ளி நகையாட முற்படும் இடதுசாரிக் குழப்ப வாதிகளுக்கு ஒரு எச்சரிக்கை!

## தென்னிலங்கைத் தலைமை எத்தனை நாளைக்கு?

எரிமலை திடீரென்று ஒரு நாள் வெடிக்கிறது என்றாலும், இதற்குப் பல காலம் முன்னதாகவே கண்ணுக்குத் தெரியாதவகையில் பூமிக் கடியில் நெருப்புக் குழம்பு கொந்தளித்துக் குமுறிக் கொண்டேயிருக்கும்.

அதே போல இலங்கைத் தமிழரசுக் கட்சி வெகு விரைவில் நடத்தவிருக்கும் இறுதிப் போராட்ட எரிமலை தனது முழுச் சக்திக்கும் ஏற்ற வகையில் வெடிக்கப் போகிறது என்பது பொந்துக்குள் தலையை விட்டிருக்கும் நெருப்புக்கோழி மனப்பான்மையினருக்கு வேண்டுமானால் தெரியாமலிருக்கலாம். ஆனால் நெருப்புக் குழம்பு கக்குவதற்கு முன், பூமிக் கடியில் நடைபெறும் கொந்தளிப்புக்கள் தீவிரமாக — திட்டமிட்டபடி — நடைபெற்று வருகின்றன என்பதற்கு கட்சி நடாத்தும் இன்றைய இயக்கங்களே சான்றாகும்.

### வெற்றி நிச்சயம்

பாத யாத்திரை, பகிஷ்கரிப்புப் போன்ற பொதுசன இயக்கங்களுக்குத் தமிழ் பேசும் மக்கள் காட்டும் மகத்தான ஆதரவு, தமிழ் பேசும் இனம் பெரும் போராட்டத்திற்குத் தயாராகிவிட்டது என்பதையும் கட்சியின் பாசறை வீரர்கள்—தொண்டர்கள், தந்தை செல்வா மீது வைத்திருக்கும் நம்பிக்கை எத்தகைய முடிவையும் ஏற்கத் தயாராகிவிட்டார்கள் என்பதையும் உணர்த்துவதாக உள்ளது.

நடக்கவிருப்பது நீண்ட காலப் போராட்டம், இறுதிப் போராட்டம். வெற்றி தவிர வேறு எதையும் பெறாத போராட்டமாக இது அமையும்.

### புறநானூற்றுத் தோற்றம்

தமிழரசுக் கட்சித் தலைவர்களையும்—தொண்டர்களையும் எப்படியாவது ஒரு விதத்தில் பாதிக்கும் போராட்டமாகும் இது. இதையெல்லாம் தொண்டர்கள் தெரிந்திருந்தும் பணியினைச் செவ்வனே செய்கிறார்கள். இந்தச் செயல் கோழையையும் வீரனாக்கும் புறநானூற்றுத் தோற்றமளிக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் ஆட்சியாளர்கள் நிலை எப்படியிருந்தாலும், அது பற்றிக் கவலையில்லை.

### களம் பல கண்டவர்கள்

களம் பல கண்டு சிறை பல சென்றவர்கள் தமிழரசார். எனவே ஆட்சியாளரின் எத்தகைய முடிவையும் கண்டு இவர்கள் அஞ்சப் போவதில்லை. ஆனால், ஆள்வந்தார் இம்முறை நிச்சயமாக ஆட்டங்காணப் போகிறார்கள். பெருந்தன்மையுடன் உரிமைகளை வழங்கி பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கம் ஆட்சியாளருக்கு இல்லை. மாறாக நிலைமையை மேலும் சிக்கல் நிறைந்ததாக மாற்றி வருகிறார்கள்.

### மந்திரி சபை முடிவு

அரசாங்க சேவையில் உள்ள தமிழ் பேசும் ஊழியர்களின் நிலை மிகவும் பயங்கரமானதாக உள்ளது. வளர்ந்து வரும் சிறார்களின் கல்வி நிலை அதைவிடப் பயங்

**பூங்குன்றன்**

கரமானதாகத் தெரிகிறது. தமிழ் பேசும் மக்களை எத்துறைகளில் எல்லாம் ஒதுக்க முடியுமோ, அத்துறைகளில் எல்லாம் ஒதுக்குவதற்கு வசதியாகச் சென்ற 24ம் திகதிய மந்திரிசபை முடிவுகளும் அமைந்துள்ளன. எனவே தமிழ் பேசும் மக்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையும் 'நீதியானது அல்ல' என்று யாரும் கூற முடியாது. கூறுவது புத்திசாலித்தனமானதும் அல்ல.

### குள்ளநரிக் கூட்டம்

தமிழ் பேசும் மக்களுக்கு சவால் விடுப்பது போன்று தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சிங்கள அரசாங்க ஊழியர்கள் அனுப்பப்படுகிறார்கள். சிங்கள வெறி பிடித்த ஏகாதிபத்திய மனப்பான்மை கொண்ட ஆளவந்தார் தமிழ் மொழிக்கும்—தமிழ் பேசும் மக்களுக்கும் இழைக்கக் கூடிய அநீதியின் உச்சப் படியில் நிற்கிறார்கள். இவையனைத்தையும் பார்த்துக் கொண்டு தமிழ் பேசும் மக்கள் கண்மூடி மௌனியாக வாழ முடியுமா? அப்படி வாழத்தான் வேண்டுமென்று கூறுகிறது அரசியல் குள்ளநரிக் கூட்டம் ஒன்று.

### விலாங்குத் தனம்

இத்தனை காலமாகப் பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு போன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மொழிச் சமத்துவம் சிங்கள மக்கள் மத்தியில் சிங்களம் மட்டும் என்று கூறி வந்த, இன்று சுயரூபத்தைக் காட்டியுள்ள இடதுசாரிக் கட்சிகள் தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டுப் போராடுவதைக் கண்டு எள்ளிநகையாடவும் கண்டனம் தெரிவிக்கவும் முற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் யார் நம்மவரின் போராட்டத்தைக் கண்டிக்க? இவர்களுக்கு என்ன யோக்கியதை உண்டு தமிழ் பேசும் மக்களின் நடவடிக்கைகளைத் திறனாய்வு செய்ய?

### செல்லாக் காசுகள்

சில இடது சாரிக் கட்சிப் பிரமுகர்கள் பகிஷ்கரிப்பு இயக்கம் அர்த்தமற்றது, முன் யோசனையற்றது, உடன் வாபஸ் பெறவேண்டும் என்று எல்லாம் உளறித் திரிகிறார்கள். ஏன், தமிழ் பேசும் மக்களால் கடந்த தேர்தலின் போது உருட்டிவிடப்பட்ட செல்லாக் காசான ஒரு சில இடது சாரித் தலைவர்கள் தமிழரசுக் கட்சியின் போராட்டம், 'வட கிழக்குப் பகுதிகளில் உள்ள சிங்கள ஊழியர்களைப் பாதிக்கும்' என்று வக்காலத்து வாங்கியுள்ளார்கள்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள இந்த இடதுசாரிக் கட்சியின் கூலிப்பட்டாளங்களைப் பார்த்துக் கேட்கிறோம்; ஐயா, பெரியவர்களே! வட-கிழக்கு மாகாணங்களிலுள்ள சிங்கள ஊழியர்களைப் பகிஷ்கரிப்பு இயக்கம் பாதிக்கும் என்று கூறுகிறீர்களே, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் நிலை பற்றிச் சிந்தித்தீர்களா? தொழிலாளர் நலனில் அக்கறை உடையவர்கள் நாம், என்று வீம்பு பேசும் வீணர்களே! தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களில் பெரும்பான்மையினர் இந்த ஆண்டு முடிவுடன் சிங்கள வெறி பிடித்த ஏகாதிபத்திய அரசின் கெடுபிடித் தன்மையால் ஓய்வுப் பணமுமின்றி வேலையை இழக்கப் போகிறார்களே, இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

நீங்கள் ஒன்றுமே கூற முடியாது. உங்கள் தென் இலங்கைத் தலைவர்கள் மந்திரி சபையின் முடிவை வரவேற்று அது நீதியானதும் யதார்த்த பூர்வமானதும் என்று அல்லவா கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமா, தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கத்தவறின் அவர்கள் பொது மக்களின் ஆதரவையும் இழக்க நேரிடும் என்றும் ஓரிடத்தில் உளறியுள்ளார் கொம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் ஒருவர். இப்படியிருக்கையில், வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள இடது சாரிக் கட்சிகளின் எடுபிடிகளான நீங்கள் எப்படி நமது போராட்டத்தை வரவேற்க முடியும்? உங்களுக்குத்தான் சிந்திக்கும் திறன் இல்லை, இருப்பது மரமண்டை என்று உங்கள் பெருந்தலைவர்கள் கணித்து வைத்திருக்கிறார்களே. பாவம்! நீங்கள் என்ன செய்வீர்கள், இரைத் தட்டுப் போன்று அவர்கள் சொல்லித் தருவதைப் பாடம் ஒப்புவிப்பது தானே உங்கள் தொழில்.

### ஆத்திரத்திற்கு ஆளாகாதீர்

உங்கள் செயல் கண்டு ஆத்திரப்படுவதில் பயனில்லை, உங்களை இன்னும் தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கரிக்க எத்தனிக்காது இருக்கிறார்களே அவர்களை எண்ணிப் பரிதாபப் பட வேண்டியதுதான்.

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள இடதுசாரிக் கட்சிகளின் எடுபிடி ஏவலாளர்களே! உங்களைச் சிறிது எச்சரிக்கவேண்டியுள்ளது. தமிழினம் தவியாய்த் தவிக்கிறது. பல் துறையிலும் பழிவாங்கப்படுகிறது தமிழினம். இந்த நிலையிலிருந்து விடுபடுவதற்கு ஜீவ மரணப் போராட்டத்திற்காகத் தயாராகும் வேளையில் கிண்டலும் கேலியும் பேசி தமிழ் பேசும் மக்களின் ஆத்திரத்துக்கு

(8ம் பக்கம் பார்க்க)


# இது புதிது!

## இது முதல்தரமானது!

# ஹன்சயா

கல்வனைஸ்ட் தகர வாளிகள்



★ இலங்கையில் செய்யப்பட்டது
★ பாவனைக்குச் சிறந்தது
★ சிக்கனமானது

'அன்னம்' அடையாள கல்வனைஸ்ட் வாளிகளையே கேளுங்கள்.



சென்ற் அந்தனீஸ் இன்டஸ்ரீஸ்
752, பேஸ்லைன் ரோட், கொழும்பு 9.


# சிங்களம் மட்டும் அமுலுக்கு யாழ். நகரசபை உடந்தையா?

## தமிழரசாரிடம் அ. எ. வி. சங்கம் முறையீடு

கொழும்பிலுள்ள உள்ளூராட்சித் தலைமைக் காரியாலயத்திலிருந்தும், மற்றும் திணைக்களங்களிலிருந்தும் யாழ். மாநகர சபைக்குத் தனிச் சிங்களத்தில் அனுப்பப்படும் கடிதங்கள் யாழ் மா நகரசபையினால் திருப்பி அனுப்பப்படாது அவற்றிற்கு ஆங்கிலத்தில் பதில் அனுப்பப்படுவதாகவும், இதன் காரணமாகக் கொழும்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் கடமையாற்றி வரக்கூடிய தமிழ் ஊழியர்கள் பாதிக்கப்படுவதாகவும், தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரமுகர்கள் தமிழரசு வட்டாரத்தில் முறையிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேற்படி விடயம் குறித்து விசாரணை நடத்திய தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரமுகர்கள் யாழ்ப்பாண மா நகரசபைக்கு அனுப்பப்படும் தனிச் சிங்களக் கடிதங்கள் மா நகர ஆணையாளரால் அங்கு கடமையாற்றும் சிங்கள அறிவுடைய தமிழ்ச் சுருக்கெழுத்தாளருக்கு அனுப்பப்படுவதாகவும், அவரது மொழி பெயர்ப்பை வைத்துக்கொண்டே சிங்களக் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் பதில் கடிதம் அனுப்பப்படுவதாகவும் தாம் அறிய வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேற்கொண்டு யாழ். மா நகரசபைக்கு வரக்கூடிய எந்தச் சிங்களக் கடிதத்தின் பேரிலும் நடவடிக்கையேதும் எடுக்காது அவற்றைத் திருப்பி அனுப்புவதற்குத் தமிழரசுக் கட்சியின் மா நகரசபை உறுப்பினர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அவர்களால் நடவடிக்கை எடுக்க வியலாது போகும் பட்சத்தில் மா நகர சபைக் கூட்டங்களைப் பகிஷ்கரிக்கும்படி அவர்கள் கட்சியால் கோரப்படுவர் என்றும் தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரமுகர்களுக்கு உறுதி கூறப்பட்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

உத்தேச தனிச் சிங்கள ஊழியர் பகிஷ்கார இயக்கத்தை முன்னிட்டு வட பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருப்பதால் முதலில் இது விஷயம் மா நகர முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமென்றும் அறியக்கிடக்கிறது.

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

# இழந்த உரிமைக்காகப் போரிடத் தயாரில்லை

## பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வழிவகைகள் கிடையா

## அட்டன் மாநாடு ஒரு கேலிக்கூத்து

தோட்டத் தமிழ் மக்கள் இழந்த பிரஜாவுரிமையை மீட்பதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போராட்டம் நடத்தத் தயாரில்லை என்பதையும், பிரஜாவுரிமையைப் பற்றி அரசாங்கம் இந்தியப் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் தங்களுடன் பேசினாலே பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ளலாம் என்பதில் இ. தொ. கா. நம்பிக்கை கொண்டுள்ள தென்பதையும் அட்டனில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு எடுத்துக் காட்டியது. போகாத ஊருக்குக் காட்டிய வழிதான் இது. இந்த வழி தோட்ட மக்களின் எதிர்காலத்தை இருளடையச் செய்துவிடுமேயன்றி பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுக்காது என்பது அனைவரும் அறிந்த பகிரங்க இரகசியம்.

தோட்டத் தமிழரின் மொழியுரிமையை இம் மாநாடு அடியோடு அலட்சியம் செய்து விட்டது. இதினின்று இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மீது நடத்தும் சிங்களத் திணிப்பை இ. தொ. காவும் அதன் தலைவரும் ஆதரிக்கின்றனரோ என்ற ஐயம் தோன்றியுள்ளது.

அட்டனில் நடைபெற்ற மாநாட்டின் செய்திகளைப் பன்மடங்கு மிகைப்படுத்தி ஒரு தமிழ்த் தினசரி பிரசுரித்தது. "இது காக்காய்ப் பிடிக்கும் பத்திரிகையா?" என்று பிறர் பார்த்து எள்ளி நகையாடும் அளவுக்கு அப் பத்திரிகை "மாநாட்டு மலர்களை" தினசரி பிரசுரித்துத் தனது தரத்தைக் குறைத்துக் கொண்டது.

### காட்டிய வழி என்ன?

பிரஜாவுரிமை பெற அட்டன் மகாநாடு வழிகாட்டுமென்று தோட்ட மக்களில் ஒரு சாரார் எதிர்பார்த்தனர் — ஏமாந்தனர். மாநாடு இதற்குக் காட்டிய வழி என்ன?

"ஒன்றுமில்லை" என்று இக் கேள்விக்கு நேரடியாகப் பதிலளித்து விடலாம்.

'இந்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதின் மூலம் பிரஜாவுரிமைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. மலை நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் பேசுவதின் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும்' என்று மாநாட்டுத் தீர்மானமும் திரு. தொண்டமானின் தலைமைப் பிரசங்கமும் கூறுகின்றன.

இதுதானா காட்டிய வழி? இதன் மூலம் பத்து லட்சம் தோட்ட மக்களுக்கும் பிரஜாவுரிமை கிடைத்து விடுமா?

### வெறும் குதிரைக் கொம்பு

"நாடற்றவர்கள்" எல்லோரும் இந்தியப் பிரஜைகள் என்பது அரசாங்கத்தின் கொள்கை. பாராளுமன்றத்தில் இதனைத் திட்டவட்டமாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆகவே காங்கிரஸ் தலைவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி பிரஜாவுரிமை பெறமுடியுமென்பது குதிரைக் கொம்புதான். இது காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரிந்த விடயமே.

கடந்த 15 ஆண்டுகளாக மலையக மக்கள் பிரஜாவுரிமை இழந்து தவிக்கின்றனர். காங்கிரஸார் இந்த 15 ஆண்டுகளில் பிரஜாவுரிமையைப் பெறும் பொருட்டு மலையக மக்களைத் திரட்டி ஒரு போராட்டமாவது நடத்தியிருக்கிறார்களா? பிரஜாவுரிமையைப் பெறும் பொருட்டு ஒரு சிறிதளவு தியாகத்தையேனும் செய்திருக்கிறார்களா? இல்லையே!

ஏன் செய்யவில்லை? தொடை நடுக்கமா? இல்லையேல் பிரஜாவுரிமையைப் பலிகொடுத்தாவது அரசாங்கத்துடன் ஒத்துழைத்தால் போதுமென்ற துரோக எண்ணமா? அதுவுமில்லையேல், பிரஜாவுரிமையைப் பற்றிப் பேசிக் கொண்டே கடந்த 15 ஆண்டுகளாகத் தங்களின் தலைமையைப் பாதுகாத்துக் கொண்டதைப் போல, இன்னும் பல வருடங்களுக்கு அதைப் பற்றிப் பேசியே தலைமையைக் காக்கலாம் என்ற திட்டமா? பிரஜாவுரிமைப் பிரச்சினை சிரஞ்சீவியாக இருந்தால் தான் தங்கள் தலைமையும் நிலைக்கும் என்ற எண்ணமா?

எதுவாயிருந்தாலும் சரி, பிரஜாவுரிமை பெறும் பொருட்டு ஒரு போராட்டத்தை நடத்தக் காங்கிரஸ் என்றுமே தயாரில்லை என்பதை அட்டன் மாநாடு பட்டவர்த்தனமாக, தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. போராட்டமின்றிப் பிரஜாவுரிமை பெறவே முடியாதென்பதை இன்று ஒவ்வொரு தோட்டத்தொழிலாளியும் உணர்ந்துள்ளான்.

கடந்த 15 ஆண்டுகளாகக் காங்கிரஸ் தலைவர்கள்

## மலைநாடு

பிரஜாவுரிமையைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தாமல், நேருஜியின் தலையில் அந்தப் பொறுப்பைச் சுமத்திவிட்டு, கையைக் கட்டிக்கொண்டு ஏன் வாளாவிருந்தனர்? ஏன் இப் பிரச்சினையைப் பற்றி இதுவரை சரியான முறையில் சிரத்தை காட்டவில்லை? இன்றும் அவர்கள் பிரஜாவுரிமைப் பிரச்சினையைச் சொந்தப் பிரசாரத்துக்காகவே பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனரே!

## இ. தொ. கா. சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டது

### தாய்மொழி அழியுதே!

"நாடற்றவர்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்களே. அவர்களின் தாய்மொழி தமிழ். தமிழ் இன்று நசுக்கப்படுகிறது. தமிழ் மொழியையும் நசுக்கி தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் அன்னிய மொழியான சிங்களமும் திணிக்கப் படுகிறது. மொழி அழிந்தால் இனம் அழியும். இதில் எவருக்கும் ஐயம் வேண்டாம்.

இம்மாதம் முதற் திகதி முதல் இந்த மொழித் திணிப்பு தீவிரமடைந்துள்ளது. இந்த நெருக்கடியான வேளையிலே கூடிய காங்கிரஸ் மாநாடு மொழிப் பிரச்சினையை அடியோடு புறக்கணித்ததென்றால் வெட்கித் தலைகுனிவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

## 17-50 கொடுக்க மறுக்கும் முதலாளிகள் எப்படி 30-00 கொடுப்பார்கள்?

இன்று ஒரேஒரு உண்மை மட்டும் சந்தேகத்துக்கிடமின்றித் தெளிவாகியுள்ளது. காங்கிரஸ் மட்டும் இல்லையேல், தோட்ட மக்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே பிரஜாவுரிமை பெற்றிருப்பார்கள் என்பதுதான் அந்த உண்மை. வேறுவார்த்தைகளில் கூறின், பிரஜாவுரிமையைப் பெறும் பொருட்டு 10 இலட்சம் மக்களையும் தட்டி எழுப்பாமல், அவர்களிடையே உரிமை உணர்ச்சி ஏற்படுவதை அனுமதிக்காமல், அவர்களை அடக்கி ஒடுக்கி வந்தது காங்கிரஸ். பிரஜாவுரிமை பெற மலையக மக்கள் எங்கே எழுச்சிபெற்று விடுவார்களோ என்று காங்கிரஸ் அஞ்சியது — இன்றும் அஞ்சுகிறது. அந்த அச்சத்தின் அடிப்படையில் எழுந்தவைதான் பிரஜாவுரிமை பற்றிய அட்டன் மாநாட்டின் தீர்மானமும் தலைமை உரையும். தோட்ட மக்களின் உரிமை எழுச்சிக்குக் காங்கிரஸ் முட்டுக்கட்டை போடுகிறது என்று பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டுகின்றோம்.

### தென்னரசு தாக்கப்பட்டார்

இலங்கைத் தொழிலாளர் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்களில் ஒருவரும் கழகத்தின் பிரச்சார முன்னோடியுமான திரு தென்னரசு அவர்கள் கடந்த 24ம் திகதி மலைநாட்டிலிருந்து புகைவண்டி மூலமாக வரும் பொழுது மகரகம அருகில் திருடர்களின் கத்திக் குத்துக்கு இலக்கானார். ஒருவார காலம் மருத்துவ மனையிலிருந்த் அவர் இப்பொழுது வெளியேறி ஓய்வு பெறுகிறார்.

### ஒரு சொல் கூடக் கிடையாது!

மலையக மக்கள் உட்பட தமிழ் பேசும் மக்களுக்கு மொழியுரிமை வழங்கப்பட வேண்டும் என்றுவது ஒரு தீர்மானத்தை மாநாட்டில் நிறைவேற்றக்கூடாதா? அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் ஆட்சியாளர் கோபமடையக் கூடும் என்ற பயமா?

தோட்டத் தமிழ் மக்களின் மொழியுரிமையைப் பற்றி ஒரு வார்த்தை கூட திரு. தொண்டமானின் தலைமைப் பிரசங்கத்தில் கிடையாதே! அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தலைமைப் பிரசங்கம் அரசாங்க ஆதரவாளரால் தயாரிக்கப்பட்டதைப் போலல்லவா தெரிகிறது! மிகக் கேவலமான நிலை இது.

### சிங்களக் காங்கிரஸ்

இதனால்தான் இ. தொ. காவைச் "சிங்களக் காங்கிரஸ்" என்றும் அதன் தலைவரை "சிங்களத் தொண்டமான்" என்றும் சிலர் கூறுகின்றனர் போலும்!

தோட்டத் தமிழர்களுக்கு மொழியுரிமை தேவையில்லை என்பது காங்கிரஸின் கருத்தென்றும் அவர்களின் மொழியும் இனமும் அழிக்கப்

(13-ம் பக்கம் பார்க்க)


கவர்ச்சிமிகு நிறங்களிலும் புகழ்ச்சியுடை தரத்தினிலும் கிடைப்பது.



லதா!!!

லதா அச்சடி கிரேஸ்ட் கொட்டன்!!

கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாட்டுடனும் உருவானது.

லதா பொப்ளின்!!

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.




எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் சந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:- குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி. கொழும்பு. சில்லறை விற்பனைப் பகுதி 110 &114, மெயின் வீதி

—MYLADS—

# எமது எதிர்ப்பு என்றுமே தளர்ச்சியடையாது

## அமைச்சரவை முடிவு இனக் கொலைத் திட்டம்

## இனவொழிப்பைத் தடுக்க போராட்டமே சிறந்த வழி

### ஆயுள் இன்சூரன்ஸ் திட்டத்துக்கு உதவ வேண்டாம்

### யாழ். முற்றவெளிக் கூட்டத்தில் தலைவர்கள் உரை

எமது முன்னைய போராட்டங்கள் ஓரளவு பலனளித்தே இருக்கின்றன. இந்நாடு சிங்களவரின் நாடு அல்ல; இந்நாட்டுப் பிரஜைகள் அத்தனை பேரினதுமாகும். ஆகவே சிங்களத்தை எம்மீது திணிக்க உதவும் எவரையாகிலும் பகிஷ்கரிப்போம். சிறுபான்மையினரின் ஒத்துழைப்பு இல்லாமல் நாடு பொருளாதார சுபீட்சமடைய முடியாது. எமது ஒற்றுமையில்லாவிடில் காலகதியில் அரசாங்கம் சின்ன பின்னமாகும். எச் சந்தர்ப்பத்திலும் நமது எதிர்ப்பு தளர்ச்சியடையக் கூடாது.

இவ்வாறு கடந்த 29—9—63 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாபெரும் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் தமிழரசுக் கட்சித் தலைவரும், பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களின் பரம்பரைத் தாயகமாம் வடக்கிலும் கிழக்கிலும் சிங்க



திரு. சி. மூ. இராசமாணிக்கம்

ளத்தை நிர்வாக மொழியாக்க சிங்கள ஏகாதிபத்தியம் செய்கின்ற முயற்சியைத் தமிழ் பேசும் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும் என்று தமிழ் அரசுத் தலைவர்கள் அனைவரும் அக்கூட்டத்தில் வற்புறுத்தினார்கள். கூட்டத்திற்கு திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமை தாங்கினார். பெருந்திரளாக மக்கள்



திரு. சா. ஜே. வே. செல்வநாயகம்



திரு. வ. நவரத்தினம்

கூட்டம் கூடியிருந்தது. திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தேசியகீதம் பாட, கூட்டம் ஆரம்பமாகியது.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "ஒரு கிழமைக்கு முன் அமைச்சரவையின் சிங்கள அமுல் பற்றிச் சில குறிப்புகள் வெளிவந்தன. சிங்கள அரசாங்கத்தின் இன்றைய சிங்கள மொழித் திட்டம் மிகமிகப் பயங்கரமானது. இத்திட்டத்தின்படி பள்ளிக்கூடங்கள் முழுவதிலும் சிங்களம் கட்டாய பாடமாக்கப்படுகிறது. இது



திரு. அ. அமிர்தலிங்கம்

தமிழ் பேசும் மக்களைச் சிங்களவராக்கும் இனக் கொலைத் திட்டம். முதலில் சிங்களம் கட்டாய பாடமாக்கப்படும். படிப்படியாக அகில இலங்கை முழுதும் அது போதனாமொழியாக்கப்பட்டு, நம் இனமே தன் தனித்தன்மை இழக்கச் செய்யப்பட்டு, பூண்டோடு அழிக்கப்படும். இப்பாரதூரமான விளைவுகளை நன்றாக ஆராய்ந்த பின்புதான் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களத்தை அமுல் நடத்துவோர் அனைவரையும் பகிஷ்கரிப்பதாக முடிவு செய்துள்ளோம்."

திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது: "தமிழ் பேசும் இனம் இனிமேலும் பொறுத்திருக்க முடியாது. எம் இனத்தைக் காக்க போராட்டம் அன்றி வேறு வழியில்லை. பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியுற்று விட்டன. ஆதலால் அனைவரும் போராட்டத்தில் பங்குபற்ற தொண்டர்களாகச் சேருங்கள் என்று வேண்டுகிறேன்."

திரு. வ. நவரெத்தினம் அவர்கள் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது: நாம் எதுவித நேரடி நடவடிக்கைகளை எடுக்கும் போதும் இலங்கையின் தென் பகுதிகளில் குழப்பம் ஏற்படக் கூடும். ஆனால் அதற்கு அஞ்சி எமது உரிமைக்காகப் போராடுவதை யாம் நிறுத்த முடியாது. எமது பரம்பரைப் பிரதேசம் எப்படியும் காப்பாற்றப்பட வேண்டும். சிங்களக் கட்சிகள் ஒன்றையும் யாம் நம்ப முடியாது. எம்மிலேயே யாம் நம்பிக்கை வைத்துப் போராட வேண்டும். காலப் போக்கில் தமிழ் பேசும் மக்கள்



திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்

தமிழில் பேசுவதே தண்டனை விதிக்கப்படும் குற்றமாகும் சூழ்நிலை ஏற்படக் கூடும். நெருக்கடிகளும் தொல்லைகளும் ஏற்படும் பொழுது சில மக்கள் சோர்வடைவது வழக்கம். அது தவறு. புதிய உற்சாகத்தோடு தமிழ் பேசும் மக்கள்

(13-ம் பக்கம் பார்க்க)


**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, இரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


### தமிழ்ப் பிரதேசத்தில்

# சிங்களத்தை அமுல் நடத்தும் எவரையும் பகிஷ்கரிப்போம்

## சிங்கள—ஊழியர்கட்கு தமிழரசுக் கட்சி வேண்டுகோள்

வடக்கு—கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க இலாக்காக்களில் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்தும் சிங்கள ஊழியர்களுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அனுப்பியுள்ள வேண்டுகோளில் பகிஷ்கரிப்பு இயக்கம் எத்தன்மையது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. சிங்கள ஊழியர்களுடன் கட்சிக்குத் தனிப்பட்ட முறையில் எத்தகைய வெறுப்போ குரோதமோ கிடையாது என்றும் அவர்களை ஆட்சியாளர் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் செய்ய கருவியாகப் பாவிப்பதாலேயே பகிஷ்கரிப்பு இயக்கம் நடத்தப்படுவதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் சிங்களம் மட்டும் சட்டத்தைத் தமிழ் பேசும் மக்கள் மீது அமுல் நடத்தும் கருவியாக எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தப்பட்டாலும் அவர்களும் பகிஷ்கரிக்கப்படுவார்கள் என்பதையும் அக் கடிதம் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியுள்ளது.

அக் கடிதத்தின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

25, 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
1-10-63.

அன்பார்ந்த சகோதரரே,

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடங்களிலும் சிங்களத்தை நிர்வாக மொழியாகத் திணிப்பதற்குக் கருவியாயுள்ள அரசாங்க சேவையாளருக்கெதிராக எமது கட்சி ஓர் பகிஷ்கார இயக்கம் நடாத்த முடிவு செய்திருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். உங்களிடம் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது நீங்கள் சிங்களவர் என்பதற்காகவோ, எமக்கு எவ்விதத் துவேசமும் இல்லை. உங்களை ஒரு கருவியாக்கி, எமது மொழி, கலாச்சாரம் ஆகியவற்றை அழித்து, எமதினத்தை அடிமையாக்கும் தமது நோக்கத்தை நிறைவேற்ற எத்தனிக்கும் ஓர் அரசாங்கத்திற்கு எதிராகவே எமது பகிஷ்கார இயக்கம் நடத்தப்படுகிறது.

1956ம் ஆண்டில், தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கிடையில், சிங்களத்தை மாத்திரம் இந்நாட்டின் ஒரே ஒரு அரசகரும மொழியாகும் அரசகரும மொழி மசோதா, சட்டப் புத்தகத்தில் ஏற்றி வைக்கப்பட்டது. இந்தக் கொடூரமான, அநீதியான நடவடிக்கைக்கெதிராக நாங்கள் இடைவிடாது போராடி வருகிறோம். நாம் அந்தச் சட்டத்துக்கெதிரான போராட்டத்தைத் தளர விடவில்லை.

மொழி வாரியாக, கலாச்சார வாரியாக, அரசியல் வாரியாக, தமிழ் பேசும் மக்களாகிய நாம் பல நூற்றாண்டுகளாக இந் நாட்டில் ஓர் பிறிம்பான, பிரத்தியேகமான இனமாக வாழ்ந்து வந்துள்ளோம். இந்நாட்டின் நிர்வாகத்தில் எமது மொழிக்குரிய இடத்தைத் தருவதற்கு அரசாங்கம் மறுக்கிறது. அந்நிய ஆட்சியாளரின் மொழியான ஆங்கிலத்தின் இடம், இன்று தனிச் சிங்களத்தினால் நிரப்பப் படுகிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரை, ஆங்கிலத்தைப் போலவே, சிங்களமும் ஓர் வேற்று மொழிதான்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தின் இடத்தைச் சிங்களம் எடுத்துக் கொள்வது நியாயமும், சரியானதுமே. அது எவ்வளவுக்கு நியாயமும், சரியானதுமோ அவ்வளவுக்கு, தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தின் இடத்

(13-ம் பக்கம் பார்க்க)

# இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

# ஆளவந்தார் படையின் வெளியேற்றத்திற்கு இனக் கலவரம் தடை

## அரங்கம் 11

அல்ஸ்ரரில் நடைபெற்றுக் கொண்டிருந்த இனக் கலவரத்தைக் காரணமாகக் கொண்டு, ஆங்கில ஆட்சியினர், ஆங்கிலப் படையினரின் வெளியேற்றத்தை நிறுத்திவைத்தனர். இச் செயல் உண்மையில் ஆங்கிலேயரின் அதிகார ஆசையை எடுத்துக்காட்ட நல்ல உதாரணமாக இருந்தது.

எல்லை ஆணைக்குழு நியமிப்பது பற்றி வட அயர் நாட்டுப் பிரதமர் சேர் ஜேம்ஸ் கிறெயிக் தனது அதிருப்தியை வெளியிட்டதோடு நில்லாமல் தனது அரசாங்கம் போரொன்றுக்கே தயார் செய்யவும் முற்படலாம் எனவும் பயமுறுத்தினார். நடுநிலைமைக் கொள்கையுள்ள எல்லை ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படுமானால் கிறெயிக் கேட்கும் ஆறு மாவட்டப் பிராந்தியத்தின் அரைவாசிப் பகுதியே அவருக்குக் கிடைக்கும் என்பது திண்ணம். அதனால்தான் கிறெயிக் இவ்வாறு பயமுறுத்த முற்பட்டார்.

## பத்திரிகை அலுவலகம் தரை மட்டமாக்கப்பட்டது

இந்நேரத்தில் குடியரசுவாதிகளுக்கும் சுதந்திர மாநிலவாதிகளுக்கும் இடையில் கடும் வேற்றுமைகள் தோன்ற ஆரம்பித்தன. மைக்கேல் கொலின்ஸ் தலைமையில் அயர் சுதந்திர மாநிலத்தின் யாப்புமுறை (அமைப்புத் திட்டம்) தயாராகிக் கொண்டிருந்தது. எனினும் இந்த யாப்புமுறை தயாராகினாலென்ன, தயாராகா விட்டாலென்ன, உடனடியாகப் பொதுத் தேர்தல் ஒன்றை வைத்தே தீர வேண்டும் என ஆதர் கிரிபித் விடாப்பிடியாக நின்றார். உடனடியாகத் தேர்தல் நடைபெறுமானால் மக்களுக்கு உண்மை நிலை புலனாகாது என்று எண்ணிய டி வேலரா, பொதுத் தேர்தல் ஒன்றை விரும்பவில்லை.

இந்த நிலையில் சின் பீனின் ஆண்டுமாநாடு 21-2-1922ல் கூடியது. டி வேலராவே சின் பீனின் தலைவர். ஆயினும் ஆதர் கிரிபித், மற்றும் சுதந்திர மாநிலவாதிகள் அதில் உறுப்பினர்கள். இப்பொழுதோ சின் பீனில் பெரும் பிளவு ஏற்பட்டிருக்கிறது. ஆண்டுக் கூட்டத்தில் ஒப்பந்தம் வாக்குக்கு விடப்படுமானால் நிச்சயமாக அது தோல்வியடையும், எனினும் அத் தோல்வி நாட்டில் இரத்தக்களரியை உண்டாக்கலாம். இதை அறிந்த டி வேலரா கிரிபித்துடன் ஒரு சமரசத்திற்கு வந்தார். அதன்படி, அயர் சுதந்திர மாநிலத்தின் புதிய யாப்புமுறை தயாரிக்கப்பட்டு மக்கள் அதை விளங்கிக் கொள்ள வேண்டும்; அதன் பின்னரே பொதுத் தேர்தல் இடம் பெற வேண்டும். இந்தச் சமரசத் திட்டத்தை கிரிபித் ஏற்றுக்கொள்ளவே, மாநாடு அசம்பாவிதம் எதுவுமின்றி நடந்தேறியது.

எனினும் அரசியல் அரங்கில் இடம் பெற்ற விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இராணுவ அரங்கில் இடம் பெற முடியவில்லை. இராணுவம், ஒப்பந்தச் சார்புப் படை, ஒப்பந்த எதிர்ப்புச் சேனை என இரண்டாகப் பிரிந்தது. எந்த ஒரு பிரிகேட்டிலோ பிரிவிலோ ஒரு சாரார் பெரும்பான்மையாக இருந்தால், மறு சாரார் அவர்களை விட்டுப் பிரிந்து வேறு பிரிகேடையோ பிரிவையோ அமைத்தனர். இரு சாராரும் தனித் தனிப் படை வீடுகளில் முகாமிட்டிருந்தனர். இடைக்கிடை இரு சாராருக்குமிடையில் சச்சரவும் ஏற்படத் தொடங்கியது. ஒரு சாரார் மற்றச் சாராரைக் கைது செய்து காவலில் வைக்கவும் முற்பட்டனர்.

இராணுவத்தினர் மத்தியில் வளர்ந்து வரும் பகைமையை அகற்றாதுவிட்டால் அது நிச்சயமாக உள்நாட்டு யுத்தத்திலேயே போய் முடியும் என்பதை யாவரும் அறிந்திருந்தனர். எனினும் அதைத் தடுக்க மூன்றாந் தரப்பினர் எவரும் அகப்படவில்லை. குடியநிபதி கிரிபித், குடியரசுவாதிகளை ஒழிக்க வேண்டும் எனக் கங்கணங் கட்டிக்கொண்டு நின்றார். டி வேலராவின் கையிலோ எவ்வித அதிகாரமுமிருக்கவில்லை. ஆயினும் அவரது வார்த்தைகளை ஒப்பந்த எதிர்ப்புச் சேனை மட்டுமே கேட்டு நடக்கும்; ஒப்பந்த சார்புச் சேனை உதறித் தள்ளும்.

இந்த இக்கட்டான நிலையை நீடிக்க விடாமல் இருப்பதற்கு ஒப்பந்த எதிர்ப்புச் சேனைத் தலைவர்கள் ஒரு பரிகாரத்தைக் கண்டனர். இராணுவ மாநாடு ஒன்று கூட்டவேண்டும் என்பதே அந்தப் பரிகாரம். அதன்படி 24-2-1922ல் அவர்கள் இராணுவமாநாடு ஒன்றுக்கான வேண்டுகோளைப் பாதுகாப்பு அமைச்சர் மல்க்கஹியிடம் விடுத்தனர். அவரும் 26-3-1922ல் மாநாடு ஒன்று நடத்த ஒப்புக் கொண்டார்.

## பெண்கள் வாக்குரிமைப் பிரேரணை தோல்வி

சமரசம் ஏற்படுத்த முயல்வதாக ஆட்சியினர் வெளியே காட்டிக் கொண்டாலும் அவர்கள் குடியரசுவாதிகளை ஒழித்துக் கட்டவே முடிவு செய்துள்ளார்கள் என்பதை அவர்களது செய்கை பல இடங்களில் உறுதிப்படுத்தியது. டாக்டர் பட்றிக் மக்காட்டனுக்குப் பிறகு அமெரிக்காவில் அயர்நாட்டின் தூதுவராக நியமிக்கப்பட்ட ஹரி போலண்ட், பிரான்சில் அயர் நாட்டுத் தூதுவராக இருந்த சோன் ஓகெலி ஆகிய இருவரும் ஒப்பந்தத்தை எதிர்த்த காரணத்துக்காக ஆட்சியினரால் பதவி நீக்கஞ் செய்யப்பட்டனர்.

அதுமட்டுமல்லாது, ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வாக்காளர் இடாப்புக்களைத் திருத்தியமைக்கும் பணி ஒப்பந்தத்தையடுத்து நிறுத்தப்பட்டது. அதன்

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

காரணமாக இறந்த பலரின் பெயர்கள் இடாப்பில் இன்னமும் இருந்தன; பல இளைஞர்களின் பெயர்கள்—அதுவும் ஈஸ்டர் வாரப் புரட்சியில் பங்குகொண்ட இளைஞர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறவில்லை. அத்தோடு, பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டும் என தோள் அயரினில் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆதர் கிரிபித்தும் அவரது சகாக்களும் தோற்கடித்தனர்.

## அரங்கம் 12

இராணுவ மாநாட்டுக்குப் பேராளர்களைத் தெரிவு செய்வதற்காக ஒவ்வொரு பிரிகேடும் பிரிவும் கூட்டங்கள் நடாத்தியது. அந்தக் கூட்டங்களிலே பெரும்பான்மையினர் ஒப்பந்தத்தை எதிர்த்துத் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். அதனால், இராணுவ மாநாடு ஒப்பந்தத்திற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றலாம் என்ற பயம் இடைக்கால அரசாங்கத்திற்கு வந்தது. அதன் காரணமாக, தாம் ஒப்புக்கொண்ட இராணுவ மாநாட்டுக்கே அவர்கள் தடை விதித்தனர். எனினும் குடியரசுவாதிகள் இத்தடையை மீறி 26-3-1922ல் மாநாட்டை நடாத்தினர். இந்த மாநாட்டை நடாத்துவதில் முன்னணியில் நின்றவர் இராணுவத்தின் பொறியியல் அதிபரான ரோறி ஓகொனர். ஈஸ்டர் வாரப் புரட்சியின் போது இவர் ஆங்கில ஆட்சியினரை ஆதரித்தவர். அதன் பின், தொண்டர்களும் தலைவர்களும் தம் உயிரையே பலி கொடுத்ததைக் கண்டதும் தனது மனதை மாற்றிக் குடியரசுவாதியாக மாறியது மட்டுமல்லாது ஒரு பித்துப் பிடித்த குடியரசுவாதியாகவும் மாறினார்.

மாநாட்டில் கூடிய ஒப்பந்த எதிர்ப்புச் சேனையாளர்கள் தம்மைத்தான் அயர் குடியரசு இராணுவத்தினர் என அழைக்க வேண்டும் எனவும் ஒப்பந்த சேனையாளர்களை சுதந்திர மாநில இராணுவத்தினர் என அழைக்க வேண்டும் எனவும் தீர்மானித்ததோடு அவசியமேற்பட்டால் சுதந்திர மாநில இராணுவத்தினரை ஒழித்துக் கட்ட வேண்டும் எனவும் தீர்மானித்தனர். அயர் சுதந்திர மாநில அரசாங்கத்திலும் பார்க்க அயர் குடியரசு இராணுவத்தின் சர்வாதிகாரம் ஒன்று அயர் மக்களுக்கு அதிக பலன் தரும் என இந்த இராணுவத்தினர் நம்பியது போல் தோன்றிற்று. குடியரசு இராணுவத்திற்கு ஆணையிடுவதற்காக குடியரசு இராணுவ நிறைவேற்றுக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் குடியரசு இராணுவத்தினர் 29—3—1922ல் தமக்கு எதிராகப் பிரசாரஞ் செய்த பத்திரிகை அச்சகத்தை நாசஞ் செய்தனர்; பிரித்தானியக் கடற்படைக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றி அதிலிருந்த வெடி மருந்துகளையும் எந்திரத் துப்பாக்கிகளையும் கைப்பற்றினர்.

## பொதுத் தேர்தல் நடத்துவதில் கருத்து வேறுபாடு

வட அயர்நாட்டுப் பிரதமர் ஜேம்ஸ் கிறெயிக் தூபமிட்ட இனக் கலவரம் அல்ஸ்ரரில் உச்சக் கட்டத்தை அடைந்தது. அல்ஸ்ரரிலிருந்த ஆங்கிலப் படையினரும் சாதாரணப் பொலிஸாரும் விசேடப் பொலிஸாரும் கத்தோலிக்க மக்களைப் பலவாறு தாக்கினர். இவர்களுக்குக் கிறெயிக்கின் அரசாங்கம் பல சட்டங்களின் மூலம் ஆதரவளித்தது. கத்தோலிக்கரின் நிலைமை மிகவும் இக்கட்டாக மாறியது. தம்மைக் காப்பாற்றுவதற்காகத் துப்பாக்கிகளைக் கத்தோலிக்கர் வைத்திருக்காவிட்டால் அவர்கள் இன வெறியரால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்; துப்பாக்கிகளை வைத்திருந்தால் அரசாங்கத்தின் சட்டப்படி தூக்கிலிடப்படுகின்றனர்!

அல்ஸ்ரரில் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தது. அதன்படி கத்தோலிக்கர் எவரும் இரவு நேரங்களில் வெளியே புறப்படலாகாது; ஆனால் படையினரும் குண்டர்களும் கத்தோலிக்கர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையடிக்கவும் பெண்களை மானபங்கப் படுத்தவும் எதிர்ப்புக் காட்டிய எவரையும் சுட்டுக் கொல்லவும் முடியும்!

இந்தக் கெடுபிடியைத் தாங்க முடியாது, புரட்டஸ்தாந்தர்கள் மத்தியில் வாழ்ந்த கத்தோலிக்கர்கள் அல்ஸ்ரர் மாகாணத்திலே கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளுக்கு அகதிகளாகச் சென்று குவிந்தனர். நாளொன்றுக்குச் சராசரி இரண்டு கத்தோலிக்கர் கொலைசெய்யப்பட்டு வந்தனர். இந் நிலைமையை ஆராய்ந்து டி வேலராவும் அவரது சகாக்களும் இந்த மிலேச்சத்தனமான செயல்களுக்குப் பரிகாரந் தேடுவதில் தாம் கொலின்ஸுடனும் இடைக்கால அரசாங்கத்துடனும் ஒத்துழைக்கத் தயார் என அறிவித்தனர். எனினும் கொலின்ஸ் அந்த ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதோடல்லாமல் சேர் ஜேம்ஸ் கிறெயிக்குடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினார். ஆனால் அந்தப் பேச்சு வார்த்தைகள் அவ்வளவாகப் பயனளிக்கவில்லை.

குடியரசு இராணுவத்தினர் மீண்டும் 9-4-1922ல் கூடினர். ஓர் இராணுவச் சர்வாதிகார ஆட்சியை அமைக்க வேண்டும் எனப் பலர் வேண்டுகோள் விடுத்ததினால் அவ் வேண்டுகோள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஒருசில வாக்குகளால் பிரேரணை தோல்வியடைந்தது. எனினும் அ. கு. இராணுவம் வாளாவிருக்கவில்லை. படை வீடுகளையும் பாசறைகளையும் தாக்கி அயர் சுதந்திர மாநில இராணுவத்தினரை வெளியேற்றியது. பல சந்தர்ப்பங்களில் அ. சு. மா. இராணுவத்தினர் பலர் அ. கு. இராணுவத்தில் சேரவும் முன்வந்தனர். இதனால் பீதியுற்ற இடைக்கால அரசாங்கம் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது.

(வளரும்)


## கல்வியே கருந்தனம்

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்;

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் — போன் : 3411

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஒக்டோபர் மாதம் 6-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## முதற் கட்டம் ஆரம்பம்

போராட்டத்தின் முதற் கட்டம் தொடங்கி விட்டது. பகிஷ்காரமும், மக்களை விழிப்படையச் செய்யும் பாத யாத்திரையும் ஏககாலத்தில் ஆரம்பமாகியுள்ளன.

தமிழ்ப் பகுதிகளில் சிங்களத்தைத் திணிப்பதென்ற சிங்கள ஆட்சியாளரின் பிடிவாதம் பகிஷ்கரிப்பு இயக்கத்தைத் தொடங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. சிங்களத் திணிப்பை நடத்தும், — நடத்த உடந்தையாக இருக்கும் ஒவ்வொருவரையும் தமிழ் பேசும் சமுதாயம் அடியோடு புறக்கணித்து விடுவதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

வட பகுதியில் சிங்கள, தமிழ் ஊழியர்களுக்குத் தனித் தனியாகக் கட்சி ஒரு வேண்டுகோள் அனுப்பியுள்ளது. பகிஷ்காரத்தின் அவசியம், நோக்கம், தன்மை ஆகியவை அதில் விளக்கப்பட்டுள்ளன.

சிங்களத் திணிப்பை நடத்தும் அதிகாரிகளைச் சமூக பகிஷ்காரம் செய்யுமாறு யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்களுக்கும், சலவை, சவரச் சிப்பந்திகளுக்கும் பொது மக்களுக்கும் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. சிங்களத் திணிப்பை நடத்தும் நபர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கக் கூடாதென்றும், வீடுகள், அறைகள் அவர்களுக்கு வாடகைக்கு விடக் கூடாதென்றும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

பகிஷ்காரம் ஒரு சிறந்த போராட்ட ஆயுதம். மக்களின் உரிமைகளைப் புறக்கணிப்பவர்கள் மக்களால் புறக்கணிக்கப்படுவர். இதுவே பகிஷ்கரிப்பு. இப் புறக்கணிப்பு இயக்கத்தைக் அயர்லாந்து, இந்தியா போன்ற நாடுகள் தங்கள் விடுதலைப் போராட்டத்தின் ஒரு அம்சமாக நடத்தி வெற்றி பெற்றன. அந்த அளவுக்கு பகிஷ்கார இயக்கத்துக்கு வலிமையுண்டு.

மக்களின் ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைப்பின், இந்த ஓர் இயக்கமே சிங்களத் திணிப்பைத் தடுத்து நிறுத்திவிடும். இவ்வியக்கம் இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு, தமிழ்ப் பிரதேசம் முழுவதிலும் பிரமாண்டமான முறையில் நடைபெறும்போதுதான் அதன் வலிமையைச் சிங்கள மொழி வெறியர்கள் உணர்வர்.

சிங்களத் திணிப்பை நடத்தும் நபர்கள் தமிழ் பேசும் மக்களிடையே நடமாடத் தகுதியற்றவர்கள். அவர்கள் பகிஷ்கரிக்கப்பட்டு, சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, தமிழ் பேசும் இனத்தால் "தீண்டத்தகாதவர்களாக" கப்பட வேண்டும். அவர்கள் வெளியே தலையைக் காட்ட வெட்கப்பட்டு, சிங்களத் திணிப்பைக் கைவிட்டு, தமிழ்ப் பகுதியிலிருந்தே ஓடிவிடும் நிலையைத் தோற்றுவிக்கும் அளவுக்குப் பகிஷ்கார இயக்கம் வலுவடைய வேண்டும்.

பகிஷ்கரிப்பு வெற்றி பெற வேண்டுமாயின் தமிழ் பேசும் ஆண், பெண், குழந்தை ஒவ்வொருவரும் அதில் பங்குபற்றவேண்டும்—சிங்களத் திணிப்பை நடத்துகிறவர்கள் ஒவ்வொருவரையும் சமூகத்திலிருந்தே ஒதுக்கித் தள்ளி வைத்து விட வேண்டும்.

சிங்களத் திணிப்பை நடத்த உடந்தையாக இருந்து, ஆட்சியாளரிடம் காவடி தூக்கிய எட்டப்பர் கும்பலொன்று உண்டு. பகிஷ்கரிப்பின் விளைவை அவர்களையும் அனுபவிக்கச் செய்வது தமிழ் பேசும் மக்களின் கடமை.

பகிஷ்கரிப்பு ஒரு சாத்வீக இயக்கம்—காந்தியடிகளின் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட போராட்டம். அது சிங்கள ஆட்சியாளரின் நயவஞ்சகத்தையும் சூழ்ச்சியையும் முறியடித்து, சிங்களத் திணிப்பைத் தடுத்து நிறுத்தும் ஓர் எதிர்ப்பியக்கமேயன்றி, தனிப்பட்ட ஊழியருக்கோ, சிங்கள மக்களுக்கோ எதிரான இயக்கமன்று. இதனை ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளது தமிழரசுக்கட்சி.

தமிழரசுத் தந்தையின் தலைமையில் தலைவர்களும், தொண்டர்களும், தாய்மார்களும் கிராமம் கிராமமாகப் பாத யாத்திரை செல்கின்றனர். இது ஒரு புனித யாத்திரை. காந்தி ஜெயந்தியன்று கீரிமலையிலிருந்து தொடங்கியதே அதற்குச் சான்று.

அதே நாளில் பாரத நாட்டில் ஒரு புனித யாத்திரை ஆரம்பமாகியது. காந்தி அடிகளின் பேரப்பிள்ளை ராஜ மோகன் காந்தியின் தலைமையின் கீழ் ஒரு தார்மீகப் புனருத்தாரணக் கோஷ்டி கன்னியா குமரியிலிருந்து வட கோடி வரை சுமார் 3000 மைல் புனித யாத்திரை புறப்பட்டுள்ளனர்.

பாத யாத்திரை இலங்கை வரலாற்றிலே ஒரு புதுமையாகும். இதனால் தலைவர்கள் கிராம மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்கின்றனர். அவர்களுடன் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்கின்றனர்.

யாத்திரைக் கோஷ்டி செல்லுமிடமெல்லாம் உற்சாகம் கரைபுரண்டோடுவதாகச் செய்திகள் கூறுகின்றன. கிராமாந்தர மக்களிடையே புத்துணர்ச்சியையும் புதிய விழிப்பையும் ஏற்படுத்தி வருகிறது இப் பாத யாத்திரை.

கிராம மக்கள் அரசாங்கத்தால் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை உணரச் செய்வதும், உரிமைப் போராட்டத்துக்கு அவர்களின் ஆதரவைத் திரட்டுவதும் பாத யாத்திரையின் நோக்கமாகும். இந்த யாத்திரையின் போது தீண்டாமை, சாதிப் பாகுபாடு, சமூக ஏற்றத் தாழ்வு முதலிய சாபக்கேடுகள் மரண அடி வாங்குமென்பதில் ஐயமில்லை.

உரிமைப் போரின் வெற்றி கிராம மக்களின் கையிலேயே இருக்கிறது. அவர்கள் உரிமை கோரி எழுச்சி பெற்றுவிட்டால், எந்தச் சக்தியாலும் அவர்களை அடக்கி ஒடுக்கி நசுக்கி விட முடியாது. அந்த மாபெரும் சக்தியைத் திரட்டி முன்னணிக்குக் கொண்டு வருகிறது பாத யாத்திரை.

ஆகவே பகிஷ்கார இயக்கத்தையும், பாத யாத்திரையையும் வெற்றி பெறச் செய்வது தமிழ் பேசும் மக்களின் தவிர்க்க முடியாத கடமை. "கடமையைச் செய்யத் தயங்காது முன் வருக!" என்பதே இந்த நெருக்கடியான வேளையில் நாம் அவர்களுக்கு விடுக்கும் ஒரே வேண்டுகோள்.

# தமிழர் மீது பொலிஸ் தாக்குதல்

## இந்து ஆலயப் புனருத்தாரணத்தின் போது நடைபெற்றது

திருகோணமலை மாவட்டத்தில் கங்குவேலி என்னும் கிராமத்திலுள்ள சிவாலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் நோக்கத்தோடு அருகாமையிலுள்ள காடுகளை வெட்ட முற்பட்ட சிலரைப் பொலிசார் தாக்கியுள்ளனர் என்று அறியப்படுகிறது. ஈழத்தில் சிவ வழிபாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். அப்படிப்பட்ட பழம் பெரும் ஆலயமான திருமங்களாய என்னும் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வதைக் குறிப்பிட்ட சிலர் விரும்புகிறார்கள் இல்லையாம். ஆனால் தமிழர்களின் பரம்பரைப் பிரதேசமான திருமலை மாவட்டத்தில் தினம் தினம் சிங்கள மக்கள் சட்டவிரோதமாகக் குடியேறுவதைத் தடுப்பார் யாரும் இல்லை.

திருமலை மாவட்டத்தில் கங்குவேலி என்னும் கிராமத்திலுள்ள திருமங்களாய் என்னும் சிவாலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் நோக்கத்தோடு அருகாமையிலுள்ள காடுகளை அழித்த தமிழர்களைப் பொலிசார் மிருகத்தனமாகத் தாக்கிய சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளதாகத் தெரிகிறது.

இதற்குக் காரணமாக உள்ளவர் அப்பகுதிக் காட்டிலாகா அதிகாரி என்று அறியப்படுகிறது. ஆயிரக்கணக்கில் சிங்கள மக்கள் தினமும் சட்டத்திற்குப் புறம்பான முறையில் காடுகளை அழித்துக் குடியேறி வருகிறார்கள். இதுபற்றி யாரும் கண்காணிப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் சிவபெருமான் ஆலயத்தை புனருத்தாரணம் செய்ய முற்பட்டவர்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காகத் தாக்கப்பட்டுள்ளார்கள். அதுமட்டுமல்ல அவர்களை மூதூர் பொலிசிற்கு அழைத்துச் சென்று நடுஇரவில் பதினைந்து மைல் தூரத்தை

(9ம் பக்கம் பார்க்க)

# சுதந்திர உணர்ச்சியை . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாகாதீர். உங்கள் நாவை அடக்கிக் கொள்ளுங்கள். இல்லாவிடின் யானை தன் தலையில் மண்ணை அள்ளிக் கொட்டியது போன்று, உங்களையும் தமிழ் பேசும் இனம் பகிஷ்கரிக்க ஆரம்பிப்பார்கள். இதை மறந்து விட வேண்டாம்.

உங்களுக்குச் சிந்திக்கும் திறன் இருந்திருந்தால், என்றோ உங்கள் நிலையை மாற்றியிருப்பீர்கள். என்றாலும் கடந்த கால சம்பவங்கள் சிலவற்றையும், இன்றைய இக்கட்டான நிலையில் உங்கள் தென்னிலங்கைத் தலைவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் சிலவற்றையும் தெளிவுபடுத்தியாக வேண்டியுள்ளது.

### அரை வேக்காட்டுக் கூட்டம்

இன்றைய இடதுசாரி முன்னணி என்ற அரை வேக்காட்டுச் சாம்பாரில் பிரதம பாத்திரமாக விளங்குபவர் திரு. பிலிப் குணவர்த்தன அவர்கள். இவர் கடந்த 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் வழி மொழிந்த பெரியார். இவருடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் உங்களைத் தமிழ் பேசும் இனம் எங்ஙனம் நம்புவது? அடுத்து, சமசமாஜக் கட்சியோ அல்லது கொம்யூனிஸ்டுக் கட்சியோ இன்று வரை தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்துக்காகத் தனது சுண்டு விரலையாவது ஆட்டியது உண்டா?

### எது உயிர்ப் பிரச்சினை?

ஒரு சிங்களத் தொழிலாளிக்கு அரைநாள் சம்பளத்தில் வெட்டு விழுந்துவிட்டது என்றால், அதை உயிர்ப் பிரச்சினையாகக் கருதும் இடதுசாரித் தலைவர்கள், மலையகம் வாழ் பத்து இலட்சம் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி இன்று வரை சிந்தித்தது உண்டா? இன்று இலங்கையர் மயம் என்ற புதிய திட்டத்தின் மூலம் மலைநாட்டுத் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தினம் தினம் வேலையிழந்து வருகிறார்களே அது பற்றிச் சிறிது சிந்திக்கிறார்களா?

### பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம்

1656ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பஸ் தொழிலாளர் மாதக் கணக்கில் வேலை நிறுத்தம் செய்த பொழுது, அந்த வேலை நிறுத்தம் இழக்கு மாகாணத்துக்கு விஸ்தரிக்கப்படும் என்று மட்டுமே கூறினார்கள் உங்கள் தென் இலங்கைத் தலைவர்கள். ஏன் அந்த அவல இலங்கை ரீதியாக மாற்ற முற்படவில்லை என்று சிந்தித்தீர்களா? அதுவும் தென்னிலங்கையில் ஒரு வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து மத்திய மாகாணத்திலும் அநுதாப வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. இது பற்றி இன்று சிந்தித்தீர்களா?

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் பிரச்சினையைப் பற்றி, தேசியத் தொழிற் சங்கம் என்று கூறிக் கொள்ளும் ஸ்ரீ. சி. எஸ். யூ. தட்டிக் கழிக்க முற்பட்டது மட்டுமல்ல அவர்களின் அடிப்படை உரிமைகளை அலட்சியப் படுத்தியதன் பயனே, 'அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்'.

இன்று, தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் தொழிற் சங்க சம்மேளனமே உருவாகிவிட்டது. இவர்கள் எல்லாம் கடந்த காலத்தில் சிங்கள ஊழியர்களுடன் தோளோடு தோள் நின்று போராடியவர்கள் என்பதை இத்தனை குறுகிய காலத்திற்குள் மறந்திருக்க முடியாது. இவர்கள் அனைவரும் இடதுசாரிக் கட்சிகளின் ஆதிக்கத்திலிருந்த தொழிற் சங்கங்களில் பிரதிநிதித்துவம் வகித்தவர்களும் ஆவர்.

இவர்கள் அனைவரும் உங்கள் தலைவர்களால் ஏமாற்றப்பட்டு, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதை நன்கு உணர்ந்த பின்னரே தனி வழி நாடினர் — இன்று அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

### நீங்கள் சாதித்தவை என்ன?

அடுத்து, தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றி 'இடதுசாரி முன்னணி' உருவாவதற்கு முன்னரோ அல்லது 'இடதுசாரி முன்னணி' உருவான பின்னரோ உங்கள் தலைவர்கள் செய்தது என்ன? பொருளாதாரச் சித்தாந்தம் பேசும் நீங்கள் வட—கிழக்கு மாகாணம் பொருளியல் முன்னேற்றத்தில் முற்றாக ஒதுக்கப்படுவது பற்றி என்றாவது குரல் எழுப்பியது உண்டா? இருக்கும் ஒரு சில திட்டங்களையும் சிங்கள வெறி பிடித்த ஏகாதிபத்தியவாதிகள் அத்றப் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரும் பொழுதெல்லாம், இடதுசாரித் தலைவர்கள் வாய்மூடி மௌனிகளாகவும், சில சந்தர்ப்பங்களில் ஆட்சியாளருக்கு ஆதரவாகவும் பேசியிருக்கிறார்கள். இதை நீங்கள் தெரிந்திருக்கிறீர்களா?

### குடியேற்றத்திட்டம்

குடியேற்றத் திட்டத்தின் மூலம் பரம்பரை பரம்பரையாக உள்ள தமிழ்ப் பிரதேசம் பறி போகிறது என்று தமிழ் பேசும் மக்கள் ஈனக்குரல் எழுப்பும் பொழுதெல்லாம் உங்கள் தலைவர்கள் அது வகுப்புவாதக் கூச்சல் என்றார்கள். இன்று நாம் பார்ப்பது என்ன? தூய தமிழ்ப் பெயருடன் விளங்கிய கிராமங்கள் அனைத்தும் பெயர் மாற்றப்பட்ட நூறு வீதம் சிங்களக் கிராமங்களாக விளங்குவதை நாம் கூறுமலே நீங்கள் அறிவீர்கள். இது சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் பேசும் மக்களைத் தமிழ்ப் பிரதேசத்திலேயே சிறுபான்மையினராக்கு வதல்லவா? நமக்கு என்று ஒரு பிரதேசம் இருந்தமையால் அல்லவா 58-ம் ஆண்டு எம்மவர்கள் தஞ்சம்புக முடிந்தது. இந்தப் பாதகமான முயற்சிக்கு மாற்றுவழி கண்டார்களா உங்கள் தலைவர்கள்? இல்லை, மாறாக ஆட்சியாளருக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தார்கள்.

மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் கொள்கைக்கு எந்த விதத்திலும் சோடைபோனதல்ல இன்றைய இடதுசாரியினரின் மொழிக்கொள்கை. இதைப் பலமுறை எடுத்துக் காட்டியுள்ளோம்.

### பகிஷ்கரிக்கப்படுவீர்கள்

இன்று தமிழ் பேசும் மக்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்கிறார்கள் என்றால், அது இடதுசாரி

(13-ம் பக்கம் பார்க்க)

# நிதி மந்திரியின் அந்தரங்கத் திட்டம் என்ன?

## பாத யாத்திரைக்கு........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி அடிகள் அவதரித்த புனித தினமான ஒக்டோபர் 2ம் திகதியன்று, அன்னாரின் அஸ்திகள் கரைக்கப்பட்ட புனித தீர்த்த ஸ்தலமான கீரிமலையிலிருந்து தமிழரசுக் கட்சியின் பாத யாத்திரை ஆரம்பமானது. தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் தலைமை தாங்கிச் செல்ல மஞ்சள், சிவப்பு, பச்சை ஆகிய மூவர்ணங்களுடைய கட்சிக் கொடிகளைத் தாங்கிய வீரர்கள், வீராங்கனைகள் தமிழ்வாழ்த் தொலிகளை வானளாவ எழுப்பிக் கொண்டு புடை சூழ்ந்துவர, 'இப் படை தோற்கின் எப் படை வெல்லும்' என்ற வரலாற்றுப் பெருமைகொண்ட தொண்டர் கூட்டம் தொடர புனிதமான இலட்சியப் பாதையைச் செப்பனிடும் நடை பவனி ஆரம்பமானது.

மாலைக்கதிரவனின் பொற் கதிர்கள் படர்ந்து வரும் பொழுதில் ஆரம்பமான யாத்திரையில் பங்கு பற்றும் குழுவினரைத் தெல்லிப்பழை கிராமச் சங்கத் தலைவர் திரு. த. செல்வரத்தினம் வழியனுப்பி வைத்த வைபவம் கண் கொள்ளாக் காட்சியாகும். "அண்ணல் காந்தி அடிகள் காட்டிய அஹிம்சை நெறியிலே சென்று இனத்தின் இன்னல்களைத் தீர்க்க மார்க்கம் தேடிப் புறப்பட்ட வீரர்களே! வெற்றி பெறுங்கள்" என்று அவர் அறுரை அளித்தாரியும், தந்தைக்கு மலர்மாலை அணிவித்தும் வழி அனுப்பி வைத்தார்.

### தந்தையின் பேச்சு

தந்தை செல்வா பேசுகையில் "பகிஷ்கரிப்பு இயக்கமும், பாத யாத்திரையும் காந்தி அண்ணல் காட்டிய இரு பெரும் அஹிம்சை ஆயுதங்கள். இந்த ஆயுதங்களை உபயோகித்தே தமிழ் பேசும் இனம் தன் இழந்து விட்ட உரிமைகளை மீட்கப் பாடுபட வேண்டும்.

"எமது இனத்தின் உரிமைப் போருக்கு உறுதுணையாகவிருக்க வேண்டியவர்கள் கிராம மக்களே. இன்று தமிழ் பேசும் இனம் வாழும் நிலையினை உணர்ந்து, நெருக்கடிகளைக் களையப் பாடுபடாமலிருந்தால் நிச்சயம் நாம் அழித்து ஒழிக்கப்பட்டு விடுவோம்.

"சிங்களத் திணிப்பை அரசாங்கம் மும்முரப்படுத்துவது நமது இனத்தை நசுக்கவே என்பதனை நாம் உணர்ந்து போராட முன்வர வேண்டும்." என்று கூறினார்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தேசிய கீதம் பாடியதும் வானளாவ எழுந்தன தமிழ் வாழ்த்துக் கோஷங்கள். நடை பவனியும் புறப்பட்டது.

தேசிய கீதங்களையும், ஆர்ப்பாட்ட அறப்போர்ப் பாட்டுக்களையும் ஒலிபெருக்கி பரப்பியது. தந்தையின் அருகே வட்டுக்கோட்டை உறுப்பினர் திரு. அமிர்தலிங்கத்தின் 8 வயது மகன் காண்டீபன் மூவர்ணக் கொடியுடன் ஏறுநடை போட்டான். பக்திப் பரவசத்தால் கட்டுண்டவர்கள் போல் வழியெங்கணும் மக்கள் குழுமி மெய்மறந்திருந்தனர்.

தந்தை அவர்களுடன் வடபகுதி தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களும், செனட்டர் நல்லையா, வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா, திரு. சி. கதிரவேலுப் பிள்ளை, திரு. வின்சன்ட் ஆகியோரும் சென்றனர். தமிழரசு மாதர் முன்னணி தலைவி திருமதி ராசபூபதி அருணாசலம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் தொடர்ந்தனர். சுமார் 500க்கும் அதிகமான தொண்டர்கள் முதல்நாள் நடை பவனியில் பங்குகொண்டனர்.

பாத யாத்திரைக் குழுவினர் ஆஸ்பத்திரி வீதி வழியாக மாகொல்லை சென்று அங்கிருந்து காங்கேசன் துறை சிமிந்துத் தொழிற்சாலை வரை சென்று பின்னர் மயிலிட்டியை அடைந்தனர். மாகொல்லை இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் குழுவினருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

திரு. அ. அமிர்லிங்கம் பேசுகையில், "அரசாங்கத்தின் சூழ்ச்சிக்கு நமது தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களும் பலியாகிவிட்டனர். இந்நிலையில் நாம் நமது தொண்டைக்குள் சிங்களம் திணிக்கப்படுவதை பார்த்துக்கொண்டு வாளாவிருக்கலாகாது. அரசாங்கத்தின் கைப் பொம்மைகளையும் சமூகத் துரோகிகளென்று ஒதுக்கியே வைத்தாக வேண்டும்.

"எமது சமூகம் முன்னேற வேண்டுமெனின் சமூக ஒற்றுமை அவசியம். சாதிப் பாகுபாடுகள் ஒழிந்தாக வேண்டும், இவற்றுக்கு நாம் மேற்கொண்டுள்ள பாத யாத்திரை வழிவகுக்கும் என்பது திண்ணம்."

### மயிலிட்டியில்...

மயிலிட்டியை அடைந்ததும் அங்கும் ஒரு வரவேற்பு நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பருத்தித்துறை பா. உ. திரு க. துரைரத்தினம் தலைமை தாங்கினர். மயிலிட்டி கிராமத்துக்கு யாத்திரைக் குழுவினர் வருவதை முன்னிட்டு அன்று மீன்பிடியாளர் எவரும் மீன் பிடிக்கச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மயிலிட்டி கரை பிள்ளையார் கோயிலில் உணவருந்திவிட்டு இரவு, முருகன் ஆலயத்தில் அனைவரும் தங்கினர்.

3ம் திகதி அதிகாலையில் யாத்திரை மீண்டும் ஆரம்பமானது. மயிலிட்டி பாரதி சங்கம் யாத்திரைக் குழுவினரை வரவேற்று வழியனுப்பியது. தையிட்டியில் காலை உணவு முடிந்ததும் யாத்திரை தொடர்ந்தது. மதிய உணவு மாவிட்டபுரத்தில் அருந்தியதும் கொல்லங்கலட்டி, அம்பனை மார்க்கமாக அளவெட்டி பிள்ளையார் கோயிலுக்கு வந்து சேர்ந்தனர். மாலையில் கோயில் வீதியில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

## தமிழர் மீது......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கால் நடையாகச் செல்லும் படியும் பொலிசார் பணித்தனராம்.

இந் நாட்டு ஆளவந்தார் மொழியை ஒழிக்கும் திட்டத்துடன் இப்பொழுது மத ஒழிப்பிலும் தீவிரமாகச் செயல்பட முனைந்துள்ளார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். ஆட்சியாளருடன் ஒத்துழைப்புப் பல்லவி பாட முற்படும் அன்பர்கள் இதற்கு என்ன சமாதானம் கூறப் பேகிறார்கள்.

# பிரதமர்-தென்னக்கோன் மோதலின் அடிப்படை

## ஆளும் கட்சிக்குள் கோஷ்டிச் சண்டை

### அமைச்சரவை முடிவுகள்

சிங்களப் பரீட்சைக்குத் தோன்றுதவர்களும் இது வரை விண்ணப்பிக்காதவர்களும் 1-1-64-ல் திறமையின்மை காரணமாக கட்டாய ஓய்வில் போகும்படி அரசாங்கம் கேட்டுக் கொள்ளும் என்று தெரிகிறது. இந்த வகையைச் சார்ந்த தமிழ் பேசும் ஊழியர்களின் எண்ணிக்கை 3000-க்கும் அதிகமாகும். தற்பொழுது உள்ள ஓய்வுக் குறிப்பின் பிரகாரமோ, நிர்வாக விதிகளின் படியோ கட்டாய ஓய்வில் ஒரு ஊழியரை போகச் செய்ய முடியாது. புதிய அமைச்சரவையின் முடிவுகளை அமுல் நடாத்த வேண்டுமென்றால் தற்பொழுதுள்ள விதிகள் திருத்தப்பட வேண்டும். இப்படிச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

### சுதந்திரன் பேச்சுப் போட்டி

அட்டன், பதுளை மாவட்டங்களுக்கான இடையிறுதிப் போட்டி இவ்வாரம் நடைபெறும் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தோம், எதிர்பாராதவிதமாக அவற்றை ஒத்திவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அட்டன் மாவட்டத்திற்கான இடையிறுதிப்போட்டி 12-10-63ம் திகதி காலை 10 மணிக்கு அட்டன் இந்து மகாசபை மண்டபத்தில் கண்டிப்பாக நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராக திரு. இ. நாகேந்திரம் கடமையாற்றுவார். அவரின் முகவரி: 117 1/8, டிம்புள்ள வீதி, அட்டன்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இடையிறுதிப் போட்டி 12-10-63 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அரசடி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராக வித்துவான் எஸ். இ. கமலநாதன் கடமையாற்றுவார். அவரின் முகவரி: புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.

பதுளை மாவட்டத்திற்கான இடையிறுதிப்போட்டி 19-10-63ம் திகதி காலை பதுளை தேவலாய வீதியிலுள்ள சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராக திரு. தமிழோவியன் கடமையாற்றுவார். அவரின் முகவரி: 180, லோவர் வீதி, பதுளை.

திருக்கோணமலை மாவட்டத்திற்கான இடையிறுதிப் போட்டி 19-10-63ம் திகதி காலை 9 மணிக்கு பெருந்தெரு மி. மி. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராக திரு. க. சிவகுரு அவர்கள் கடமையாற்றுவார்கள். அவரின் முகவரி: 144, பெருந் தெரு, திருகோணமலை.

இதர இடங்களுக்கான விபரம் அடுத்த இதழில் வெளியாகும்.

—பேச்சுப் போட்டி ஆசிரியர்.

மந்திரி இலங்கரத்தினவின் அந்தரங்க திட்டத்தை உதவி மந்திரிப் பதவியிலிருந்து ராஜினமாச் செய்த முதியான்சே தென்னக்கோன் அம்பலப்படுத்தி விட்டதாகவும் இந்தத் திட்டத்தை நசுக்க பிரதமர் வழிவகுக்க வேண்டுமெனவும் சுதந்திரக் கட்சியிலிலுள்ள முக்கியஸ்தர்கள் கேட்டுக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

பதவியை ராஜினமாச் செய்த பின்னர் பிரதமரைச் சந்தித்த முதியான்சே அவரிடம் 'அடுத்த தேர்தலில் நாமெல்லோரும் இலங்கரத்தின தலைமையில் தேர்தலில் குதிக்கப் போகிறோம்' என்று தமது புத்தி தடுமாற்றத்தில் கூறியிருந்தார் என்று தெரிகிறது. இப்பிதற்றலைக் கேட்ட பிரதமர் 'வளர்த்த கடா மார்பில் பாய்கிறதே' என்று மலைத்துப் போய் விட்டாராம்.

முதியான்சேயின் ராஜினமாவுக்கான காரணங்கள் பல. அவைகளில் பிரதானமானவைகளை 'சுதந்திரன்' நிருபர் இங்கே கொடுத்துள்ளார்.

பார்லிமெண்டில் முதியான்சே கோமாளிக் கூத்தாடியதை ஆங்கிலப் பத்திரிகைகளெல்லாம் கிண்டல் செய்திருந்தன. இந்தப் பத்திரிகைகள் மீது வஞ்சம் தீர்க்கு முகமாக அரசாங்க விளம்பரங்களையெல்லாம் இலப் பத்திரிகைகளில் பிரசுரிக்காமல் உடனடியாக நிறுத்திவிட வேண்டுமென இவர் கேட்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

அது மாத்திரமல்ல, அரசாங்கத்தின் பிரசுரமான 'ஸ்ரீ லங்கா'வை உடனடியாகத் தினசரிப் பத்திரிகையாக்க வேண்டுமெனவும் கேட்டிருந்தாராம்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதெனப் பிரதமர் தெரிவித்து விட்டாராம்.

ஏற்கனவே சீறிச் சினந்து கொண்டிருந்த முதியான்சே நிக்கவரட்டிய கூட்டமொன்றில் தமது கவிதை ஒன்றின் மூலம் பிரதமரைக் கிண்டல் செய்திருந்தார் என்றும் தெரிகிறது.

பிரதமர் காலை பத்து மணிவரையில் நித்திரை செய்து கொண்டிருப்பதாகவும் நாட்டின் அவசர தேவைகளைவிட அவருக்கு நித்திரை தான் முக்கியத்துவம் கூடியது எனவும் கூறியிருந்தாராம்.

இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட பிரதமர் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த பொழுது எதிர்க்கட்சியினர் பார்லிமெண்டில் பிரச்சினையைக் கொண்டு வந்து முதியான்சேயின் பார்லிமெண்டு காலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.

## தமிழ்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறரென்றும் அறியப்படுகிறது.

தமிழர்கள் எவ்வளவுதான் முயன்று படித்தாலும் சிங்களத்தைத் தாய்ப்பாலுடன் உண்ட சிங்களவர்களைப் போன்று சிங்களத்தில் கருமமாற்ற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினராம்.

தமிழரசுக் கட்சியின் பகிஷ்கரிப்பு இயக்க அறிவித்தல் வெளியானதும் அக்டோபர் மாதம் முதல் 'யாழ்ப்பாணத்தில் கடமை பார்க்க திரு. நெவில் ஜெயவீர நியமிக்கப்பட்டுள்ளார். அவருடைய கூற்றையும், அவருடைய உத்தியோக இடமாற்றத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, வேண்டுமென்றே அரசாங்கம் திரு. நெவில் ஜெயவீராவை நியமித்துள்ளது என்று பலரும் கருதுகின்றனர்.

## அறப்போரணியினர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அக்டோபர் மாதம் 1ம் திகதி ஆரம்பமான பகிஷ்கரிப்பு இயக்கத்துக்கு ஆதரவளிக்கும் முகமாகவும், அறப்போருக்கான ஆன்ம சுத்திக்காகவும் திருக்கோயிலில் அறப்போர் அணித் தலைவர் திரு. ஆர். டவிள்யூ. வி. அரியநாயகம் அவர்களும் அறப்போர் தொண்டர்களும் உண்ணாவிரதம் அனுட்டித்தனர். மட்டக்களப்பு தெற்கிலிருந்து பாத யாத்திரை ஒன்றினை நடாத்துவதற்கும், அறப்போரின் ஏனைய கட்டங்களுக்குமான ஆயுத்தங்களை அறப்போர் அணி வீரர்களின் துணையுடன் திரு. அரியநாயகம் தீவிரமாகச் செய்து வருவதாகவும் செய்தி கிடைத்துள்ளது. கட்சி மேலிடத்து உத்தரவை அறப்போர் அணி வீரர்கள் எதிர்பார்த்திருப்பதாகவும், உத்தரவு கிடைத்ததும் அஹிம்சை முறையில் அறப்போரின் தொடக்கத்தை வெகு தீவிரமாக ஆரம்பிக்கவிருப்பதாக திரு. அரியநாயகம் நமது நிருபரிடம் கூறினர்.


## ஆயிரக்கணக்கானபேருக்கு வேலை கிடைக்கும்!

ஆசிரியர் பதவி முதலிய நீங்கள் எதிர்பார்க்கும் உத்தியோகத்தைப் பெற்றுக் கொள்ளவும், பரீட்சைகளிற் தேர்ச்சி பெறவும், படித்த பாடங்கள் நினைவில் வைக்கவும், எத்தகைய கொடிய நபரையும் மடக்கி அடக்கவும் வேறு எதற்கு வேண்டுமானாலும் மந்திரம், உச்சாடனம் மாந்திரீகம், வைத்தியம் ஆகியவை செய்து கொடுப்பேன். விபரம் விசாரியுங்கள். இல்லையேல் நேரில் சந்தியுங்கள்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திஸாநாய்க்கா,**

கம்பளை.



# நிழல்கள்

செங்கை ஆழியான்-செம்பியன் செல்வன்

கூட்டாக எழுதும் தொடர் கதை

## கதிர் எட்டு

## கானல்

கிளை பரப்பிப் படர்ந்து, சடைத்து வளர்ந்தோங்கி நிற்கின்ற ஒருபுளிய மரத்தின் கீழ் அவன் நிற்கிருன். ஒடுங்கி மெலிந்த இலைகள் மென்காற்றில் ஓடிக்கொண்டிருக்கின்றன. வைகறை நிலவு மேற்கு வானில் தொங்கிக்கொண்டு சிரிக்கிறது.

அவன் ஆடாமல் அசையாமல் அம்மரத்தின் நிழலிருளில், யாரையோ எதிர்பார்த்துக் காத்து நிற்கிருன். கால்கள் கடுக்க உள்ளம் ஏங்க, கண்கள் ஒளிநிலத்தில் ஆவலோடு எதையோ, எவரையோ தேடித் தவிக்கின்றன.

இதென்ன......?

இருந்தாற்போல் புளிய மரம் வேப்பமரமாக மாறி விடுகிறது; கூதல் காற்று அவனுடலை வருடிச் செல்கிறது; நிலவின் ஒளிக் கதிர்கள் வேப்பமரத்தின் கிளைகளினூடாக நுழைந்து, நிலத்தில் சிந்திய பாலாகத் தேங்கி நிற்கின்றன.

அவன் நிற்பது வேப்பமரத்தின் கீழா? அல்லது புளிய மரத்தின் கீழா? வேப்பமரம் போலவுமிருக்கிறது; புளியமரம் போலவும் இருக்கிறது.

வானத்தின் ஒரு கோடியில் இருந்து எரிநட்சத்திரம் ஒன்று வானைக் கிழித்துக் கொண்டு மறு கோடிக்குப் பாய்கிறது. ஒரே ஒரு எரி நட்சத்திரந்தானு?...... இல்லை......பல எரி நட்சத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்ருக வானைக் கிழித்துப் பிளக்கின்றன.

எரிநட்சத்திர ஒளித்துகள்களெல்லாம் மலர்களாக மாறி விழுகின்றனவா? மலர்கள் பலவர்ண மலர்கள்...... பூமியை நோக்கிப் பொலபொலவென்று உதிர்கின்றன.

சிவப்பு மல்லிகை...... வெள்ளை ரோஜா...மஞ்சள் முல்லை...இவையெல்லாம் அவன் காலடியில் உதிர்கின்றன. அவன் காலடியில் உதிர்ந்து கிடப்பவை மலர்களல்ல...இரத்தினக் கற்கள் ...பச்சை...வைரம்... வைடூரியம்...புஷ்பராகம்...!

அவை மணிகள் தாமா? அல்லது, மணிகளால்கோர்க்கப் பெற்ற மணி மாலையா?

அவன் குனிந்து காலடியில் கிடந்ததை எடுக்கிருன்; அது ஒரு சங்கிலி; பளபளக்கும் பொன் சங்கிலி!

வைகறை முழு நிலவு எப்படி அரை நிலவாகத் தேய்ந்ததோ? அந்நிலவிலிருந்து யாரோ ஓர் அழகி—பேரழகி—பூமியை நோக்கி இறங்குகிருள். காற்றிலே கார்முகில் திரளென மிதக்கும் அவள் கூந்தலோடு போட்டி போட்டுக் கொண்டு, மெல்லிய தாவணியும் அலையெறிந்து தவழ்கிறது. அவன் விழிகளை மலர்த்திப் பார்த்துக் கொண்டு நிற்கிருன்; கைகளை அவளை நோக்கி நீட்டியபடி நிற்கிருன்.

நிலவிலிருந்துஉருப்பெற்ற அவள்—

உமா?......

இல்லையில்லை; அவள் உமாவல்ல. உமாவிற்கு இவ்வளவு கம்பீரமான அழகேது; நீண்ட கருங்கூந்தல் தானேது?

சரசுவா...?

சரசு இவ்வளவு உயரமானவளா? ரோஜா மலர் நிறம் அவளுக்கேது?

'ராஜ்...!'

மென் காற்றிலே மிதந்து வரும், தாபம் மிகுந்த இக்குரலுக்குரியவள்—

'புவனம்...!' என்று ஆவலோடு அழைக்கிருன், அவன்.

'வெகு நேரம் உங்களைக் காக்க வைத்து விட்டேனு?'

அவன் அவளைக் கண்ணிமைக்காது பார்க்கிருன்; அவன் விழிகள் களைகளாகின்றன.

'புவனம்!......என் புவனம்! என்னை மறந்து விட்டாயா...'

ஓடிவந்து அவனுதடுகளைப் பொத்துகின்றது, காந்தள் மலர் ஒன்று.

'உங்களையா...? என்னுயிரோடு கலந்து விட்ட உங்களை நான் மறப்பதா? ராஜ்......என்னிதயக் கோயி

செங்கை ஆழியான்

லில் உங்கள் ஒருவருக்குத் தான் இடம்......! என் தெய்வமே, என் செல்வா...! என் னிதய மலர் உங்கள் ஒருவருக்காகத்தான் மணம் வீசும்...!'

வேப்பமரம் எப்படி மறுபடியும் புளியமரமாகியதோ?

"என்னை ஏமாற்றி விடமாட்டீர்களே......?"

"புவனம்...! என்ருே பலரறியக் கட்டவேண்டிய இத்தாலியை இன்று உனக்கு..."

அவன் கைகளிலிருந்த தங்கச் சங்கிலியைப் பறித்து எறிந்தவர் யார்? அவளை முரட்டுத்தனமாகத் தள்ளி விட்டுப் புவனத்தைக் கைப்பிடித்து இழுத்துச் செல்பவர் யார்?

"ராஜ்... ராஜ்!... என்னைக் காப்பாற்றுங்கள்!......"

காற்றிலேஇழைந்து வரும் குரல் அவளாக அவன் காதுகளை நிறைக்கிறது.

"ஐயோ, புவனம்......!" என்று வீறிடுகிருன், அவன்.

"பொத்......"

கட்டிலிலிருந்து உருண்டு நிலத்தில் கிடக்கிருன்; துடித்துப் பதைத்து எழுந்த அவன் விளக்கைக் கொளுத்துகிருன். உடல் படபடக்கின்றது. உடம்பெல்லாம் ஆருக வியர்த்துக் கொட்டுகிறது.

'எவ்வளவு பயங்கரமான கனவு......?'

தலையைக் கைகளில் முட்டுக் கொடுத்தபடி கட்டிலில் அமர்ந்து கொள்கிருன்; காதுகளில் கனவில் ஒலித்த அதே குரல்... 'ராஜ்... ராஜ்...! என்னைக் காப்பாற்றுங்கள்!......' இடைவிடாமல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அவனுடைய இதயக் கதவை உடைத்துக் கொண்டு பெருமூச்சொன்று வெளிக் கிளம்புகிறது.

'புவனம்!......'

* * *

பாலாவைச் சந்திக்க வேண்டும் போலிருக்கிறது; இரவு அவன் கண்ட கனவின் தாக்கம் அவன் மனதைக் குழப்பிக் கலக்கி விட்டது. மனவுளைச்சலின் வெளிப்பாடே கனவு என்பதை அவனறிவான். ஆயினும் ஏனோ இதயம் வேதனையால் குமுறுகிறது. யோசிக்க யோசிக்கக் கனவின் சில காட்சிகள் மனத்திலிருந்தும் மறந்துபோய்க் கொண்டிருந்த போதிலும், இனந் தெரியாத ஒருவன் முரட்டுத்தனமாக அவளைத் தள்ளிவிட்டுப் புவனத்தை இழுத்துச் சென்ற அந்த ஒருகணக்காட்சி மனதிலடிக்கடி எழுகிறது. புவனத்தை இழுத்துச் சென்றவன் யார் என்று யோசித்து யோசித்துப் பார்க்கிருன்; 'நினைவே வரமாட்டேன்' என்கிறது. அவன் இழுத்துச் செல்லப் பட்டபோது 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அவள் அலறிய அலறல் காதுகளில் வண்டாக ரீங்காரமிடுகிறது.

'புவனம், நீ என்னை விட்டே போய்விடுவாயா? உன்னைக் காப்பாற்ற என்னுல் முடியாதா! புவனம், என் புவனம்! உன்னை இழந்து எப்படியடி நான் வாழ்வேன்......?'

பாலாவைச் சந்தித்து அளவளாவுவதன் மூலம் மனதிற்கு அமைதி கிடைக்கலாம்!

அவன் கால்கள் அம்பலவாணர் வீதியில் திரும்பி, நாவலர் வீதியில் விரைகின்றன.

பாலாவின் பேச்சுக்களிலும், நடத்தையிலும் முந்திய கலகலப்பும், நெருக்கமும் காணப்படவில்லை என்பதைக் கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த முதல்நாளே அவனுணர்ந்து கொண்டான். பிரிவின் இடைத்தூரம், நட்பின் நெருக்கத்தைப் பிளவு படுத்திவிட்டதாக எண்ணிக் கொண்டான். பாலா அவனை விளித்தபோது கூட, பழைய உரிமையின் நெருக்கம் அதில் இருக்கவில்லை.

'என்னிடமிருந்து எல்லாருமே தூரத்தூர விலகி ஓடிக் கொண்டிருக்கிருர்கள்! இதன் முடிவு என்வழி தனித்த வழியாக மாறி விடுவது தானே?'

பழக்கப்பட்ட அவன் கால்கள் பாலாவின் வீட்டினுள் நுழைகின்றன. அவன் வீட்டில் ஒரே கலகலப்பாகவிருக்கிறது; பலர் மகிழ்ச்சியோடு பேசிக் கொள்வதும் தெளிவாகக் கேட்கிறது:

"எனக்கு முன்னமே தெரியும், பாலா நிச்சயமாகப் 'பாஸ்' பண்ணுவான் என்று!"

"தம்பி! அப்பாவுக்குத் தந்தி அடித்தாயா?......"

"அப்பா, பேப்பர் பார்த்திருப்பார்தானே?" — இது பாலாவின் துள்ளல் குரல்.

'பாலா 'பாஸ்' பண்ணி விட்டான்! இனி அவன் பல்கலைக்கழக மாணவன்! பட்டதாரி......!

ராஜாவின் இதயம் நண்பன் சித்தியடைந்து விட்டான் என்பதால் மகிழ்கிறதா? அல்லது, தானும் சோதனை எடுத்திருந்தால் சித்திபெற்றிருக்கலாமே என்று வேதனைப் படுகிறதா? அல்லது, ஆற்ருமையினுல் அவனையறியாமல் பொருமை அடைகிறதோ?

அவன் ஒரு கணம் செயலற்று நின்ருன்; பின்—

'பாலா...!'

மகிழ்ச்சி கூத்தாடும் அவ்வீட்டிலே அவனின் முதல் அழைப்பிற்கு மதிப்பிருக்கவில்லை.

'பாலா...!'

'ஆரது...ஓ! ராஜ்...'—ஓடிவந்த பாலா அவன் கரம் ஒன்றைப் பற்றிக் கொண்டான்: 'நான் பாஸ் பண்ணி விட்டேன்! இதோ பேப்பரைப் பார்த்தாயா...?'

'என் வாழ்த்துக்கள், பாலா! எனக்குத் தெரியும் நீ 'பாஸ்' பண்ணுவாயென்று...!'

பேப்பரில் அவன் கண்கள் மேய்கின்றன; ஓரிடத்தில் அவன் விழிகள் குத்திட்டு நிற்கின்றன:

'மிஸ்.எஸ். அம்பலவாணர்!'

'பாலா!...சரசுவும் 'பாஸ்' பண்ணிவிட்டாள்...!'

பாலாவின் விழிகளும், ராஜாவின் விழிகளும் ஒன்றையொன்று கவ்விப் பிரிகின்றன; பாலா தலைகுனிந்து கொள்கிருன்.

'நீ இனிப் பல்கலைக் கழக மாணவன்.....பட்டதாரி...... இனி என்னை மறந்துவிடுவாய்?'

'ராஜ்... நீ என்ன சொல்கிருய்?' என்று தலையை நிமிர்த்துகிருன், அவன்; அவன் முகத்தில் ஏற்பட்ட திடீர் மாறுதல் ராஜாவைத் திகைக்க வைக்கிறது.

'நான் பகிடிக்குச் சொன்னேன்ரா...!'

'நீ பகிடிக்குச் சொன்ஞயோ, வெறுக்குச் சொன்னுயோ, எனக்குத் தெரியாது! ஆனுல், நீ, என்னேடு இவ்வளவு காலமாகப் பழகி வரும் நீ, இப்படிச் சொல்லலாமா!...'

'தவறுதான்!' என்ருன், அவன்.

நண்பர்கள் இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருக்கின்ருர்கள்.

'கந்தையர் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குப் பக்கத்தில் வீடெடுத்து இருக்கிருராம்!'

'எனக்கு அது தெரியும், பாலா! விசாரித்து அறிந்து கொண்டேன்!ஆனுல், என்ன பயன்...? அவளைச் சந்திக்கவே முடியாதே...? இனி என் வாழ்வில் அவளை நான் சந்திப்பேனே.....?' அவன் அழுதே விடுவான் போலிருக்கிறது: 'புவனத்தைக் காண முடியாதநிலை எனக்கு! கந்தையரின் வீட்டுப்படியில் காலெடுத்து வைக்க முடியாத நான், சின்னராசுவுக்கு வாக்குக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன்...'

'வீணுகக் கவலைப்படாதே, ராஜ்! புவனம் உன்னைத் தவிர வேறொருவனுக்குத் தலையை நீட்டவே மாட்டாள்...'

'அந்த ஒரு நம்பிக்கை தான் என்னை வாழ வைக்கிறது, பாலா!...நான் மட்டும் அவளைச் சந்திக்க நேர்ந்தால், கூட்டிக் கொண்டு எங்காவது ஓடி விடுவேன்!...'

'அப்படி எண்ணுதே, ராஜ்! கனகம் சின்ராசனேடு ஓடியதால அக் குடும்பத்திற்கு ஏற்பட்ட பழி இன்னுந் தீரவில்லை! அந்நிலையில் புவனமும் தமக்கையைப் போல, உன்னேடு ஓடி வருவாள் என்று எண்ணுவது தவறு...'

ராஜா மௌனமாக இருக்கிருன். பாலா தொடர்கிருன்:

'பொறுத்திரு, ராஜ்—...! எல்லாம் சுகமாக நடக்கும்! சின்ராசனுக்காக இப்போது நீ கந்தையரிடம் செல்வது சரியாகப் படவில்லை! கனகத்தைக் கொண்டே கந்தையருக்குக் கடிதம் எழுதச் சொல்...அக்கடிதத்தில் சில வேளை கந்தையர் மனம்

(15-ம் பக்கம் பார்க்க)





ராஜ பீடி ஸ்பெஷல்

ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

# அமைச்சரவை முடிவு: சிறுபான்மையினரை அழிக்கும் இனவொழிப்புச் சாசனம்

## அரசாங்க சேவையில் நம்மவர்க்கு இடமில்லை

### தமிழ் சிறுர்கள் மீதும் சிங்களத் திணிப்பு

### ஏகாதிபத்திய வெறியரின் கொடுமைகளுக்கு எல்லை வைப்போம்

உத்தியோக மொழி அமுல் பற்றி ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமைச்சரவையின் முடிவுகள் வெளியாகிவிட்டன. அதற்கு முன் பத்திரிகைகளில் வெளிவந்த அரைகுறை செய்திகளைப் பார்த்துவிட்டுத் தங்களைத் தேசிய தொழிற் சங்கங்கள் என்று கூறிக் கொள்ளும் இயக்கங்கள் சிங்கள மொழி அமுல் பற்றி அமைச்சரவை செய்த முடிவுகளை ஏற்றியும், போற்றியும், திருப்தி தெரிவித்து வரவேற்றன. ஏன் இந்த நாட்டு 'தேசியப் பத்திரிகைகளும்' அமைச்சரவையின் முடிவுகள் அரசியல் ஞானத்துக்கும், மனித நீதிக்கும் எடுத்துக்காட்டென்றும், மொழி மாற்றத்தால் பாதிக்கப்பட்ட பல ஆயிரம் அரசாங்க ஊழியர்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதாக இருக்கிறதென்றும் பக்கம் பக்கமாக எழுதித் தங்கள் மகிழ்ச்சிப் பிரவாகத்தை வெளிக் காட்டின. ஆனால் பின் வந்த அமைச்சரவையின் முடிவுகளின் முழு விபரம், இந்த 'தேசிய' தொழிற்சங்கங்கள் சரி, பத்திரிகைகள் சரி, இவை இரண்டும் எவ்வளவு அவசரப்பட்டு, பொறுப்பற்ற முறையில் தங்கள் கருத்தைத் தெரிவித்துவிட்டனர் என்பது தெளிவாகிறது. அப்படி இருந்தும் தங்கள் முந்திய கருத்தை, ஆங்காங்கு எழுகின்ற சில முணு முணுப்புகளைத் தவிர, திருத்தவோ, மாற்றவோ இதுதான் வரை முன் வரவில்லை. அமைச்சரவையின் முடிவுகள், சிங்கள மொழியைத் தீவிரமாகத் திணிக்க இருக்கும் முயற்சி,தமிழ் அரசாங்க ஊழியர்களை அரச சேவையிலிருந்து முற்றாக ஒழித்துக்கட்டும் திட்டம் இவற்றை உணரா இவைகள் வரவேற்கின்றன என்பதுதான் இந்த மௌனத்துக்கு உரிய ஒரே ஒரு காரணம் என்று சொல்லாமலே விளங்கிக் கொள்ளலாம்.

#### வேரோடு சாய்க்கும் திட்டம்

உத்தியோக மொழி அமுல் பற்றிய அமைச்சரவையின் முடிவுகள், ஏற்கனவே அதி தீவிரமாக அமுல் நடாத்தப்பட்டுவரும் தனிச் சிங்களச் சட்டத்திற்குப் புதிய விசைக் கொடுக்கும் பொருத்தி, தமிழ் அரசாங்க ஊழியர்களை மட்டுமல்ல, தமிழ் பேசும் இனத்தையே மீளா அடிமைத் தளையில் தள்ளி, வேரோடும், வேரோடு மண்ணோடும் ஒழித்துக்கட்டி அழித்துவிடச் சிங்கள ஏகாதிபத்திய அரசு திட்டியுள்ள சதித் திட்டம் என்பது, அம்முடிவுகளைப் படிக்கும் பேதையும் புரிந்து கொள்வான். முப்பத்து நான்கு பந்திகளைக் கொண்ட அமைச்சரவை முடிவுகள் ஒவ்வொன்றிலும் ஏக சிங்கள அரசின் இந்த நோக்கம் நீக்கமற நிறைந்து ஊடுருவிப் பாய்வது துலாம்பரமாகப் பளிச்சிடுகிறது.

#### பாடசாலையில் சிங்களம்

உத்தியோக மொழி அமுலும் அரசாங்க ஊழியர்கள் நிலையும் பற்றி முடிவு செய்யக் கூடிய அமைச்சரவை, நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் சிங்களம் படிப்பிப்பதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும் (பந்தி 25) என்றும் முடிவு கட்டியிருப்பது நாம் மேலே கூறியிருக்கும் கருத்துக்குத் தகுந்த சான்றாகும். இது மட்டுமல்ல வர்த்தக நிறுவனங்களோடும், பொது மக்களோடும் அரசாங்கம் கொள்ளும் கடிதத் தொடர்புகள் அனைத்தும் சிங்களத்திலேயே இருக்க வேண்டும். பொது மக்கள் அரசாங்கத்தோடு சிங்கள மொழியல்லாத வேறு மொழியில் தொடர்பு கொண்டால், அதற்குரிய பதில் சிங்கள மொழியில் எழுதப்பட வேண்டும். அதன் மொழி பெயர்ப்பு மட்டும் கடிதம் எழுதிய மொழியில் அல்லது ஆங்கிலத்தில் இணைக்கப்பட வேண்டும் (பந்தி 8). இந்த முடிவுகளின் உள்ளார்த்தம் என்ன? அரசாங்கம் மொழி பெயர்ப்போடு அனுப்பும் பதில் (பதில் மட்டுந்தான், மிகுதி நிர்வாகம் முழுவதும் சிங்களத்தில் இருக்கும்) எழுதுகின்ற மொழியில் அல்லது ஆங்கிலத்தில் இருக்கும் என்ற ஏற்பாடு, ஒரு இடைக்கால ஏற்பாடு. சிங்களம் பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாகப் படிப்பிக்கப்பட்டு, சிங்களம் தெரிந்த தமிழர்களை உற்பத்தியாக்கு மட்டுமே இந்த இடைக்கால ஏற்பாடு இருக்கும். அதன் பின் தமிழர்கள் அரசாங்கத்தோடு சிங்களத்திலேயே தொடர்பு கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டு, சிங்கள மொழியில் மட்டும் அரசாங்கமும் தொடர்பு கொள்ள இருக்கிறது.

வட—கிழக்கு மாகாணங்களிலும், மலையகத்திலும் உள்ள பள்ளிக்கூடங்களில் சிங்களம் கட்டாய பாடமாகப் படிப்பிக்கும் முயற்சிக்கு ஆரம்ப ஏற்பாடுகள் இப்போதே தொடங்கிவிட்டன. பத்தாயிரம் சிங்கள எஸ். எஸ். ஸி. படித்த வாலிபர்களை ஆசிரியர்களாக நியமிக்கக் கல்வி அமைச்சு செய்யும் முயற்சி இந்த சிங்களத் திணிப்புக்குத்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

#### சர்வ சிங்களம்

இந்தச் சிங்களத் திணிப்பு பள்ளிக்கூடங்கள், வர்த்தக நிறுவனங்கள், அரசாங்க அலுவலகங்களோடு நின்றுவிடப் போவதில்லை. இதுவரை காலமும் திணிக்கப்படாத வங்கிகளுக்கும், அரசாங்க கூட்டுத் தாபனங்களுக்கும், வேறு நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். அப்படியான திணிப்புக்குச் சட்டங்கள் ஏதாவது தடையாக இருந்தால் அவை திருத்தப்பட வேண்டும் (பந்தி 32). இந்த முடிவின் பிரகாரம் சிங்களத்தை எங்கும், எதிலும் நீக்கமறத் திணிக்கும் திட்டம் பூரணமாகிறது என்பதைக் கூற வேண்டியதில்லை

#### அரசாங்க சேவை

தனிச் சிங்களச் சட்டம் ஒரு மொழிப்பிரச்சினையல்ல, அது வொரு அரசியல் பிரச்சினை, அச் சட்டத்தின் ஒரு நோக்கம் அரச சேவையில் உள்ள தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களைப் படிப்படியாக வெளியேற்றி விடுவதுதான் என்பது நாடறிந்த இரகசியம். சிங்கள ஏகாதிபத்தியத்தின் உட் கருத்து தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. சிங்களம் படித்த சிங்களவர்தான் சிங்கள ஆட்சியாளருக்குத் தேவையே யொழிய சிங்களம் படித்த தமிழர் அல்ல என்று சொல்லப்பட்டது.

#### ஏமாற்றுத் திட்டம்

சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டவரோடு, அப்படியல்லாதோர் சிங்களத்தைப் படித்துப் போட்டி போட முடியாது. அப்படி எத்தனிப்பது பேதமையென்று கூறப்பட்டது. சிங்களம் படித்த வாலிபர்கள் ஆயிரம், இலட்சம் என்று வேலையில்லாது இருக்கும் பொழுது தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கத்தில் வேலை கிடைப்பது முயற் கொம்பு என்று சொல்லப் பட்டது. தமிழ் பேசும் அரசாங்க ஊழியரைச் சிங்கள ஏகாதிபத்தியம் நயத்தாலும், பயத்தாலும் சிங்களத் தேர்வுக்குத் தோன்றச் செய்வது, அவர்கள் மீது அரசாங்கத்துக்கு இருக்கும் 'அன்பினாலோ' அல்லது நிர்வாகம் சிர்குலையக் கூடாதென்ற விருப்பம் காரணமாகவோ அல்ல, அது தமிழ் பேசும் இனம் தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராகக் காட்டிவருகிற எதிர்ப் புணர்ச்சியை மழுங்கச் செய்து, தமிழ் பேசும் இனத்தின் ஒரு அங்கமாகத் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் இருப்பதால் தமிழினமே தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டதென்று வெளியுலகுக்கு எடுத்துக்காட்டவே என்று விளக்கப் பட்டது.

இவை யாவும் எவ்வளவு உண்மையான, தீர்க்கதரிசனமான வார்த்தைகள் என்பதை அமைச்சரவையின் முடிவுகள் தெள்ளத் தெளிய, வெட்டொன்று துண்டு இரண்டாக எடுத்துக் காட்டுகின்றன.

#### கணக்காளர் பரீட்சை

கணக்காளர் (Accountants' Service) சேவைக்குரிய தேர்வு இனிமேல் சிங்களத்திலேயே நடைபெற வேண்டும். அப்படி நடாத்த முடியாத நிலையில், அத் தேர்வு ஆங்கில மொழியில் நடந்தால், அதற்குத் தோன்றுவோர் உயர்தர சிங்கள மொழிப் பாடம் (A paper in Sinhala of a high-standard) ஒன்றும் எடுக்க வேண்டும். இதன் படி ஒரு தமிழ் உத்தியோகத்தரும் கணக்காளர் பரீட்சையில் தேற முடியாது. ஏனென்றால் 8ம் வகுப்புச் சிங்களப் பரீட்சை சித்தியெய்திய தமிழரால் கூட இந்த உயர்தர சிங்களப் பாடத்தில் சித்தியெய்த முடியாது. அமைச்சரவை கணக்காளர் தேர்வு பற்றிய முடிவுக்குரிய காரணத்தையும் ஒளிக்கவில்லை. இப்போது சிங்களத் தேர்ச்சியற்ற கணக்காளர் தொகை, சிங்களத் தேர்ச்சியுடைய கணக்காளர் தொகையை விட அதிகமாம். அதாவது தமிழ்க்கணக்காளர்கள் சிங்களக் கணக்காளர்களை விட அதிகமாம். இத்தனைக்கும் பெரும்பாலான தமிழ்க் கணக்காளர்கள் மானத்தை அடகுவைத்து, இருநூறு, முன்னூறு ரூபா சம்பளம் எடுக்கும் சாதாரண எழுதுவினைஞர்களிடம் காணப்படும் தன் மான உணர்ச்சியில் ஒரு சிறு துளி கூட இல்லாது, கேவலமான முறையில் சிங்களத் தேர்வு எழுதினவர்கள்.

புதிதாக அரச சேவைக்கு நியமனம் பெறும் பொழுது சிங்கள மொழி அறிவு இருப்பது கூடிய தகுதியாகக் கணிக்கப்படுமாம் (பந்தி 15). இந்த கொள்கை ஏற்கனவே கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. எழுது வினைஞர் சேவைக்கு எடுபட்ட 400 பேர்களில், ஆக நாலேநான்கு தமிழர்கள் மட்டும் நியமனம் பெற்றது இந்த அடிப்படையில்தான் என்பது சொல்லாமலே விளங்கும்.

#### முகவரியிடும் வேலையா?

சிங்களம் படிக்க 'உண்மையான' முயற்சி எடுத்தவர்களுக்கு மேலும் இரண்டு வருடங்கள் (பந்தி 19) கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த வருடங்களில் 8ம் வகுப்பு சித்தியெய்தாவிட்டால், அவர்கள் 1-1-66ல் கட்டாய ஓய்வில் போக வேண்டும். அது மட்டுமல்ல, 1-1-64 தொடக்கம் சிங்கள மொழியிலேயே (பந்தி 16) வேலை செய்ய வேண்டும். மூன்றாம் வகுப்பு சித்தியெய்திய வருக்குக் கடித உறைகளுக்கு முகவரியிடும் வேலை கொடுக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

#### திறமையைக் கணிப்பது சிங்களமா?

இந்தத் துரோகத்துக்கு அரசாங்கம் உத்தியோக உயர்வு போன்ற பரிசு கொடுக்கவும் தயாராயில்லை. ஒரு வகுப்பிலிருந்து (Class) இன்னொரு வகுப்புக்கோ, அல்லது ஒரு தரத்திலிருந்து (Grade) இன்னொரு தரத்துக்கோ, அல்லது புதிய நியமனத்துக்கோ சிங்கள மொழித் தேர்வு ஒன்று மட்டுமே ஒருவருடைய திறமையைக் கணிப்பதற்கு அத்தியாவசியத் தகுதியாகக் கருதப்படும் (பந்தி 14).

அமைச்சரவையின் முடிவுகள், 1956ம் ஆண்டுக்கு முன் சேர்ந்த தொழில் நுட்ப அலுவலர்களைப் பொறுத்தமட்டில், சிறிது கருணை காட்டுகிறது. ஆனால் அவர்களுக்குச் சிங்கள மொழித் தேர்ச்சி இருக்கும் பட்சத்தில்தான் வெளிநாட்டு உபகாரப் படிப்புக்கோ (Schlor-ship) அல்லது தேர்ச்சிக்கோ (Training) தேர்ந்தெடுக்கப் படுவார்கள் (பந்தி 33).

#### சிறிது காலத்திற்கே

பழைய தொழில் நுட்ப அலுவலர்களுக்கு மொழித் தேர்ச்சியிலிருந்து சிறிய விதி விலக்கு அளிப்பதும் அரசாங்கத்தின் சொந்த நன்மையையும், வசதியையும் கருதியே. பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் போதியளவு தொழில் நுட்ப அலுவலர்களாகத் தேர்ச்சி பெற்று வெளிவரும் வரை, தமிழர்களை உபயோகப்படுத்துவதே அரசாங்கத்தின் உண்மையான நோக்கம்.

மொத்தத்தில் அரச சேவையில் ஒரு தமிழருக்குக் கூட இடமில்லையென்பதே அமைச்சரவையின் முடிவுகளின் ஒளிவு மறைவற்ற கருத்தாகும். இந்த முடிவுகள் இந்நாட்டுச் சிறுபான்மை இனமான தமிழினத்தின் மீது எவ்வளவு தூரம் சிங்கள ஏகாதிபத்திய அரசுக்குப் பகைமை உணர்ச்சியும், பொறாமையும் இருக்கிறதென்பதற்கு ஒரு சிறு உதாரணம்.

தென்னாபிரிக்காவில் வெள்ளை ஏகாதிபத்தியத்தால் அருட்டிக்கப்படும் நிற வெறியை விட, சிங்கள ஏகாதிபத்தியத்

(13-ம் பக்கம் பார்க்க)



பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி: தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522

# சிறந்த நடிகர்: ஜெமினி, நடிகை: பானுமதி

—o—

## சென்னை சினிமா ரசிகர் மன்றம் அளித்த தீர்ப்பு

கடந்த ஆண்டின் சிறந்த நடிகராக ஜெமினி கணேசன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த நடிகையாக பானுமதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். சென்னை சினிமா ரசிகர் மன்றம் இத் தேர்வை நடாத்தியது.

கடந்த வருடம் வெளியாகிய படங்களில், 'சுமைதாங்கி' படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக 1962ம் ஆண்டின் சிறந்த நடிகர் என்ற பட்டத்தை மேற்படி சங்கம் ஜெமினி கணேசனுக்கு வழங்கியது. 'அன்னை' படத்தில்



சிறப்புற நடித்த நடிகை பானுமதிக்கு 1962ம் ஆண்டின் சிறந்த நடிகை என்ற பட்டம் வழங்கப்பட்டது.

'நெஞ்சில் ஓர் ஆலயத்தை' டைரக்ட் செய்தமைக்காக சிறந்த டைரக்டர் என்ற பரிசு ஸ்ரீதருக்கு வழங்கப்பட்டது.

அதே படத்தில் தோன்றிய முத்துராமன் சிறந்த துணை நடிகராகவும், முத்து



மண்டபத்தில் நடித்த சந்திரகாந்தா சிறந்த துணை நடிகையாகவும், சிறந்த நகைச்சுவையாளர் நாகேஷ் (நெஞ்சில் ஓர் ஆலயம்) என்றும், குழந்தை நடிகை, பேபி பத்மினி (நெஞ்சில் ஓர் ஆலயம்) என்றும் தெரிவுகள் நடைபெற்றன.

சிறந்த கதாசிரியராக ரா. கி. ரெங்கராஜன் (சுமைதாங்கி), சிறந்த இசை அமைப்பாளர் விஸ்வநாதன்-ராமமூர்த்தி (ஆலயமணி), சிறந்த ஒளிப்பதிவாளர் தம்பு (ஆலயமணி) என்றும் தேர்வுகள் நடத்தப்பட்டு, அனைவருக்கும் கேடயங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

### சிறந்த படங்கள் எவை?

இந்த விழாவில் பேசும் போது டைரக்டர் ஸ்ரீதர் குறிப்பிட்டதாவது:



'ஒரு படம் அதிக நாட்கள் ஓடுவதால் மட்டும் அது சிறந்த படமாகாது. ரசிகர்கள் பல தரப்பட்டவர்கள். ஒவ்வொரு துறையை ரசிப்பவர்களும் படம் பார்ப்பார்கள். அவ்வத் துறையை விரும்புவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே படங்கள் ஓடும் நாட்களின் தொகை நிர்ணயிக்கப்படுவதால், படத்தின் தரத்தை ஓடும் நாட்களைக் கொண்டு மட்டும் நிர்ணயிக்க முடியாது. படங்களைப் பார்த்து சகல அம்சங்களிலும் பொருத்தமானதையே சிறந்த படங்களாகக் கொள்ள வேண்டும். அவற்றுக்கே பரிசும் பாராட்டுகளும் வழங்கப்பட வேண்டும்.'

## எமது விமர்சனம்

### தாயைக் காத்த தனையன்

புலிவேட்டைக்குப்போன புதல்வன் புள்ளிமான் வேட்டையிலீடுபடுகிருன் என்று கேள்விப்பட்ட தாய் தன் புதல்வனைப் புலியிடமிருந்து காப்பாற்றிய மங்கைக்கே மணமுடிக்க முனைகிருள். சுபமாக முடியும் கட்டத்தில் புலி புகுந்து விளையாடுகிறது. கூடவே எதுவும் புரியாமல் ரசிகர்களாகிய நாமும் திக்குமுக்காடுகிறோம். காடு நாடு முதலியவற்றைச் சுற்றிவிட்டு, ஆறு கடலை நாடுவது போல் நாமும் பலதரப்பட்ட ரசாபாசங்களுக்குள்ளாகி மீண்டும் தெம்படைகிறோம். படமும் முடிகிறது.

சாண்டோ சின்னப்பா தேவர் தயாரித்த படமென்றால், அப்படத்தில் காடு, மாடு, புலி, புரட்சி, பொல்லடி, குத்துச் சண்டை முதலிய எல்லாம் இருக்கத்தான் செய்யும் என்று ரசிகர்கள் கருதுவதில் கருத்தில்லாமல் இல்லை. 'தாயைக் காத்த தனையனி'லும் இவைக்குக் குறைவேயில்லை.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். தோன்றுகிறார். சிலம்பம், குத்துச் சண்டை, புலி வேட்டை, முதலியவற்றுடன் மட்டுமல்லாது நிஜப் புலியுடன் நேரடியாக வே போர் புரிகிருர். சரோஜா தேவி, எம். ஜி. ஆரின் காதலியாக நன்கு நடித்துள்ளார். எம். ஆர். ராதா நல்ல மனிதராக, நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை வழங்கும் நல்லவராக, நடிக்கிருர். இடையில் திடீரென குணம் மாறி குடியைக் கெடுக்க முனைகிருர். ஆனால் அது சிவ பூஜையில் 'புலி' புகுந்தது போன்ற சம்பவம்.

ரசிகர்கள் திரையிலேயே அதற்குத் தெளிவு காணட்டும் என்று விட்டு விடுகிறோம்.

ராதாவின் புதல்வன் எம். ஆர். ஆர். வாசு இப்படத்தில் நொண்டியாகத் தோன்றி நகைச் சுவையை அள்ளி வீசுகிருர். கலைவாணர் என். எஸ். கே. யின் ஆரம்பகாலத்தை அவர் நமக்கு ஞாபகப்படுத்துகிருர். வருங்காலத்தில் என். எஸ். கே. யின் இடத்தைப் பிடிக்கவும் கூடும். காலம் பதில் சொல்லட்டும்.

வில்லன் பாகத்தில் அசோகன் சில இடங்களில் சோபிக்கவேயில்லை. தாயாராக கண்ணும்பா நடிக்கிருர். பரவாயில்லை.

கவிஞர் கண்ணதாசன் சிலேடையாகப் பாடல்களை அமைத்திருக்கிருர் போல் தெரிகிறது. மகாதேவன் பொருத்தமாக இசை அமைத்துள்ளார்.

புலியுடன் எம். ஜி. ஆர். மோதுவதை நல்ல கோணங்களில் படமாக்கியுள்ளனர். ஒளிப்பதிவில் கோளாறு தென்படுகிறது. புலியின் நிழல் வானத்திலும தென்படுவது, தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் படமாளிகைகளை ரசிகர்கள் மொய்த்து அட்டகாசம் செய்வார்கள் என்பது திண்ணம். ஆகவே முன்கூட்டியே தியேட்டர்களை 'இன்ஷூர்' செய்து கொள்ள வேண்டுமென்று கூற விரும்புகிறோம்.

—நாதன்



## அமெரிக்க இசைக் கலைஞர் இலங்கை வருகிருர்

புகழ் மிக்க அமெரிக்க வாத்திய இசைக் கலைஞர் டியூக் எலிங்டன் இலங்கையில் கச்சேரிகள் நடாத்த இம் மாதம் இலங்கை வருகிருர். இவருடைய இசைக் கச்சேரிகள் கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் 21, 22, 23ம் திகதிகளிலும், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 24ம் திகதியும் நடைபெறும்.

டியூக் எலிங்டன் இன்றைய மாபெரும் இசைக் கலைஞர்களில் ஒருவர். இவர் பாடல் இயற்றுவார், பாடுவார், வாத்தியக் கருவிகளை வாசிப்பார். 'பாண்டு' வாத்தியக் குழு தலைவர்களில் நிகரற்றவராகவும், உலகப் புகழ்பெற்ற பாடல் இயற்றும் இசைஞராகவும் விளங்கும் டியூக் எலிங்டனின் இசைப் படைப்புகள் எல்லோர் உள்ளங்களையும் கவரும் சிறப்பு வாய்ந்தவை.

இசையில், புதுப்புதுத் துறைகளில் வெற்றி காணத் துடிப்பவர் டியூக் எலிங்டன். 1942ம் ஆண்டில் கார்னேகி மன்றத்தை முதலில் 'முற்றுகையிட்ட' முதலாவது பெரிய வாத்தியக் குழுவின் தலைவர் எலிங்டன் ஆவார். அப்பொழுது அவர் தோற்றுவித்த புதிய மோஸ்தர், நாடு முழுவதிலும் 'ஜாஸ்' இசைக்குச் சிறந்த ஆதரவு அளிக்க வகை செய்தது.

டியூக் எலிங்டனின் வாத்தியக் குழுவில் பதினைறு வகை இசைக் கருவிகள் இருக்கின்றன. அதில் இருக்கும் இசைஞர்களும், தமது துறைகளில் பெரும் புகழ் பெற்றவர்களே! எனவே அவருடைய வாத்தியக் குழுவினரும் அவரைப் போலவும், அவருடைய இசையைப் போலவும், புகழ் பெற்றவர்கள்தான். அமெரிக்காவிலும், கனடாவிலும், ஐரோப்பாவிலும் மற்றும் பல இடங்களிலும், அவருடைய வாத்தியக் குழு இசை விருந்தளித்திருக்கிறது.



கிழக்கு நாட்டு மக்களும் ரசிக்கத்தக்க வகையில் இசையில் புதுமுறைகளை வகுத்துள்ள இக் குழுவினருக்கு தூரகிழக்கு நாடுகளெங்கணும் மாபெரும் வரவேற்புக் காத்துக்கிடக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இக் குழுவினரின் வருகைகையை ஆவலுடன் எதிர் பார்த்தவண்ணமுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

இலங்கை ரசிகர்களுக்கு இந்த இசைக் குழுவினரின் வருகை இன்பமளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## அறிமுகப்படுத்துகிறோம்

## அடுத்த வாரம் எதிர்பாருங்கள்

தந்தை சண்முகத்தின் கற்பனையில் மகள் அருணா இப்படித்தான் தோன்றுவார் போலும். 'சிவசக்தி' வெளியீடான 'எரிமலை' என்னும் சமூக நாடகத்தில் அருணாவாகத் தோன்றும் செல்வி தர்மதேவி துரைசிங்கம். 'எரிமலை' நாடகம் 13-10-63-ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இந் நாடகத்தை திரு. ஆர். ஜெகஜோதி தயாரித்தளிக்கிருர்.



# இழந்த உரிமைக்காகப்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு, அவர்கள் சிங்கள பௌத்தர்களாக மாறிவிட வேண்டுமென்று காங்கிரஸ் ஆசைப்படுகிறதென்றும் சந்தேகிக்க இடமேற்பட்டுள்ளது.

மாநாட்டு நடவடிக்கைகள் இச் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்கின்றன.

மாநாடு சுமார் ஒரு மணி நேரம் சிங்களத்தில் நடத்தப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. சிங்கள மந்திரிகளும் சிங்கள எம். பி. களும் மாநாட்டில் நிகழ்த்திய பிரசங்கங்கள் (ஒருவருடைய பேச்சைத் தவிர) தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை. இது என்ன சிங்களத் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற சிங்களக் காங்கிரஸின் சிங்கள மாநாடா?

பட்டம் பதவிகளைப் பெறும் பொருட்டு ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மாநாடு இம்மாதிரி நடத்தப்பட்டதா?

### சிங்கள அட்டைகள்

மாநாட்டு ஊர்வலத்தில் கோரிக்கைகள் பொறிக்கப்பட்ட ஒரு சில, அட்டைகள் தான் கொண்டு செல்லப்பட்டன. அதிலும், பல சிங்கள மொழியில் பொறிக்கப்பட்டவை. சிங்கள அரசாங்கத்துக்குச் காக்காய் பிடிப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடா இது? இல்லையேல் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளரின் மொழியுணர்ச்சியை மட்டந்தட்டுவதற்காகவும், மொழியுரிமைப் போராட்டம் நடத்தும் தமிழ் பேசும் மக்களைக் கிண்டல் செய்வதற்காகவும் செய்த தந்திரமா?

### சிங்களமும் இ. தொ. காவும்

"இ. தொ. கா. சிங்களத் திணிப்பை ஏற்றுக் கொண்டுள்ளது—அதன் தலைமை சிங்களம் மட்டும் சட்டத்தை அங்கீகரித்துள்ளது" என்று இதுவரை கூறப்பட்டு வந்தகுற்றச்சாட்டுக்கள்முற்றிலும் உண்மையானவை என்பதை மாநாட்டு நடவடிக்கைகள் நிரூபித்துவிட்டதாகக் கருதலாம்.

ஆகவேதான் சிங்கள ஆட்சியாளருடன் சேர்ந்து மலையகத்திலே தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் அழிக்கக் காங்கிரஸ் முற்பட்டுள்ளது என்று இன்று குற்றஞ்சாட்டப்படுகிறது. காங்கிரஸின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் இக் குற்றச்சாட்டை நிரூபிப்பதாகவே இருக்கின்றன.

### திறமையான வாண வேடிக்கை

தோட்டத் தொழிலாளரின் பொருளாதார கோரிக்கைகள் சம்பந்தமாக இ. தொ. கா. மிகத் திறமையான முறையில் ஒரு வாண வேடிக்கை நடத்துகிறது.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு விசேடப் பஞ்சப்படி ரூபா 17/50 பெற்றுக் கொடுக்கப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது. (இதுவும் இதுவரை ஜ. தொ. கா வின் பிரசாரக் குண்டாகத்தான் இருக்கிறது). ஜ. தொ. கா. இந்தப் போராட்டத்தில் சேர்ந்து கொள்ளுமாறு இ. தொ. காவை அழைத்தது.

போராட்டம், இயாகம் என்றால் திரும்பிப் பார்க்காமல் காதவழி தூரம் ஓடும் இ. தொ. கா. இதனால் பெரும் சங்கடத்தில் மாட்டிக்கொண்டது. போராட்டமாவது, இ தொ.கா. கலந்து கொள்வதாவது? இச் சங்கடத்திலிருந்து தப்பிக் கொள்ள இ. தொ. கா. ஒரு உபாயத்தைக் கையாண்டது.

"நாங்கள் மாதம் ரூபா 30 சம்பள உயர்வு கேட்டுள்ளோம். ஆகவே ரூ. 17/50க்காகப் போராட வர மாட்டோம்' என்று கூறித் தப்பிக் கொண்டது இ. தொ. கா.

"அத்தோடு தங்கள் கோரிக்கைகளுக்காக தாங்கள் போராடத் தேவையில்லையென்றும் தோட்ட முதலாளிகளுடன் பேசியே அதை வாங்கிக் கொடுத்து விட முடியும் என்றும் இ. தொ. கா. அறிவித்தது.

இது ஜ. தொ. கா. நடத்தப்போவதாகக் கூறும் போராட்டத்தை (அவர்களும் போராட்டம் நடத்த மாட்டார்களென்றே நம்பப்படுகிறது) தடுப்பதற்குக் கையாண்ட உபாயமே!

### குட்டு உடைந்தது

ஆனால் ஜ. தொ. கா. தலைவர் ஜனுப் அஸீஸ் குட்டை உடைத்துவிட்டார்.

ரூ. 17/50 கொடுப்பதற்கே மறுக்கும் தோட்ட முதலாளிகள் ரூ. 30/= எப்படிக் கொடுப்பார்கள் என்று அவர் கேட்கிறார்.

பொருளாதார கோரிக்கைகளுக்காகத் தோட்டத் தொழிலாளர்கள் எங்கே போராட்டத்தில் குதித்து விடுவார்களோ என்று இ. தொ. கா. அஞ்சுகிறது. அந்த அச்சமே ஜ. தொ. கா. நடத்தப்போவதாகக் கூறும் போராட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுவதின் காரணம்.

தோட்ட மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்துக்கும், பொருளாதார உரிமைப் போராட்டத்துக்கும் இம்மாதிரி இ. தொ. கா. முட்டுக்கட்டை போடுவதின் நோக்கம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்ற திட்டத்தைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

அட்டன் மாநாட்டில் எழுப்பப்பட்ட "ஒத்துழைப்புக் கோஷம்" அந்த உண்மையையும் அம்பலப் படுத்திவிட்டதே!

# சுதந்திர உணர்ச்சியை....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யினரின் மொழிக் கொள்கையையும் எதிர்க்கிறார்கள் என்பது பொருளாகும்.

தமிழ் பேசும் மக்கள் மொழிக் கொள்கையை அமுல் நடத்த முனைபவர்களைப் பகிஷ்கரிக்கிறார்கள் என்றால், அந்த மொழிக் கொள்கைக்கு ஆதரவு கொடுப்பவர்களையும் பகிஷ்கரிக்க வேண்டிய நிலை உருவாகும். அப்பொழுது வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள இடதுசாரிக்கட்சியின் எடுபிடிகளான நீங்கள் பகிஷ்கரிக்கப்படுவீர்கள்.

தமிழரசுக் கட்சியினர் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதை எதிர்த்தார்கள். அது, கத்தோலிக்கருக்கு ஆதரவாகத் தமிழரசார் எடுக்கும் நடவடிக்கை என்று அன்று எள்ளி நகையாடினார்கள். இன்று பாடசாலைகளை ஆட்சியாளர் பொறுப்பேற்றதன் முழுப் பலனையும் நாம் அறிய முடிகிறது.

வட-கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படப் போகிறார்கள். தமிழ்ச் சிறார்களின் தொண்டைக்குள்வலுக் கட்டாயமாகச் சிங்களம் திணிக்கப்படப் போகிறது. அல்லது தமிழ்ப் பிள்ளைகள் கல்வி வசதியின்றி ஒதுக்கப்படப் போகிறார்கள்.

எனவேதான் தமிழரசுக் கட்சித்தலைவர்கள் கூறுகிறார்கள் தேசிய மயம், இலங்கையர் மயம் என்பது எல்லாம் சிங்கள மயம், சிங்களவர் மயம் என்று.

இந்த நாட்டில் உண்மையான பொதுவுடைமைத் திட்டம் உள்ள இயக்கம் தமிழரசுக்கட்சி ஒன்றேயாகும். நசுக்கப்படுபவர்களுக்காக அவர்கள் எத்துறையினராயினும், அவர்களுக்காக உழைக்கும் ஒரே இயக்கம் இலங்கைத் தமிழரசுக்கட்சியாகும்.

இந்த நாட்டில் பெரும்பான்மைத் தொழிலாளரை ஒதுக்கும் திட்டத்திற்கு உடந்தையாக இருக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் தாங்களும் ஒரு இடதுசாரி இயக்கம், மார்க்சின் வாரிசுகள் என்று கூறினால் அது மார்க்சிசத்துக்கு மாசு கற்பிக்கப்படுவதாகும்.

மீண்டும் வட—கிழக்கு மாகாணத்திலுள்ள இடதுசாரிக் கட்சியினருக்கு ஒன்று கூறிக் கொள்ள விழைகிறோம்! தமிழ் பேசும் மக்களை நீண்ட காலம் ஒதுக்கி வைக்க முடியாது. அவர்கள் விழித்து விட்டார்கள். இந்நாட்டில் வாழும் பெரும்பான்மையினருடன் சமத்துவமாகச் சரி நிலையில் வாழத் திடசங்கற்பம் பூண்டுவிட்டார்கள். அன்னை தமிழ் மொழிக்கு அரியாசனத்தில் சரியாசனம் பெறுவது என்று முடிவு செய்து விட்டார்கள். இதற்கான இறுதிப் போராட்டத்தின் தலைவாசலில் நுழைந்தும் விட்டார்கள். இதற்கு எதிராகக் குதர்க்கம் பேசினாலோ குந்தகம் விளைவிக்க முயன்றாலோ நீங்களும் அந்தப்பெரும் புரட்சிப் புயலுடன் நிச்சயமாகத் தூக்கியெறியப்படுவீர்கள். எனவே நீங்கள் உதவி செய்ய வேண்டாம், உபத்திரவம் கொடுக்காது இருங்கள்.

ஆட்சியினருக்கு ஒரு வேண்டுகோள்! தமிழ் பேசும் மக்கள் மீது சிங்களத்தைத் திணிக்க முற்படாதீர்கள். தமிழ் பேசும் இனத்தின் அபகரித்த உரிமைகளை நல்ல மனதுடன் வழங்கி நிரந்தர ஒற்றுமைக்கு வழி சமைக்கும் சமஷ்டி அரசியல் அமைப்பை அமைக்க முன் வாருங்கள் தவறினால் நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படும். தமிழினம் பொங்கி எழுந்து விட்டது, புரட்சிப் பெரும் புயல் கிளம்பிவிட்டது. அந்தப் பெரும் புயலில் அகப்பட்டுச் சின்னாபின்னமாக்கப்படுவீர்கள். இதை மனதில் கொண்டு காரியமாற்ற முற்படுங்கள்.

# அமைச்சரவை...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் இந்த இன வெறி பல மடங்கு கொடுமையானது, பயங்கரமானது.

தமிழ் பேசும் இனம், சிங்கள ஏகாதிபத்தியம் அடுக்கடுக்காக அடுக்கிவரும் கொடுமைகளை, இனக்கொலை நடவடிக்கைகளை மூர்த்தண்யமாக எதிர்த்துப் போராட இன்றே கங்கணம் செய்து கொள்ள வேண்டும். இன்றேல் தமிழ் பேசும் இனம் அழிந்து விடும். அமைச்சரவையின் முடிவுகள் இதைவிட வேறு முடிவுக்கு வழி வைக்கவில்லை.

# சிங்களத்தை அமுல்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லைத் தமிழ் பெற வேண்டுமென்பதும் நியாயமும், சரியானதுமல்லவா? சிங்களம் பேசும் மக்களுக்கு சிங்களம் எத்தகையதோ, அத்தகையதே தமிழ் பேசும் மக்களுக்குத் தமிழும் என்பதை, நீதியின் பெயரில் நாம் எடுத்துக் கூறவா காதா?

உங்களுடைய மக்களுக்கும், எங்களுடைய மக்களுக்கும், ஓர் அந்நிய மொழியை அரசகரும மொழியாக வைத்திருந்தது எத்தகைய வருத்தத்தைத் தந்தது என்பது எங்கள் எல்லோருக்குமே தெரியும். அது எங்களுக்கு ஓர் அந்நிய எசமான் உண்டு என்பதைக் குறித்தது. எமது மக்களில் 95 சதத்தினரை அது கல்வியற்றோராக்கியது. எமது மொழி, கலாச்சாரங்கள் அமுக்கப்பட்டதை அது குறித்தது. அடிமைப்பட்ட, விலங்கிடப்பட்ட மக்களின் நிலையில் நாமுள்ளோமென்பதை அது அத்தாட்சிப் படுத்தியது.

ஆகவே, சுயமரியாதை பேணும் இனமாகிய நாம், எம் மீது படுபாதகமான, நீதியற்ற முறையில் சிங்களம் திணிக்கப்படுவதைத் தொடர்ந்து எதிர்ப்போம். ஆகவே, சிங்களத்தை எம் மீது திணிக்கும் தனது விபரீத நோக்கத்தை அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு, அதன் கைகளில் கருவியாக விளங்குபவர்களாகிய உங்களையும், மற்றும் எந்த இனத்தையோ, மொழியையோ சார்ந்த அரசாங்க சேவையாளரையும் நாம் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளோம். அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட இத் தீங்கான, நீதியற்ற நடவடிக்கையை நிறைவேற்றுவதில் நீங்கள் உங்கள் சம்மதத்தை உளமார அளித்திருக்காமலிருக்கலாம். ஆனால் அரசாங்கத்தின் கருவிகளாக இருக்க நீங்கள் உங்களை விட்டுக் கொடுத்து, அதன் அநீதிக்கு ஆதரவு அளிக்கும் வரைக்கும், நாங்களும் இந்தப் பகிஷ்கார இயக்கத்தை நடாத்தியே தீருவோம். அரசாங்கத்திடம் நீங்கள் பெறும் ஊதியம், உங்கள் சகோதரராகிய எங்கள் மீது அநியாயமான முறையில் சிங்களம் திணிக்கப்படுவதில், அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பதிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளும் உங்களது கண்ணியமான கடமையிலிருந்தும், உங்களை நீக்கிவிட முடியாது.

ஆகவே, தமது சுயமரியாதை, உரிமைகள், சுதந்திரம் இவற்றை நிலைநாட்டி, உங்களுக்கும் எங்களுக்கும் சொந்தமான, இந்த, எமது தாய்நாட்டில் தமது உரிமையான இடத்தைப் பெற விழையும் ஓர் இன மக்களின் போராட்டமே இப் பகிஷ்கார இயக்கம் எனபதைத் தாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டுமென உங்களை வேண்டிக் கொள்கிறோம்.

தங்கள் நன்றியுள்ள,

இலங்கைத் தமிழரசுக் கட்சி.

# எமது எதிர்ப்பு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்த உணர்ச்சியோடு பகிஷ்கார இயக்கத்தில் ஈடுபட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களாகிய எம்முடைய பணத்தைக் கொண்டே அரசாங்கம் எம்மை நசுக்கப் பிரயத்தனம் செய்கிறது. அண்மையில் இலங்கையின் ஆயுள் இன்சூரன்ஸ் தொழிலை அரசாங்கம் தேசியமயமாக்கி, சுவீகரித்துக் கொண்டது. அதன் பயனாக இந்தத் தொழிலினால் வசூலிக்கப்படும் வருவாய் அரசாங்கத்திற்கே உரியது. இந்த வருவாயில் நூற்றுக்கு 45 விதம் தமிழ் பேசும் மக்களிடம் இருந்துதான் வசூலாக்கப்படுகிறதென்று மதிப்பிடப்படுகிறது. அப்படியானால் ஆயுள் இன்சூரன்சில் அரைவாசிப் பணம் நாம் தான் அரசாங்கத்திற்குக் கொடுத்து உதவுகிறோம். அதை நாம் உடனடியாக நிறுத்த வேண்டும். அரசாங்கத்தின் சேமிப்பு இயக்கங்களிலும் ஆயுள் இன்சூரன்ஸ் தொழிலும் யாம் பணத்தைப் பிரயோகிக்கக் கூடாது. கிராமங்களில் நடாத்தப்படும் சீட்டு முறைகளைப் பின்பற்றி நாம் நமது பணத்தைச் சேமித்துக் கொள்ளலாம்.

திருமதி. அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழ்த் தாய்க்குவம் போராட்டத்திற்கு ஆயத்தம் ஆக வேண்டும் என்று கூறினார். என்றோ ஒரு நாள் எம் உயிர் போவது உறுதி. அது ஏன் எம் இனத்தைக் காக்கப் போகக் கூடாது என்று உணர்ச்சியுடன் அவர் கூறினார்.

கையிருப்பிலிருந்து பெறலாம்

**அஸ்பெஸ்டாஸ் தகடுகள்**
(தட்டையானது)

**கல்வனைஸ்ட் நெளிவுத் தகடுகள்**
24, 26, 28, 30, 32 BWG & 35 USG

**கல்வனைஸ்ட் பைப்புகள்**
(கனம் குறைந்ததும் மத்திய தரமும்)

**பித்தளைத் தகடுகள்**
**செம்புத் தகடுகள்**
4' X 4' - 18, 20 X 22 ரூத்தல்களாக

**மைல்ட் உருக்கு ஆங்கிள்களும் தட்டையானவையும்**
எல்லா அளவுகளிலும்

**பூட்கம்பியும், கம்பி ஆணிகளும்**
(கிராண்ட்பாஸ் மெட்டல் இன்டஸ்ட்ரீஸ் ஸ்தாபனத்தாரின் உள்ளூர் தயாரிப்பு)

தொடர்பு கொள்ளவும்:

**ஜபர்ஜி பிரதர்ஸ்,**
நிர். 161, குமார வீதி,
புறக்கோட்டை, கொழும்பு-11.

தொலை பேசி : 78501

# வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

### நீங்களும் நானும்

வளர்மதி மேலும் மேலும் வளர்வதையிட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். 'வளர்மதி' வளர எனது ஆசிகள் பலப்பல.—தி. மதுரம், அளவெட்டி.

உமது அன்புக்கும், ஆசிக்கும் நன்றி. உம்மைப் போன்றோரின் ஊக்கமே, எமது ஆக்கமாகும்.

'வளர்மதி' தற்பொழுது புதுப் பொலிவுடன் வெளி வருகின்றது. பல அறிவுரைகளும், அறிவு வளர்ச்சிக்குரிய கட்டுரைகளும் வெளியாகின்றன. 'புதுமைத்திருடன்' தொடங்கும் பொழுதே நன்றாக விருக்கின்றது. எனது அங்கத்துவ எண்ணைத் தயவுசெய்து தெரிவிப்பீர்களா?— மஸ்வரி, மூளாய்.

தங்கள் பாராட்டுக்கு நன்றி. அங்கத்துவ எண்ணை விரைவில் தெரியப்படுத்துவேன்.

'சுதந்திரன்' வளர்மதிப் பகுதியைப் படித்து வரும் ஆயிரக்கணக்கான நேயர்களில் நானும் ஒருவன். இப்பகுதியில் பங்கு கொள்ள வேண்டுமென்பது எனது நெடுநாளைய ஆசை. 'எனது கிராமம்' என்ற தலைப்பில் ஓர் கட்டுரை அனுப்பியுள்ளேன், சேர்ப்பீர்களா?—க. சுவாமிநாதன், பண்டத்தரிப்பு.

பார்த்துப் பிரசுரிக்கிறேன், உங்களது ஆசையைப் பூர்த்தி செய்வது தானே எனது தொழில்?

இடைக்காடு இந்துக் கல்லூரியில் படிக்கும் மூவர்கள் அங்கத்தவர்களாகச் சேர விரும்புகிறோம். ஆகவே, ஒன்பது அங்கத்துவப்பத்திரங்கள் அனுப்பி வைக்கிறீர்களா? —மருமகள், இடைக்காடு.

அங்கத்துவப் பத்திரங்களை நீங்கள் 'சுதந்திரன் வளர்மதி'ப் பகுதியிலிருந்து கத்தரித்து அல்லவா அனுப்பி வைக்க வேண்டும்? சீக்கிரம் அனுப்பி வைப்பீர்களென நம்புகிறேன்.

எனது பெயர் தில்லையா, சுட்டிலக்கம் 3453. எனது இன்னொரு பெயர் பாலசுந்தரம். இப்பெயரை 'மணிவண்ணன்' என மாற்றி, உங்கள் பகுதிக்கு விடயம் அனுப்ப விழைகிறேன். ஏற்றுக்கொள்வீர்களா? —பா. தில்லையா, கரவெட்டி.

ஓ! தாராளமாக எழுதி அனுப்புங்கள். வண்ணம், வண்ணமாக எழுதி அனுப்புங்கள், என்ன?

எனது பெயர் 'வளர்மதி'யில் வந்ததும், சிறு கதை ஒன்று எழுதி அனுப்பினேன், இதுவரை அது பிரசுரமாகவே இல்லை. கதையைப் பிரசுரிக்கப் போகிறீர்களா, அல்லது திருப்பி அனுப்பப் போகிறீர்களா? இரண்டில் ஒன்று செய்யுங்கள். உங்கள் மேல் கோபம்கொண்டிருக்கும்,—எஸ். சேவியர், பதுளை.

கோபம் வேண்டாம், மருமகனே! தங்கள் இலக்கியத்தாகம் விரைவில் தீர்த்து வைக்கப்படும். வேறு நல்ல கதை, கட்டுரைகளை (சுருக்கமாக) எழுதி அனுப்புங்கள்.

மர்மத் தொடர் கதை:

## புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

திடீரென்று எழுந்து, "என்ன சார்! வாடகைக் கார் அபேஸ் பண்ணப்பட்டுவிட்டதாமா? ஐயையோ......! நான்கூட கார்ச் சாவியை எடுக்காமல் வந்துவிட்டேன் காரிலேயே இருக்கிறது. இரண்டு நிமிடத்தில் இதோ வந்துவிடுகிறேன்...", என்று பரபரப்புடன் கூறிவிட்டுக் காரை நோக்கி ஓடினான். சிறிது நேரத்தில் கார் அசுர வேகத்தில் பறந்தது.

பொலீஸ் நிலைய அறிவித்தல் பலகையில் காணப்பட்ட புகைப்படம் அவனது நினைவிற்கு வந்தது. "டிங்கிரி பண்டாவின் புகைப்படம் இங்கு ஏன் ஒட்டப்பட்டிருக்கிறது" என்று முணுமுணுத்தன அவனுடைய உதடுகள். அப்போது......!

பொலீஸ் ஜீப்பொன்று கறுப்புக் கண்ணாடியின காரைத் துரத்திக்கொண்டு வந்தது. இளைஞனின் கார்... முன்னைவிட இரட்டிப்பு வேகத்தில் பறந்தது. ஜீப்பின் வேகமும் திடீரென்று கூடியது. இளைஞன் ஒரு வளைவில் திரும்பியதும் அங்கு தென்பட்ட சிறிய சந்தொன்றில் காரைச் செலுத்தி நிறுத்திவிட்டு மின்வேகத்தில் வெளியேறி ஒரு பனை மரத்திற்குப் பின்னால் பதுங்கிக் கொண்டான். அப்போது...... அவனுடைய கையில் சுழல் துப்பாக்கி காட்சியளித்துக் கொண்டிருந்தது.

ஜீப்பில் இருந்தவர்களின் கண்களில் அந்தச் சிறிய சந்து தென்படவில்லையோ என்னவோ... ஜீப் நேரே உறுமிக் கொண்டு விரைந்தது. சிறிது நேரத்தில் கறுப்புக் கண்ணாடி காரில் ஏறிக் கொண்டு எதிரில் தென்பட்ட 'இறவல்' ரோட்டில் காரைச் செலுத்தினான். வழியில் காணப்பட்ட ஒரு பெரிய மைதானத்தில் ஏதோ ஒரு பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. எங்கும் ஒரே ஜனத்திரள். அங்கு பல கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றின் ஓரத்தில் இளைஞனும் காரை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான். அவனுக்குத் 'திக்' என்றது. அவனைத் துரத்திவந்த ஜீப் எதிரில் வந்துகொண்டிருந்தது.

கண்மூடித் திறப்பதற்குள் காரிலிருந்து வெளியேறிக் கூட்டத்துள் நுழைந்து மக்கள் மத்தியில் பதுங்கிக் கொண்டான் ஜீப், கார்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தையடைந்ததும் நின்றது. இன்ஸ்பெக்டர் விஜேதாசவும் பொலீசார் சகிதம் ஒவ்வொரு காரையும் பரிசோதித்துக் கொண்டு வந்தார். திடீரென்று நின்றார் இன்ஸ்பெக்டர்! அவருடைய கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. அவர் துரத்தி வந்த வாடகைக் கார் அவர் கண்களில் பட்டுவிட்டது. அடுத்த வினாடி எல்லாப் பொலீசாரும் அக்காரைச் சூழ்ந்து கொண்டனர். அதே நேரத்தில்...... சற்றுத் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த புத்தம் புதிய காரொன்று ஓசைப்படாமல் கிளம்பியதைப் பொலிசாரோ, இன்ஸ்பெக்டரோ கவனிக்கவில்லை. அந்தக் காரைக் கறுப்புக் கண்ணாடி இளைஞன் செலுத்திக் கொண்டிருந்தான்!

(4)

கண்டியில் மிகவும் பிரசித்திபெற்ற 'மல்லிகா' பட்டு மாளிகைக்குச் சற்றுத் தொலைவில் ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரில் சினிமா நட்சத்திரங்களின் கார்களிற்போல் மூன்று பக்கங்களிலும் பட்டுத்திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தக் காரிலிருந்து கறுப்புக் கண்ணாடி இளைஞன் இறங்கினான்......! அவன் தடபுடலாக உடையணிந்து ஒரு பெரிய இலட்சாதிபதி போலக் காட்சியளித்தான். அவனுடைய கையிலிருந்த தோல்பை அவனுடைய தோற்றத்தை மேலும் கவர்ச்சியாக்கிக் கொண்டிருந்தது.

அவனைக் கண்டதும் பட்டு மாளிகை உரிமையாளர் திரு. ராஜு ஓடோடி வந்து உற்சாகமாக வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கப் பல விலை உயர்ந்த சேலைகள் அவன் முன் எடுத்துப் போடப்பட்டன. அவன் அவற்றை மிக அக்கறையோடு பரிசீலித்துக் கொண்டிருந்தான். விலை உயர்ந்த சோடாவும், 'நெவிக்கட் சிகரெட்'டும் அவனுடைய முன்னிலையில் மிகப் பயபக்தியுடன் வைக்கப்பட்டன. வெளிவேடத்தைப் பார்த்து மனிதனை மதிப்பிடும் உலகத்தை எண்ணி மனதிற்குள் சிரித்துக் கொண்டான அவன்!

"ஐயையோ...! உங்களுக்கு ஏன் இந்தச் சிரமமெல்லாம்" என்று இங்கிதம் நிறைந்தவனைப் போல கூறிக்கொண்டு சோடாவைப் பருகிச் சிகரெட்டைப் புகைத்தான். "அதோ...! அந்தக் காரில் எனது மனைவி, குழந்தை சகிதம் இருக்கிறு...... குழந்தைக்குச் சுகமில்லை... இல்லாவிட்டால் இங்கு வந்துவிடுவா... நான் இவற்றை அவளிடம் காட்டி, அவ எதைத் தெரிந்தெடுக்கிறாவோ அதை வாங்கிக் கொள்கிறேன்....." என்று கூறிக்கொண்டு ஐந்து விலை உயர்ந்த சேலைகளுடன் மெள்ள எழுந்தான்...... எதிரில் அவன் கண்ட காட்சி...! அவனைத் திகைக்க வைத்தது. அவனுடைய வாயிலிருந்த சிகரெட் அவனை அறியாது நழுவி நிலத்தில் விழுந்தது. அப்போது......

(தொடரும்)

### சுதந்திரன் பேச்சுப் போட்டி

சுதந்திரன் பேச்சுப் போட்டியில், யாழ்ப்பாணம், கொழும்பு மாவட்டங்களுக்கான இடையிறுதித் தேர்வுப் போட்டிகள் முடிவடைந்துள்ளன.

இம்மாதம் 5, 6ம் திகதிகளில் அட்டனில் நடைபெறவிருந்த இடையிறுதித் தேர்வு 12, 13ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

5, 6ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) வவுனியா மாவட்டத்துக்கான இடையிறுதித் தேர்வும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு, அடுத்த வாரம் இப்பகுதியைக் கவனிக்கவும்.

—பேச்சுப் போட்டி ஆசிரியர்.

## அறிஞர் தரும் அமுத வாக்கு

உரிமையை இழப்பதை விட மக்கள் பழையபடி காட்டுமிராண்டிகள் ஆவதே மேல். ஏனெனில் முன்னேற்றத்திற்கு உரிமையே உயிர். அதுவே வித்து. அதுவே உரம். அதுவே வெப்பமும் மழையும். அதுவே காதல்; இன்பம்.

—இங்கர்சால்

புன்முறுவல் பூத்த முகத்தோடு கொடு. மட்டமான சாக்குக் கூட விலையாகி விடும். எரிந்து விழுந்தபடி கொடு, மிக நல்ல பண்டம் கூட விட்டுப் போகாது. புன்னகை; அதுதான் அனைவரையும் கவர்ந்த நன்நகை.

—நதேனியல் ஹாதா

வாழ்க்கை என்னும் இன்னிசை இரண்டு கம்பிகளின் இனிய அசைவுகளால் உருவாக்கப்படுகின்றது. ஒரு கம்பியின் பெயர் தொண்டு. மற்றொன்றின் பெயர் அன்பு. தொண்டு உலகத்தைக் களிக்கச் செய்கிறது. அன்பு உள்ளத்தைக் களிக்கச் செய்கிறது.

— காண்டேகர்

மனித சக்தி 'விதி' என்னும் சங்கிலியால் கட்டுண்டு கிடப்பது பெரும் பரிதாபமே.

—எமர்சன்

சேகரித்தவர்:
ஆனந்தி மெய்யழகன்,
அநுராதபுரம்.

எனது கிராமம்

### காரணவாய் தெற்கு

(ஜே. ஜெயக்குமார்)

எனது கிராமம் காரணவாய் தெற்கு. எனது கிராமத்திலிருந்து யாழ்ப்பாணம் பதினைந்து மைல் தூரத்தில் உள்ளது. எனது கிராமத்தில் சைவ மக்களே அதிகமாக வசிக்கிறார்கள்.

இங்கு நூற்றுக்கு அரைவாசியானோர் விவசாயம் செய்கிறார்கள். மிகுதிப் பேர் அரசாங்க உத்தியோகத்திலும், தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் பணி புரிகிறார்கள். எனது கிராமத்தவர் ஒற்றுமையையும், பொறுமையையும் பெரிதும் விரும்புகிறார்கள். இங்கு வதியும் சிறுபான்மைச் சகோதரர்கள் பயமின்றி யாவருடனும் சகஜமாகப் பழகுகிறார்கள்.

எனது கிராமத்து இளைஞர்கள் வரப் போகும் உரிமைப் போரில் கலந்து கொள்ளுவதற்காக, பெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர் எனதுகிராமத்தில், வளரும் எழுத்தாளர் பலர் இருக்கின்றனர்.

இங்கு பிரசித்தி பெற்ற நான்கு சைவ தேவாலயங்களும், நான்கு பாடசாலைகளும், "கலா பழப்பகம்" என்னும் ஓர் வாசக நிலையமும், சன சமூக நிலையமொன்றும் உள்ளன. ஒரு சந்தையும், பல கடைகளும், இரண்டு ஆலைகளும் இருக்கின்றன. வெகு விரைவில் "காரணவாய் தெற்கு நலன் பேணும் சங்கம்" ஒன்று பல பெரியோர்களால் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

எனது கிராமம் உடுப்பிட்டித் தொகுதியில் முக்கியம் வாய்ந்ததாகும். இந்தத் தொகுதிப் பிரதிநிதி கட்சிபேதம் பாராது தமிழ் மக்களுக்காக உழைக்கும் திரு. மு. சிவசிதம்பரமாகும். எங்கள் கிராமம் வெகு விரைவில் மிக முன்னேற்றமடைய வேண்டுமென்பதில் எல்லோரும் ஆவலுடையவர்களாயுள்ளார்கள்.

## இதோ விளக்கம்...

"ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்"—இப் பழமொழியிலிருந்து நாம் அறிவது, ஆதிகால வைத்தியர்கள் மனிதர்களைப் பலியிட்டுப் பரிசோதனை செய்தனர் என்பதல்ல. இதன் உண்மையான கருத்து 'ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்பதே. வேர்—பேர் ஆகி விட்டது! ஆதிகால வைத்தியர்கள் வேர், மூலிகை போன்ற தாவரங்களையே மருந்தாக்கினர்.

'தமிழழகன்',
உடுவில் அளவெட்டி வடக்கு.

# கழகச் செய்திகள்

## பாரதியை முழுமையாகக் காண்போம்

### செங்குந்த இந்துக் கல்லூரியில் திரு. புதுமைலோலன் பேச்சு

"ஒரு நாட்டில் எந்த இயக்கமாயினும் வெற்றி பெற வேண்டுமானால், முதலில் மக்களின் மனத்திலே கருத்துப் புரட்சி தோன்ற வேண்டும்; இந்தியாவின் விடுதலைக்கு வழி செய்தவர் மகாத்மா காந்தியடிகள் என்றால் அதற்கான பக்குவத்தைத் தென்னாட்டு மக்களின் மனத்தில் ஏற்படுத்தியவர் பாரதியார் என்றே கூற வேண்டும். பாரதியை ஒரு பொதுவுடைமைவாதி, நாஸ்திகன், சமுதாயப் புரட்சியாளன் என்றெல்லாம் தத்தம் அளவு கோல் கொண்டு தனித் தனியே பார்க்காது, அவனை முழுமையாகக் காண்பதற்கு நாம் முயல வேண்டும். தமிழர்க்காகவும் தமிழ் மொழிக்காகவும் பாரதி செய்த தொண்டுகளை நாம் மறந்து போகக் கூடாது."

இவ்வாறு சென்ற 18-9-63 புதன்கிழமை திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாவில் "யார் இந்த பாரதி?" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில் திரு. புதுமைலோலன் குறிப்பிட்டார்.

பல்கலைக் கழகம் புகுமுக வகுப்பு மன்றத்தினரால் நடாத்தப்பட்ட இவ்விழாவிற்குக் கவிஞர் விடிவெள்ளி தலைமை தாங்கினார். செல்வி எஸ். தந்பராதேவி வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவின் தொடக்கத்தில், "சேமமுற வேண்டு மெனில்......" என்ற தலைப்பில் கவிஞர் விடிவெள்ளி அவர்களின் தலைமையில் சிறப்பான முறையில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. ஈழத்தின் பிரபலமான கவிஞர்களான சொக்கன், பண்டிதர் இராமச்சந்திரன், அம்பி, ச. வே. பஞ்சாட்சரம், சத்தியசிவன் ஆகியோர் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினர்.

செல்வி சத்தியவதி, செல்வி இராணியம்மா ஆகியோர் பாரதி பாடல்களை இசையுடன் பாடினர். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் உரை நிகழ்த்தினார்கள்.

ஈற்றில் செல்வன் சி. பாலசுப்பிரமணியம் நன்றியுரை கூறினார்.

### சந்தி வெளியில் கலை விழா

சந்திவெளிப் பொதுநல வாலிப மன்றத்தினரின் ஆதரவில் கடந்த 21-9-63 சனிக்கிழமை மாலை 7 மணி முதல் இரவு 4 மணி வரையும் பிரமாண்டமான ஓர் கலைவிழா நடாத்தப்பட்டது.

சந்திவெளி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வீதியில் நிறுவப் பெற்ற பிரஸ்தாப கலைவிழாவுக்கு கோறளைப் பற்றுப் பிரிவுக் காரியாதிகாரி திரு. வி. ஏ. ஜே. காசிநாதர் தலைமை தாங்கினார். கல்குடாத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. பொ. மாணிக்கவாசகர் விழாவைச் சம்பிரதாய முறைப்படி மங்கல விளக்கேற்றித் திறந்து வைத்தார்.

செல்விகள் மா. கலாநிதி, பானுமதி, குமாரி மாலதி, ஆகியோரின் தமிழ் வாழ்த்துப்பாடல், செல்வன் சு. சந்திரசேகரத்தின் வரவேற்புரை, செல்வி ராஜினி ஜோசப்பின் வரவேற்பு நடனம் ஆகியவை விழாவில் இடம் பெற்றன.

கிரான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் "சூழ்ச்சியின் வீழ்ச்சி" நாடகம் சந்திவெளி விவாடபர்வம் வடமோடி நாட்டுக் கூத்து சந்திவெளிப் பாடசாலை மாணவிகளின் பாட்டு, கொம்புப் பாட்டு, பொலிப் பாட்டு, கிராமியக் கவி, கும்பத்து மாரியாட்டம், கிரான் மாணவி, செல்வி மு. சீதாலெட்சுமியின் நடனம், சங்கீத பூஷணம் ராஜுவின் இன்னிசை விருந்து, சந்திவெளி அ. விமலாவதியின் நடனம் என்பனவும் விழாவில் இடம் பெற்றன.

ஈற்றில் திரு. க. கிருஷ்ணபிள்ளை (ஆசிரியர்) நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

### நெடுந்தீவு சமூக முன்னேற்றச் சங்க நடவடிக்கைகள்

'நெடுந்தீவு மக்கள் பல ஆண்டுகளாக அரசாங்க மராமத்துப் பகுதியினரால் நடாத்தப்படும் மோட்டார் படகுச் சேவையால் அதிருப்தியடைந்துள்ளனர். இச் சேவையிலிருந்து விடுவித்து நூற்றுக் கணக்கான மோட்டார் படகுகள் வசதியுள்ள போட் கொமிஷன் நிர்வாகத்தில் விட சங்கத்தால் மகஜர் ஒன்று தயாரித்து, ஆயிரக் கணக்கான கையெழுத்துக்கள் திரட்டி மந்திரியிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். குறுகட்டுவான் பாலவேலை முடிந்ததும் தினம் நாலு சேவையை எதிர்பார்க்கிறோம். நெடுந்தீவு பரந்த வெளிகளில் எதேச்சையாக வாழும் பொது மக்களுக்கு சொந்தமான மாடுகள், படுபாவிகளான காடையர்களால் படுகொலை செய்யப்படுகின்றன. இந் நிலை வளர விடாமல் முற்றாக தடுத்து நிறுத்த வட பொலிஸ் பகுதியாரினதும் மாகாணப் பொது மக்களினதும் ஒத்துழைப்பைக் கோரி வருகிறோம். நெடுந்தீவு வெட்டுக்சுழியை நல்ல தண்ணீர் ஏரியாக்கவும் பஸ் சேவையை ஏற்படுத்தவும், ஆஸ்பத்திரியை திருத்தியமைக்கவும். நல்ல மருந்துகள், டாக்டர்கள் பெறவும் அரசாங்கத்திடம் கேட்டுள்ளோம். விளையாட்டு மைதானம், றோட்டுகளுக்குப் பெயரிடுதல் முதலிய பற்றி உள்ளூர் ஆட்சி மன்றத்துடன் தொடர்பு கொண்டு வருகிறோம். மணலுக்கிணற்றுக் கருகாமையில் கடற்படை விடுதி அமைக்கப் போவதாகக் கேள்விபட்டோம். மணலுக்கிணற்றுக் கருகாமையில் நூற்றுக் கணக்கான பருவமங்கையர்கள் தண்ணீர் எடுக்கச் செல்வதால் கடற்படையினரின் தொல்லைகளுக்குள்ளாக வேண்டி வருமென எண்ண வேண்டியுள்ளது. இது குறித்தும் யோசித்து நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளோம்.' இவ்வாறு நெடுந்தீவு சமூக முன்னேற்றச் சங்கம் அறிவித்துள்ளது.

### மட்டக்களப்பில் 'வானொலிமாமா'

"சிறுவர்களிடம் அமைந்துள்ள இயற்கைத் திறமைகளை விருத்தியடையச் செய்ய வேண்டிய பொறுப்பு பெரியவர்களுடையதே. எதிர் காலத்தில் பல சிறந்த கலைஞர்கள் தோன்ற வேண்டுமானால் நாம் சிறுவர்களுக்குக் கலைத்துறையில் ஆர்வமூட்டி ஊக்கமளிக்க வேண்டும்." இவ்வாறு மட்டக்களப்புச் சிறுவர் கலைக் கழகம் அளித்த வரவேற்புபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் 'வானொலி மாமா' கூறினார். கூட்டத்திற்குத் திரு. மாஸ்டர் சிவலிங்கம் தலைமை தாங்கினார்.

'வானொலி மாமா' தொடர்ந்து பேசுகையில் மட்டக்களப்புச் சிறுவர் கலைக் கழகத்தின் கலைச் சேவையை வெகுவாகப் பாராட்டினார். செல்வி. ரவீந்திரா இராசதுரை வரவேற்புரை நிகழ்த்தினார்.

செல்விகள் வனஜா பரம், சசிகலா பரம் ஆகியோரின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.

### 'கலைஞர்களின் உள்ளம் பரிசுத்தமாக இருக்கவேண்டும்'

"சிறந்த கலை வளர வேண்டுமென்றால் கலைஞர்களின் உள்ளத்தில் என்றும் பரிசுத்தமும், பலமான நம்பிக்கையும், தளராத முயற்சியும் இருக்க வேண்டும். நாடகக் கலையை வளர்க்க எண்ணும் நமது கலைஞர்கள் எல்லோருமே எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிக்கவும் தயாராக இருக்க வேண்டும். எங்களிடம் அந்தப் பரிசுத்தமான எண்ணம் இல்லாவிட்டால் நாம் கலையை வளர்ப்பதில் அர்த்தமே இல்லை."

இவ்வாறு ஜனாப் எம். இஸட். எம. கமால் காரியப்பர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சம்மாந்துறை கலாபிவிருத்திக் கழகக் கூட்டத்தில், நாடகக் குழுவின் பொறுப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது ஜனாப் யூ. செயின் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும், ஏ. எல். எம். யாசின், எஸ். எச். எம். முஸ்தபா, எஸ். எஸ். மணியம், எம் மீராமுகையதீன் ஆகியோரும் பேசினர்.

இறுதியில் பொதுச் செயலாளர் ஜனாப், யூ. எம். முஸ்தபா நன்றியுரை கூறினார்.

### புதிய கார் பட்டரி

இப்பொழுது கார் பட்டரிகளுக்குள்ள சக்தியிலும் பார்க்க 15 சத வீதம் அதிகமான சக்தி கொண்ட புதிய பட்டரி இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை இங்கிலாந்திலுள்ள ஓட்ஹாம் அன்ட் சன் லிமிட்டெட் தாபனத்தார் கொடுத்துள்ளனர். இத் தாபனத்தார் கார், பட்டரி முதலியவற்றை 130க்கும் அதிகமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்பவர்களாவர்.

## சங்கப் பலகை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

'உழைப்பு' உள்ளத்தை உருக்குகிறது. 'நல்லான்' போன்றவர்கள் நல் வாழ்வு பெறுவது என்றோ?

பருவ நினைப்பால் துடிக்கிறவர்களுக்குப் பிறருடன் கதைப்பது கூட ஆற்றுப் படையாக அமைகிறது போலும். இளமையின் 'சலனத்தை' உளவியல் கண்ணோட்டத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். ஆசிரியரின் திறமைக்கு இதுவும் ஒரு முத்திரை.

கலியாணத்துக்குமுன் களங்கப்படுவதும், பின்னர் காதலித்தவன் இருக்க வேறொருவனைக் கைப்பிடிப்பதும் போன்ற மும்முனைச் சம்பவம் சாதாரணமானது என்ற போதும், ஆசிரியரின் எழுத்துலக முதிர்ச்சியின் சாயல் கதை பூராவும் இழையோடுகிறது.

'வாழ்வு'. இறந்து விட்ட ஒருவர் சூக்கும சரீரியாக வீட்டில் நடப்பவற்றைக் காண்பது போன்று கதை புனையப்படுவது புதியதல்ல. ஆங்கில எழுத்தாளர் எச். ஜி. வெல்ஸ் போன்றவர்கள் அறிவியல் துணைகொண்ட கதைகளில் சரீரத்தை மறைத்துக் கொண்டு நாட்டில் நடப்பவற்றை ஆராய்வது போன்ற கற்பனையில் ஒரு அங்கமே இது. ஆனால், ஈழத்தில் இத்துறை முயற்சி கைவரப்பெறவில்லை.

ஆசிரியர் கந்தசாமிக்காக 'ஒரு சொட்டுக் கண்ணீர்' விட்டுத்தானாக வேண்டும் என்ற முறையில் சம்பவங்கள் உள்ளத்தைத் தொடுகின்றன.

ஆசிரியர் ஆறுமுகத்தின் 'ஆசை மயக்கம்', "ஈஸ்வரியின், நான் வரட்டுமா......?" ஐந்து ஆண்டுகள் மட்டும் ஒலித்துவிட்டால் போதுமா?

'போட்டி ஒழிந்தது.' சண்முகம் — நாகப்பன் ஆகிய இருவருக்கும் மத்தியில் மட்டு அல்ல, இன்றைய் இலக்கிய உலகிலும் கூட, பிரதேச மணம் புனிதம் கெடாமல் காக்கப்பட்டுள்ளது.

காதலுக்குப் பிளாட்டோ வகுத்த வரைவிலக்கணத்தின் இலக்கியமே 'பெண்.' காதலின் எல்லை......

'காதல் வென்றது.' வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாக இருந்த போதிலும் புதுமை எதுவுமே தென்படவில்லை. போர்வீரன் பிக்குவாகி மீண்டும் போர்வீரனாகிறான், பேரழகி ஒருத்தியால்.

மனைவி பிரசவத்திற்காகப் பிறந்த இடம் சென்றிருக்கையில் எழுத்தாளர் அயல் வீட்டு இளம் பெண்ணுடன் தவறாக நடந்து கொள்ள முனைந்து, தவறிவிட்டார். கதையின் முடிவில் எதையுமே காண முடியவில்லை.

சுடலையாண்டியில் சுடலையில் சில்லறைச் சல்லிதேடும் சிற்றம்பலம் நோய்வாய்ப்பட்டு ஆசிரியரின் பிரார்த்தனையால் சுகமுற்றார். சம்பவங்களை அப்படியே கண்முன் நடப்பதுபோல் சித்தரித்திருப்பது போற்றத்தக்கது.

கதைகளில் சாதாரண பாத்திரங்கள் முதல், மேல் நிலையில் உள்ளவர்கள் வரை, ஆங்காங்கே காட்சி கொடுத்த போதிலும் பெரும்பான்மையான இடத்தை தமிழ் ஆசிரியர்களும், அரசியல்வாதிகளும் எழுத்தாளர்களும் பிடித்திருப்பது ஒரு மாதிரியாக உள்ளது. பெரும்பான்மையானவர்கள் இலட்சிய ஈடேற்றமின்றி தோல்வி கண்டவர்களாகவே உள்ளனர். இன்றைய சமுதாய 'வாழ்வு' அது போலும்.

அனேக இடங்களில் தனித் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்தது பாராட்டக் கூடியது. ஒரு குழுவினர் கூறுவது போன்று சம்பாஷணைகளின் போது 'கொச்சை' நடையினைப் பின்பற்றாது சாதாரண எளிய சொற்களைப் பிரயோகித்திருப்பது பாராட்டக் கூடியது. சம்பாஷணைகளின் போது தூய சொற் பிரயோகம் இருந்த போதும் செயற்கையாகத் தெரியவில்லை. இது நாவேந்தனுக்குரிய தனிச் சிறப்பு.

'வாழ்வு' ஈழத்திலும் உயிர்த் துடிப்புள்ள சிறந்த எழுத்தாளர்கள் உளர் என்பதற்கு எடுத்துக் காட்டு.

## இலங்கை எழுத்தாளன்

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் திங்கள் இதழ்.

ஆசிரியர்; பண்டிதர் சு.வே.
வெளியீடு: இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 336, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்.

திரு. சி.சு. செல்லப்பாவை ஆசிரியராகக் கொண்டு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'எழுத்து' என்னும் மாத இதழ் தமிழ் இலக்கிய உலகிற்கு அவ்வப்போது ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்குவதுடன் குறிப்பாக விமர்சன இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றி வருவது குறிப்பிடத் தக்கது. அதன் விதியைப் பின் பற்றி வரும் 'இலங்கை எழுத்தாளனு'ம் ஈழத் தமிழ் இலக்கிய உலகிற்கு ஆக்கபூர்வமான பணியினைச் செய்யும் என்பதை முதல் இதழிலேயே ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது.

பண்டிதமணி அவர்களின் 'சங்கத் தமிழ்' என்னும் அரிய கட்டுரையுடன் முதல் இதழ் வெளியாகி உள்ளது. சிற்பி அவர்களின் 'யதார்த்தமும் கற்பனையும்' இன்றைய நிலைக்கு அவசியம் வேண்டியது.

இரண்டாவது இதழையும் பண்டிதமணி அவர்களின் 'சங்க காலத்துக்குப் பிறகு...' அலங்கரிக்கிறது. 'மரபு' பற்றிய கருத்தரங்கச் சுருக்கம் எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல, வாசகர்களுக்கும் பயனுள்ளதாகும்.

மரபு வழிப் புதுமை இலக்கிய வளர்ச்சிக்கு 'இலங்கை எழுத்தாளன்' ஆக்கமும் ஊக்கமும் அளிப்பான் என்ற நம்பிக்கை தளிர்விடுகிறது.

— சங்கர்

## நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறலாம்...! ராஜ்...என்ன மௌனமாக இருக்கிறாய்...? எப்போது கண்டிக்குப் போகிறாய்?...'

'அடுத்த சனிக்கிழமை...! எனக்கு மனம் சரியாக வில்லை, பாலா! நான் வருகிறேன்...'

'ஒன்றிற்கும் கவலைப் படாதே, ராஜ்!...' என்று விடை கொடுக்கிறான், பாலா.

* * *

ராஜா வீட்டிற்குள் நுழைந்த போது, அண்ணி கேட்ட முதற் கேள்வி அவனைத் திடுக்கிட வைக்கிறது:

'யார் தம்பி, உமா?...' அண்ணி சர்வ சாதாரணமாகத்தான் கேட்கிறான். ஆனால். அவன் அக் கேள்வியை எதிர்பார்க்காததால் திக்குமுக்காடிப் போகிறான்.

— (தொடரும்)

கடைசி வாரம்!

கிங்ஸ்லி
[கொழும்பு]

பிளாஸா
[வெள்ளவத்தை]

மற்றும் 7 திரைகளில்

பி. எஸ். கிருஷ்ணகுமார்,
ஜெயஸ்ரீ, வி. தங்கவேல்,
மாஸ்டர் பிரகாஷ்
முத்துவேல்
மற்றும் பலர் நடித்த

ஸ்ரீ கணபதி பிக்சர்ஸ்

# தோட்டக்காரி

ஆவலோடு எதிர்பார்த்த அற்புதப் படைப்பு!

ஆரம்பம்: அக்டோபர் 11ம் திகதி வெள்ளிக்கிழமை



கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) — மொடர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்)

சிவாஜி கணேசன — எஸ். எஸ். ஆர்.
சந்திரபாபு—எம். என். ராஜம்
எல் விஜயலட்சுமி—எஸ். வி. சுப்பையா
குமாரி ரங்கராவ்—புஷ்பவல்லி
மற்றும் பலர் நடித்த

மு. வரதராசனுரின்

# பெற்ற மனம்

டைரக்ஷன்: ஏ. பீம்சிங் — இசையமைப்பு: எஸ். ராஜேஸ்வரராவ்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் [மருதானை] — ராணி [யாழ்ப்பாணம்] — ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] — ஓடியன் [கல்கிசை]
லிபர்ட்டி [பதுளை] — ஜோதி [திருகோணமலை] — சென்ட்ரல் [நாவலப்பிட்டி] — நியூஜோதி [இரத்தினபுரி]
ஓடியன் [கண்டி] — சென்ட்ரல் [பருத்தித்துறை] — லவினியா [நுவரெலியா]

பாய்ந்து வரும் புலியைத் தாக்குவதோடல்லாமல்
பகைமையும் சாடுகிறார் புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா,
எம். ஆர். ஆர். வாசு, எஸ். ஏ. அசோகன், பீ. கண்ணும்பா,
சாண்டோ சின்னப்ப தேவர்
மற்றும் பலர் நடித்த



# தாயைக் காத்த தனயன்



2வது வாரமா காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
வின்ஸர் (யாழ்ப்பாணம்) — இம்பீரியல் (மட்டக்களப்பு)
நெல்சன் (திருகோணமலை) — ரீகல் (கம்பளை)

*எஸ். எஸ். ராஜேந்திரன் *விஜயகுமாரி
*கல்யாண் குமார் * புஷ்பலதா
*பேபி சாந்தி *வி. கே. ராமசாமி
மற்றும் பலர் நடித்த

# நீங்காத நினைவு

வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

எல்பின்ஸ்டன்
ரெக்ஸி
மற்றும் பல திரைகளில்!

சி. எல். ஆனந்தன்,
சரஸ்வதி,
ஈ. வி. சரோஜா,
அசோகன்
மற்றும் பலர் நடித்த

# வீரத் திருமகன்

தீபாவளி இன் விருந்து!

ரீகல் — எல்பின்ஸ்டன் — ரெக்ஸி

# கொஞ்சும் சலங்கை



இப் பத்திரிகை ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் அக்டோபர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.